


தேவாரம் பெற்ற சிவாலயங்கள்

அமுதன் விளம்பர நிறுவனம்

உ

சிவபெருமான் பேரருள்






மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான
ஸ்ரீ கற்பகாம்பாள் சமேத
ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில்

சுக்கிரன் தலம், கஞ்சனூர்.

தேவஸ்தான பிரசாத விற்பனை நிலையம்



(அக்னீஸ்வரன் கேட்டரிங் சர்வீஸ்)

தங்களின் அனைத்து விதமான
இல்ல சுபநிகழ்ச்சிகளுக்கும்
ஆர்டரின் பேரில் சிறந்த முறையில்
அறுசுவை விருந்துகள் செய்து தருகிறோம்.

என்றும் இறைபணியில்

A. அசோகன் B.B.A.,
அக்னீஸ்வரன் கேட்டரிங் சர்வீஸ், கஞ்சனூர்
செல்: 9626229294, 8072905717

2-6

உ

திருச்சிற்றம்பலம்

குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே!

வாழ்வில் எல்லா வளமும், நலமும் பெற்றிட சென்று தரிசிக்க வேண்டிய

தேவாரம் பெற்ற சிவாலயங்கள்



ஆருத்ரா தரிசன சிறப்பு வெளியீடு

வெளியிடுவோர்

மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை, கும்பகோணம்.
அமுதன் விளம்பர நிறுவனம், கும்பகோணம்.

சிவாய நம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவேடு மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

நூல் தொகுப்பு & வடிவமைப்பு

த. சபாபதி
இதழாசிரியர், குடமுக்கு - இலவச இதழ்
33/17, நாகேஸ்வரன் சன்னதி தெரு, கும்பகோணம் - 612001.
Web: www.kudamookku.com

நூல் விபரப் பட்டியல்

நூல் பெயர்	: தேவாரம் பெற்ற சிவாலயங்கள்
ஆசிரியர்	: த. சப்பாபதி
உதவி ஆசிரியர்கள்	: இரா. அருண், வே. அம்பிகா, த. மதிவாணன்
மொழி	: தமிழ்
உரிமை	: ஆசிரியருக்கு
பதிப்பு	: முதல் பதிப்பு - ஜனவரி 2019
பக்கங்கள்	: 170 பக்கங்கள்
பிரதிகள்	: 3000
நூல் அளவு	: 1/8 டெம்மி
தாள்	: 13.7 கி.கி. வெள்ளைத் தாள்
எழுத்து	: 13 புள்ளி
நூல் வடிவமைப்பு	: **அமுதன் விளம்பர நிறுவனம்** 33/17, நாகேஸ்வரர் சன்னதி தெரு, கும்பகோணம் - 612001. செல் : 94430 28343 மெயில் : amudhanadvertising@gmail.com வெப் : www.amudhan.in
வெளியீடு & புத்தகம் கிடைக்குமிடம்	: **அமுதன் பதிப்பகம்** **மனிதவளம் & சுற்றுச்சூழல் மலர்ச்சி அறக்கட்டளை** கும்பகோணம் - 612001. செல் : 73057 70130 வாட்ஸ்அப் : 95975 28343 மெயில் : meetngo15@gmail.com வெப் : www.meetngo.in
அச்சகம்	: **P.G.K.** ஆர்ட்ஸ் 21, காசி விஸ்வநாதர் கோயில் கீழ வீதி, கும்பகோணம் - 612001. போன் : 0435 - 2420323
விலை	: ரூ. **50**/- மட்டும்

இந்த புத்தகத்திற்காக வழங்கப்படும் விலையானது எங்களது அடுத்து அடுத்து வெளியாக உள்ள புத்தகங்களுக்கு உறுதுணையாக இருக்கும். மேலும், எங்களால் இயன்ற சேவைகளைச் செய்வதற்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2-6

முன்னுரை

பாரத நாடு பழம்பெரும் நாடு. ஆன்மீகத்தின் தாயகம். மொழி, கலாச்சாரம், கலைகள், ஓவியம், நாகரீகம், பண்பாடு, ஒற்றுமை, மருத்துவம், விஞ்ஞானம், அறிவியல், வானியல், அரசியல், சாஸ்திரம் என அனைத்திலும் முன்னோடியாக விளங்கும் பெருமைக்குரியது. இவை அனைத்தையும் நம் முன்னோர்கள் ஆன்மீகத்தின் மூலமாகவே நமக்கு வழங்கியுள்ளனர். அதன் பொருட்டு எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளாய் விளங்குகின்ற இறைவனுக்கு அவர்கள் எழுப்பிய ஆலயங்கள் ஆயிரமாயிரம். இத்தகைய ஆலயங்களைப் போற்றிப்பாதுகாக்க வேண்டியது பாரத தேசத்தின் குடிமகன்களாகப் பிறந்த நம் ஒவ்வொருவரின் கடமையாகும். இத்தகைய விழிப்புணர்வை நம் வருங்கால சந்ததியருக்கும் கொண்டு செல்வதே எங்களின் நோக்கமாகும்.

இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற உணர்வு நம் ஒவ்வொருவருள்ளும் இருக்க வேண்டும். அத்தகைய எண்ணம் ஒழிந்து 'தான்' என்ற அகந்தைப் பெருக்கெடுப்பதே எண்ணற்ற பழிப் பாவங்களுக்கு ஆணி வேராகும். இதைக் கருத்தில் கொண்டு, 'விஞ்ஞான முன்னேற்றம்' என்ற மாயையான உலகில் மூழ்கிக் கிடக்கும் மனிதர்களை விழித்தெழச் செய்து, ஆன்மீக உணர்வை வெளிக்கொணர்வதற்கு ஒன்றுபடுவோம். அனைத்து இளைஞர்களையும் விழித்தெழச் செய்வோம். மொழிப்பற்று, தேசப்பற்று, இறை வழிபாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தினை எட்டுத்திக்கும் பரவச்செய்வோம்.

இறையருள் பெற்ற தாங்கள் ஒவ்வொருவரும், தங்கள் அருகாமையில் வசிக்கும் அனைவரும் அத்தகையப் பேரானந்தத்தைப் பெறச் செய்ய பாடுபடுவோம். தங்கள் குழந்தைகள், நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், சுற்றத்தார் அனைவரையும் ஆன்மீகப்பணியில் ஈடுபடுத்தி அவர்கள் அனைவரும் இறையருள் பெறத் துணைபுரிவோம். பாரத தேசத்தின் குடிமகனாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் அதன் பெருமைகளைப் போற்றிப்பாதுகாக்கப் பாடுபடுவோம்.

இவ்வாறாக இறைவனுக்கு தங்களால் இயன்ற தொண்டுகளைச் செய்து முக்தி அடைந்தவர்கள் பற்பலர். அவர்களை அடியார்கள் என்றும், தன்னையே இறைவன் 'அடியார்க்கும் அடியேன்' என்று போற்றக்கூடிய போற்றுதலுக்கும் உரியவர்கள். அவ்வாறாக ஊர் ஊராக நடந்தே சென்று இறைவன் உறையும் ஆலயங்களுக்குச் சென்று இறைவனைப் புகழ்ந்து தேவாரம் பாடிய சைவ சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரே தேவார மூவர் ஆவார்கள். அவர்கள் பதிகம் பாடிய கோயில்களே **தேவாரம் பெற்ற சிவாலயங்கள்** எனவும், நேரில் சென்று தரிசிக்காவிடிலும், அருகாமையில் உள்ள கோயில்களின் பெருமைகளையும், பெயரையும் அவர்கள் பதிகங்களுள் வைத்துப்பாடிய தலங்களே **வைப்புத்தலங்கள்** எனவும் அறியப்படுகிறது. அவ்வகையில் இந்தப் புத்தகத்தில் தேவாரம் பெற்ற சிவாலயங்களைப் பற்றிய தகவல் குறிப்புகளை மட்டும் வழங்கியுள்ளோம். எதிர் காலத்தில் இன்னும் விளக்கமாக எழுத உள்ளோம். இதனைப்படித்துப் பயன்பெறுவோர் **தங்கள் கடிதம் மூலம்** கருத்துக்களைத் தெரிவித்தீர்களேயானால் அதுவே எங்களுக்கு மிகப்பெரிய பாராட்டாகும். மேலும், எங்களுக்கு மிகப்பெரிய உற்சாகத்தை அளிக்கும்.



த. சபாபதி
ஆசிரியர்

புத்தகத்தின் சிறப்பம்சங்கள் :

- ★ திருவாவடுதுறை ஆதினத்தில் எண்ணம் தோன்றியது.
- ★ நடராசர் மீது பதிகம் பாடிய சிறப்புமிகு குடந்தைக்கீழ்க் கோட்டத்து கூத்தனார் பாதங்களில் ஆருத்ரா தரிசனம் அன்று சமர்ப்பிக்கப்பட்டது.
- ★ பெரும் நஷ்டங்களுக்குப் பிறகு நாங்கள் வெளியிடும் முதல் புத்தகம்.
- ★ தொடர்ந்து வெளிவர உள்ள பல புத்தகங்களுக்கான அடித்தளம்.
- ★ பல்வேறு புத்தகங்களிலிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டது.

விநாயகர் வழிபாடு



ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

குருவணக்கம்



தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

நால்வர் துதி



பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

திருஞானசம்பந்தர் பாடிய முதல் பாடல்



தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரால் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே!

திருநாவுக்கரசர் பாடிய முதல் பாடல்



கூற்றாயின வாறுவி லக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

சுந்தரர் பாடிய முதல் பாடல்



பித்தா! பிறை சூடி பெருமானே! அருளாளா!
எத்தால் மறவாதே நினைக்கின்றேன்? மனத்து உன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அத்தா! உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே?

1. அருள்மிகு நடராசர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 1 வது
இறைவன் : நடராசர், அம்பலக்கூத்தர், திருமூலநாதர்
இறைவி : சிவகாமி, சிவகாமசுந்தரி, உமையம்மை
தல தீர்த்தம் : சிவகங்கை, பிரம உள்பட 10 தீர்த்தங்கள்
தல விருட்சம் : தில்லை, ஆல்
புராணப் பெயர்: தில்லை

கோயில் எனும் சிறப்புப்பெயர் பெற்றது. நால்வரால் பாடல் பெற்றது. பஞ்சபூத தலங்களுள் ஆகாயத்தலம். பஞ்ச சபைகளுள் இது பொற்சபை. 108 திவ்யதேசங்களுள் திருச்சித்திரக் கூடம். தரிசிக்க முக்தி தலம்.சேந்தனார் வழிபட்ட தலம். பெரியபுராணம் அரங்கேறிய தலம். மாணிக்கவாசகர், பதஞ்சலி, உபமன்யு, வியாசர், வியாக்ரபாதர், திருநீலகண்டர், கணம்புள்ள நாயனார், திருநாளைப் போவார் முக்தி பெற்ற தலம். பன்னிரு திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட தலம்.

அருள்மிகு நடராசர் திருக்கோயில்
சிதம்பரம் அஞ்சல்,
சிதம்பரம் – 608 001
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04144-227171, 230251

கும்பகோணத்திலிருந்து சுமார் 80 கி.மீ. காஞ்சிபுரத்திலிருந்து சுமார் 200 கி.மீ. சென்னையிலிருந்து சுமார் 240 கி.மீ., திருச்சியிலிருந்து சுமார் 170 கி.மீ. மதுரையிலிருந்து சுமார் 297 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பெருநகரங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளது.

2. அருள்மிகு பாசுபதேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 2 வது
இறைவன் : பாசுபதநாதர் / பாசுபதேஸ்வரர்
இறைவி : நல்லநாயகி / சற்குணாம்பாள்
தல தீர்த்தம் : கிருபா தீர்த்தம்
தல விருட்சம் : மூங்கில்
புராணப் பெயர்: திருவேட்களம் / வேட்களம்

பாத தீட்சை அளித்து இறைவன் அர்ச்சுனனுக்கு பாசுபதம் அருளிய தலம். பாசுபதம் கையில் ஏந்தி கிராத மூர்த்தியாக உற்சவர். வைகாசி விசாகத்தில் பாசுபதம் அருளிய உற்சவம் சிறப்புடையது. தில்லையை தரிசிக்க வந்த திருஞானசம்பந்தர் சில காலம் தங்கியிருந்த தலம். அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடல் பெற்றது. இத்தலத்து இறைவனை வழிபடுவோர் வினைகள் யாவும் தொலைந்து விடும் என்பதை அப்பர் தேவாராத்தின் மூலம் அறியலாம்.

அருள்மிகு பாசுபதேஸ்வரர் திருக்-
கோயில், திருவேட்களம், அண்ணா-
மலை நகர், சிதம்பரம் – 608 002
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04144-238274, 98420 08291

கும்பகோணத்திலிருந்து 82 கி.மீ. திருச்சியிலிருந்து 172 கி.மீ. மதுரையிலிருந்து 299 கி.மீ. காஞ்சிபுரத்திலிருந்து 202 கி.மீ. சென்னையிலிருந்து 242 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ளது. சிதம்பரத்தை அடைந்து இத்தலத்தை அடையலாம்.

3. அருள்மிகு உச்சிநாதசுவாமி திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 3 வது
இறைவன் : உச்சிநாதர் / உச்சிநாதேஸ்வரர் / மத்யானேஸ்வரர்
இறைவி : கனகாம்பிகை
தல தீர்த்தம் : கிருபாசமுத்திரம்
தல விருட்சம் : நெல்லி
புராணப் பெயர்: நெல்வாயில்

திருஞானசம்பந்தருக்கு உச்சிகாலத்தில் உணவு அளித்துப் பசிபோக்கியதால் உச்சிநாதேஸ்வரர் என்று பெயர் பெற்றது. இத்தலத்து முருகப்பெருமானை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளார். கண்வ மகரிஷி வழிபட்ட திருத்தலம். சிவபுரி மான்மியம் என்ற தலவரலாறு பெற்ற திருத்தலம். அகத்திய மாமுனிக்கு திருமணக்கோலத்தில் காட்சியளித்தது. சிவன், பார்வதி திருவுருவங்கள் சிவலிங்கத்தின் பின்புறம் உள்ளது.

அருள்மிகு உச்சிநாதசுவாமி திருக்
கோயில், சிவபுரி அஞ்சல் - 608 001,
அண்ணாமலை நகர், சிதம்பரம்,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 098426 45580

கும்பகோணத்திலிருந்து 84 கி.மீ. திருச்சியிலிருந்து 174 கி.மீ. மதுரையிலிருந்து 301 கி.மீ. காஞ்சிபுரத்திலிருந்து 204 கி.மீ. சென்னையிலிருந்து 244 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரம், அண்ணாமலை நகர் சாலைக்கு வந்து, கவரப்பட்டு செல்லும் சாலையில் சென்று இக்கோயிலை அடையலாம்.

4. அருள்மிகு பால்வண்ணநாதர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 4 வது
இறைவன் : பால்வண்ணநாதர்
இறைவி : வேதநாயகி
தல தீர்த்தம் : கொள்ளிடம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: கழிப்பாலை / காரைமேடு

கபில முனிவர் வெண்ணிறமுடைய மணலால் செய்த சிவலிங்கம். குதிரை கால்குளம்பு பட்டு பிளந்த நிலையில் உள்ளதை இன்றும் காணலாம். சடைமுடி அள்ளிமுடிந்த கோலத்தில் நடராசர், தன் தோழிகளான விஜயா, சரஸ்வதியுடன் சிவகாமியம்மை. அருணகிரிநாதரால் திருப்புகழ் பெற்ற தலம். காசியில் உள்ளது போன்று நாய் வாகனம் இல்லாத பைரவர். வால்மீகி முனிவர் வழிபட்டது. அகத்தியருக்கு திருமணக்கோலக் காட்சியளித்த தலம்.

அருள்மிகு பால்வண்ணநாதர் திருக்-
கோயில், திருக்கழிப்பாலை, சிவபுரி
அஞ்சல் - 608 002, சிதம்பரம் வட்டம்,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364 - 235462

கும்பகோணத்திலிருந்து 84 கி.மீ. திருச்சியிலிருந்து 174 கி.மீ. மதுரையிலிருந்து 301 கி.மீ. காஞ்சிபுரத்திலிருந்து 204 கி.மீ. சென்னையிலிருந்து 244 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரம், அண்ணாமலை நகர் சாலைக்கு வந்து, கவரப்பட்டு செல்லும் சாலையில் சிவபுரிக்கு அடுத்து 1/2 கி.மீ. தொலைவில் உள்ள திருக்கோயில்.

5. அருள்மிகு சிவலோகத்தியாகேசர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 5 வது
இறைவன் : பெருமணமுடைய மகாதேவர் / சிவலோகத்தியாகேசர்
இறைவி : வெண்ணீற்று உமைநங்கை / சுவேதவிபூதிநாயகி
தல தீர்த்தம் : பஞ்சாட்சர தீர்த்தம் உள்பட 10 தீர்த்தங்கள்
தல விருட்சம் : மா மரம்
புராணப் பெயர்: நல்லூர்ப்பெருமணம் **சம்பந்தர் முக்தி தலம்**

காதலாகிக் கசிந்து என்ற நமசிவாய திருப்பதிகம் பாடி வைகாசி மூல நட்சத்திர நாளில் ஞானசம்பந்தர், தன் மங்கைநல்லாளுடன் திருமணக்கோலத்தில் திருநீலகண்ட யாழ்பாணர், முருக நாயனார், திருநீலக்கநாயனார், திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரோடும் ஜோதியில் கலந்த தலம். அம்மன் சன்னதியில் திருநீறு பிரசாதம். நல்லூர்ப்பெருமணம் எனப்படும் முக்திப் பதிகம் பாடியருளியது. பெண்கள் தாலி பாக்கியம் வேண்டி வழிபட வேண்டிய தலம்.

அருள்மிகு சிவலோகத்தியாகேசர் திருக்கோயில், ஆச்சாள்புரம் அஞ்சல்,
சீர்காழி வட்டம் - 609 101,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04364-277800, 96888 93953

சிதம்பரத்திலிருந்து சீர்காழி செல்லும் சாலையில் கொள்ளிடம் பாலத்தைக் கடந்து இடது புறம் செல்லும் சாலையில் சுமார் 8 கி.மீ. கடந்து சென்றால் இத்திருக்கோயிலை அடையலாம். சிதம்பரத்திலிருந்து சுமார் 17 கி.மீ., கும்பகோணத்திலிருந்து சுமார் 70 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது.

6. அருள்மிகு திருமேனியழகர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 6 வது
இறைவன் : திருமேனியழகர் / சோமசுந்தரர்
இறைவி : வடிவாம்பாள் / வடிவாம்பிகை
தல தீர்த்தம் : மயேந்திர தீர்த்தம்
தல விருட்சம் : கண்ட மரம், தாழை
புராணப் பெயர்: மயேந்திரப்பள்ளி

இந்திரன் (மகேந்திரன்) தன் சாபம் நீங்க இத்தல இறைவனை வழிபட்டதால் இத்திருத் தலம் மகேந்திரப்பள்ளி என்று பெயர் பெற்றது. அருணகிரிநாதரால் திருப்புகழ் பெற்றது. பங்குனி மாதத்தில் சூரியஒளி ஒரு வாரம் சிவலிங்கத்தின் மீது படுவது ஓர் தனிச்சிறப்பு. சூரியன், சந்திரன், பிரம்மா வழிபட்ட தலம். சம்பந்தர் இத்தல இறைவனை அழகர் என்று பாடியுள்ளார். நவகிரக சன்னதி இல்லை. பிரகாரத்தில் சண்டிகேஸ்வரர் தன் மனைவியுடன் அருளுகிறார்.

அருள்மிகு திருமேனியழகர் திருக்-கோயில், மகேந்திரப்பள்ளி - 609 101,
ஆச்சாள்புரம் வழி, சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04364 - 292309

சென்னையிலிருந்து 261 கி.மீ., திருச்சியிலிருந்து 181 கி.மீ., மதுரையிலிருந்து 316 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரத்திலிருந்து சுமார் 19 கி.மீ. சீர்காழியிலிருந்து சுமார் 22 கி.மீ. வைத்தீசுவரன்கோயிலிலிருந்து சுமார் 29 கி.மீ. ஆச்சாள்புரத்தினை அடைந்து 8 கி.மீ. தொலைவு சென்றால் தலத்தை அடையலாம்.

7. அருள்மிகு முல்லைவனநாதர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 7 வது
இறைவன் : யூதிகாபரமேஸ்வரர் / முல்லைவனேசுவரர்
இறைவி : அணிகொண்டகோதை / சத்யானந்த சௌந்தரி
தல தீர்த்தம் : சக்கர தீர்த்தம்
தல விருட்சம் : முல்லை
புராணப் பெயர்: தென்திருமுல்லைவாயில்

இத்தலத்து இறைவன் குருவாக இருந்து உமையம்மைக்கு பஞ்சாட்சர உபதேசம் அளித்து அருளியதால் இத்தலத்தில் பள்ளியறை, பள்ளியறை பூஜை கிடையாது. சூரிய, சந்திர கிரகணம், அமாவாசை காலங்களில் இத்தலத்தில் பஞ்சாட்சர மந்திரம் ஜபம் செய்வோர்க்கு மறுபிறவி கிடையாது. வாயு திசை கிணற்றில் கங்கை வாசம் செய்வதாக ஐதீகம். கிள்ளி வளவன் தன் அறியாமையால் வாளால் வெட்டப்பட்ட தழும்பு இறைவன் மீது இன்றும் காணலாம்.

அருள்மிகு முல்லைவனநாதர் திருக்கோயில், திருமுல்லைவாசல் அஞ்சல்,
சீர்காழி வட்டம் - 609 113,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 094863 39538

சென்னையிலிருந்து 268 கி.மீ., திருச்சியிலிருந்து 197 கி.மீ., மதுரையிலிருந்து 321 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரத்திலிருந்து சுமார் 30 கி.மீ. சீர்காழியிலிருந்து சுமார் 15 கி.மீ. ஆச்சாள்புரத்தினை அடைந்து முதலைமேடு வழியாகச் சென்றால் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

8. அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 8 வது
இறைவன் : சுந்தரேஸ்வரர் / வில்வவனநாதர்
இறைவி : சுந்தராம்பாள் / அழகம்மை
தல தீர்த்தம் : சந்திர தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: கலிக்காமூர், அன்னப்பன்பேட்டை

கலி (துன்பம்) நீக்கும் சிவன் வீற்றிருப்பதால் கலிக்காமூர் என்று பெயர். பராசர முனிவர் தன் தந்தையை அழித்த உதிரன் என்ற அரக்கனை அழித்த சாபம் நீங்கப்பெற்ற தலம். கடலில் மீன் பிடிக்க சென்ற ஒருவர் தன் வலையில் கிடைத்த அம்மன் சிலையை இத் தலத்தில் பிரதிஷ்டை செய்து வயிற்று வலி நீங்கப்பெற்றார். கடலில் கிடைக்கப்பெற்ற அம்மன் என்பதால் ஆண்டுதோறும் மாசி மாதம் அம்பிகை மட்டும் தனித்து கடலுக்கு சென்று தீர்த்தமாடுவது சிறப்பு.

அ/மி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்,
அன்னப்பன்பேட்டை, தென்னாம்-
பட்டினம் - 609 106, சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 04364 - 292179, 93605 77673

சென்னையிலிருந்து 272 கி.மீ., திருச்சியிலிருந்து 200 கி.மீ., மதுரையிலிருந்து 327கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சீர்காழி - திருவெண்காடு சாலையில் சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ள மங்கைமடத்தை அடைந்து, அங்கிருந்து கோணையாம்பட்டினம் வழியாக அன்னப்பன்பேட்டையை சென்றடையலாம்.

9. அருள்மிகு சாயாவனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 9 வது
இறைவன் : சாயாவனேஸ்வரர் / இரத்தினச்சாயவனேஸ்வரர்
இறைவி : குயிலினும் இனிமொழியம்மை / கோஷாம்பாள்
தல தீர்த்தம் : காவிரி, ஐராவத தீர்த்தம்
தல விருட்சம் : பைஞ்சாய் (கோரைப்புல்)
புராணப் பெயர்: சாய்க்காடு **இயற்பகை நாயனார் முக்தி தலம்**

காசிக்கு நிகரான தலங்களுள் ஒன்று. இயற்பகை நாயனார் பிறந்து, வளர்ந்து முக்தி யடைந்த தலம். கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில்களுள் ஒன்று. முருகன் 4 திருக்கரங்களில் வில், அம்பு, கோதண்டம், கொடியுடனும் காலில் வீரகண்டமணி அணிந்துள்ள கோலம். இந்திரன் தாய் அதித்யுடன், ஐராவதம் வழிபட்ட தலம். பைஞ்சாய் எனும் புல் காடாக இருந்ததாலும், ஆதிசேஷன் நாகமணி ஒளி வீசியதாலும் இப்பெயர்.

அருள்மிகு சாயாவனேஸ்வரர் திருக்-கோயில், சாயாவனம், பூம்புகார்,
சீர்காழி வட்டம் - 609 105,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-260151, 94431 07069

சென்னையிலிருந்து 275 கி.மீ., திருச்சியிலிருந்து 204 கி.மீ., மதுரையிலிருந்து 330கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சீர்காழி - பூம்புகார் சாலையில் 15 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து சுமார் 58 கி.மீ., தொலைவில் உள்ளது. திருவெண்காட்டிற்கு அடுத்து அமைந்துள்ள தலம்.

10. அருள்மிகு பல்லவனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 10 வது
இறைவன் : பல்லவனேஸ்வரர்
இறைவி : சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : காவிரி, ஜானவி தீர்த்தம்
தல விருட்சம் : மல்லிகை, புன்னை
புராணப் பெயர்: பல்லவனீச்சுரம், காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார்

சிலப்பதிகாரம் தொடங்கிய தலம்

பட்டினத்தார், இயற்பகை நாயனார் அவதரித்த தலம். சிலப்பதிகாரம் தொடங்கிய தலம். பல்லவ மன்னன் வழிபட்ட தலம். ஆடிமாதம் பட்டினத்தாருக்கு 12 நாள் திருவிழா சிறப்பானது. ஐந்து நிலை இராஜகோபுரம். இத்தலத்திற்கு அருகில் காவிரி நதி வங்காள விரிகுடா கடலுடன் சங்கமிக்கிறது. காலவ மகரிஷி வழிபட்ட தலம். பட்டினத்தார் சன்னதி அவரது குடும்பத்தினர் சிற்பம் காணலாம். உள் மண்டபத்தில் சிதம்பரம் போன்றே சபாபதி சபை தரிசிக்கத்தக்கது.

அருள்மிகு பல்லவனேஸ்வரர்
திருக்கோயில், பூம்புகார் அஞ்சல் -
609 105, சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364 - 260594

சென்னையிலிருந்து 275 கி.மீ., திருச்சியிலிருந்து 203 கி.மீ., மதுரையிலிருந்து 330கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து சுமார் 60 கி.மீ. நாகப்பட்டினத்திலிருந்து சுமார் 56 கி.மீ. தொலைவில் உள்ளது. சிதம்பரம் - பூம்புகார் சாலை சாயாவனத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

11. அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 11 வது
இறைவன் : வெண்காட்டுநாதர், அகோரர், நடராசர்
இறைவி : பிரமவித்யாம்பிகை, துர்க்கை, காளி
தல தீர்த்தம் : அக்கினி, சூரியன், சந்திரன்
தல விருட்சம் : வட ஆல், கொன்றை, வில்வம்
புராணப் பெயர்: வெண்காடு **புதன் தலம்**


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

மூர்த்தி, அம்பாள், விருட்சம், தீர்த்தம் அனைத்தும் மூன்று அமையப்பெற்ற தலம். பிள்ளைப்பேறு அளிக்கவல்ல தலம். நவக்கிரகங்களில் புதனுக்கான தலம். முள் இல்லாத வில்வ மரம். அகோரமூர்த்தி அற்புதக் காட்சி. இரவு 10 மணிக்கு மேல் அகோர மூர்த்தி சிறப்பு பூஜை. நடராஜர் சன்னதி அருகில் விஷ்ணு. ஆதிசிதம்பரம் எனப்படுவது. நந்திதேவர் உடலில் ஒன்பது துவாரங்கள். 9 தாண்டவங்கள் புரிந்த தலம். சிதம்பர இரகசியம் உள்ளது.

அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர்
திருக்கோயில், திருவெண்காடு,
சீர்காழி வட்டம் – 609 114,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364–256424, 99435 27792

சென்னையிலிருந்து 273 கி.மீ., திருச்சியிலிருந்து 201 கி.மீ., மதுரையிலிருந்து 328 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சீர்காழி – மங்கைமடம் வழியில் சுமார் 12 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து சுமார் 55 கி.மீ., தொலைவில் உள்ளது. பூம்புகாரிலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது.

12. அருள்மிகு ஆரண்ய சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 12 வது
இறைவன் : ஆரண்ய சுந்தரேஸ்வரர்
இறைவி : அகிலாண்டநாயகி
தல தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்
தல விருட்சம் : பன்னீர் மரம்
புராணப் பெயர்: கீழைத்திருக்காட்டுப்பள்ளி


சம்பந்தர்

ஆரண்ய முனிவர் வழிபட்ட தலம். சதுர ஆவுடையார். தச லிங்க சன்னதியில் ஒரு லிங்கத்தில் இரண்டு பாணம் இருப்பது தனிச்சிறப்பு. விருத்திராச்சுரனைக் கொன்ற பழி நீங்க இந்திரன் வழிபட்ட தலம். 6 சீடர்களுடன் தெட்சிணாமூர்த்தி. நண்டு விநாயகர் தனிச் சிறப்பு. இவர் பீடத்தில் நண்டு இருப்பதைக் காணலாம். நவக்கிரக சன்னதி இல்லை. ஆரண்ய முனிவர் சிவனை பூஜை செய்யும் சிற்பம். பிரம்மேசர், முனியீசர் என்ற 2 சிவ லிங்கங்கள்.

அருள்மிகு ஆரண்ய சுந்தரேஸ்வரர்
திருக்கோயில், கீழைத்திருக்காட்டுப்பள்ளி
திருவெண்காடு – 609 114, சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364 – 256273

சென்னையிலிருந்து 275 கி.மீ., திருச்சியிலிருந்து 203 கி.மீ., மதுரையிலிருந்து 330 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. திருவெண்காட்டிலிருந்து இளையமுதுகுளபுரம் சாலையில் அமைந்துள்ளது. சீர்காழி – தரங்கம்பாடி சாலையில் அல்லிவிளாகம் வழியே இளையமுதுகுளபுரத்தை கடந்து இங்கு வரலாம்.

13. அருள்மிகு வெள்ளடையீஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 13 வது
இறைவன் : வெள்ளடைநாதர் / சுவேதரிஷபேஸ்வரர்
இறைவி : காவியங்கண்ணி / நீலோத்பலவிசாலாட்சி
தல தீர்த்தம் : பால் கிணறு
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: குருகாவூர் / திருக்கடாவூர்

சுந்தரருக்கு இறைவன் கட்டமுதும், நீரும் தந்து பசிபோக்கிய தலம். கோயிலில் முதலாம் குலோத்துங்கன், இராஜேந்திரன், விக்கிரம சோழர்கள் கல்வெட்டுக்கள் உள்ளது. சம்பந்தர் நீராடிய பால் கிணறு. தை அமாவாசை அன்று இறைவன் பால்கிணற்றில் தீர்த்தம் கொடுக்கும் நேரத்தில் கிணற்று நீர் பால் நிறமாக மாறும் அதிசயம். சித்திரா பௌர்ணமியில் அன்னமிடும் விழா. சதுர ஆவுடையார். சிவனை வேண்ட அன்னத்திற்கு குறைவில்லா நிலை அடையலாம்.

அருள்மிகு வெள்ளடையீஸ்வரர்
திருக்கோயில், திருக்கடாவூர், வடகால்
அஞ்சல், சீர்காழி வட்டம் – 609 115,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 92456 12705, 99654 26748

சென்னையிலிருந்து 320 கி.மீ., திருச்சியிலிருந்து 198 கி.மீ., மதுரையிலிருந்து 325 கி.மீ., கும்பகோணத்திற்கு 52 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சீர்காழி – தென் திருமுல்லைவாயில் செல்லும் வழியில் சுமார் 6.5 கி.மீ. தொலைவில் வடகால் எனும் ஊருக்கு வலப்பக்கம் சாலையில் சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

14. அருள்மிகு பிரமபுரீஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 14 வது
இறைவன் : தோணியப்பர் / பிரமபுரீஸ்வரர் / சட்டைநாதர்
இறைவி : திருநிலைநாயகி / பெரியநாயகி
தல தீர்த்தம் : பிரம தீர்த்தம் உள்பட 21 தீர்த்தங்கள்
தல விருட்சம் : பாரிஜாதம் **சம்பந்தர் அவதாரத் தலம்**
புராணப் பெயர்: சீகாழி / தோணிபுரம் / பிரமபுரம் / புகலி...

திருஞானசம்பந்தர் அவதார தலம். நாவுக்கரசர் சம்பந்தரின் நட்பைப் பெற்று அப்பர் எனப் பெயர் பெற்ற தலம். சித்திரைப் பெருவிழாவில் திருமுலைப்பால் உற்சவம். கண நாத நாயனார் அவதரித்த பதி. குருவாக தோணியப்பர், இலிங்கமாக பிரமபுரீஸ்வரர், சங்கம வடிவாக சட்டை நாதர் உள்ள ஒரே தலம். பிரமன் முதலாய் எண்ணற்ற பலரும் வழிபட்ட, பாடிய தலம். அஷ்ட பைரவர். கட்டு மலை மீது தோணியில் மிகப்பெரிய சுதையாலான தோணியப்பர்.

அருள்மிகு பிரமபுரீஸ்வரர் திருக்கோயில்,
சீர்காழி அஞ்சல் – 609 110,
சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04364 – 270235

சென்னையிலிருந்து 260 கி.மீ., திருச்சியிலிருந்து 190 கி.மீ., மதுரையிலிருந்து 320 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரத்திலிருந்து சுமார் 20 கி.மீ. கும்பகோணத்திலிருந்து சுமார் 58 கி.மீ. காட்டுமன்னார்கோயிலிலிருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

15. அருள்மிகு சப்தபுரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 15 வது
இறைவன் : தாளேசுவரர் / சப்தபுரீஸ்வரர்
இறைவி : ஓசைக்கொடுத்த நாயகி / தொனிப்ரதாம்பாள்
தல தீர்த்தம் : ஆனந்த தீர்த்தம்
தல விருட்சம் : கொன்றை
புராணப் பெயர்: கோலக்கா

திருஞானசம்பந்தரின் யாத்திரையில் இதுவே முதல் தலமாகும். கைக்கொட்டிப் பாடிய சம்பந்தருக்கு இறைவன், திருவைந்தெழுத்து மந்திரம் பொறித்த பொன்னாலான தாளம் வழங்க, அதற்கு இறைவி தெய்வீக ஓசையளித்த தலம். பேசாமல் இருந்த தன் பிள்ளையைப் பேச வைத்தமைக்காக தாய் ஒருத்தி கொடுத்த பொற்றாளம் கோயிலில் உள்ளது. சீர்காழி திருமுலைப் பால் உற்சவம் நடக்கும் நேரத்தில் இங்கு தாளம் வழங்கும் ஐதீகவிழா நடைபெறும்.

அருள்மிகு சப்தபுரீஸ்வரர் திருக்கோயில்
திருக்கோலக்கா, சீர்காழி அஞ்சல்,
சீர்காழி வட்டம் - 609 110,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-274175, 98430 11264

சென்னையிலிருந்து 245 கி.மீ., திருச்சியிலிருந்து 172 கி.மீ., மதுரையிலிருந்து 398 கி.மீ., கும்பகோணத்திற்கு 61 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சீர்காழியிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

16. அருள்மிகு வைத்தியநாதர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 16 வது
இறைவன் : வைத்தியநாதர்
இறைவி : தையல்நாயகி
தல தீர்த்தம் : சித்தாமிர்த தீர்த்தம்
தல விருட்சம் : வேம்பு
புராணப் பெயர்: புள்ளிருக்குவேளூர், வைத்தீஸ்வரன்கோயில்

செவ்வாய் தலம்

புள் (ஜடாயு,சம்பாதி), ரிக் வேதம்,வேள் (முருகன்), ஊர்(சூரியன்) வழிபட்டதால் இப்பெயர். நவக்கிரகங்களில் செவ்வாய் தலம். நோய்நீக்கும் சித்தாமிர்த தீர்த்தம். இறைவன், இறைவி வைத்தியராக பிறவிப்பிணி, 4448 உடற்பிணியை தீர்க்கும் தலம். நேத்திரப் பிடி சந்தனம், திருச்சாந்துருண்டை பிரசாதம் எல்லா நோய்களும் தீர்க்க வல்லது. முருகன் செல்வ முத்துக்குமார சுவாமி. சூரபத்மனை அழிக்க முருகன் வேல் பெற்ற தலம். சடாயு குண்டம்.

அருள்மிகு வைத்தியநாதர் திருக்கோயில்,
வைத்தீஸ்வரன்கோயில் அஞ்சல் -
609 117, சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364 - 279423, 9843544292

சென்னையிலிருந்து 270 கி.மீ., திருச்சியிலிருந்து 197 கி.மீ., மதுரையிலிருந்து 325 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரத்திலிருந்து சுமார் 28 கி.மீ. கும்பகோணத்திலிருந்து சுமார் 49 கி.மீ. சீர்காழியிலிருந்து சுமார் 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

17. அருள்மிகு கண்ணாயிரமுடையார் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 17 வது
இறைவன் : கண்ணாயிரமுடையார் / சஹஸ்ரநேத்ரேஸ்வரர்
இறைவி : முருகுவளர்கோதை / சுகுந்தகுந்தளாம்பிகை
தல தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
தல விருட்சம் : சரக்கொன்றை
புராணப் பெயர்: கண்ணார்கோயில் / குறுமாணக்குடி

மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்ட வாமனமூர்த்தியாகிய குறுமாணி வழிபட்ட தலம். இந்திரனுக்கு ஏற்பட்ட சாபம் நீக்கி உடல் முழுதும் கண்களாக மாற்றி இறைவன் ஏற்றுக்கொண்ட தலம். ஆகவே கண்ணாயிரமுடையார் என்று பெயர். இறைவன் திருமேனி முழுதும் கண்கள் போன்ற தழும்புகள் உள்ளது. அம்மன் சன்னதிக்கு மேல் 12 இராசிகளும் செதுக்கப்பட்டுள்ளன. திருமணத் தடை நீங்க வழிபட வேண்டிய சிறப்புத் தலம்.

அ/மி கண்ணாயிரநாதர் திருக்கோயில்,
குறுமாணக்குடி, கொண்டத்தூர் அஞ்சல்,
தரங்கம்பாடி வட்டம் – 609 117,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 92457 36552

சென்னையிலிருந்து 265 கி.மீ., திருச்சியிலிருந்து 192 கி.மீ., மதுரையிலிருந்து 319 கி.மீ., கும்பகோணத்திற்கு 43 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வைத்தீஸ்வரன் கோயில் – மயிலாடுதுறை சாலையில் உள்ள பாகசாலை எனும் ஊருக்கு இடதுபுற சாலையில் சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

18. அருள்மிகு கடைமுடிநாதர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 18 வது
இறைவன் : கடைமுடிநாதர் / அந்திசம்ரட்சணீஸ்வரர்
இறைவி : அபிராமி
தல தீர்த்தம் : கருணா தீர்த்தம்
தல விருட்சம் : கிளுவை மரம்
புராணப் பெயர்: கடைமுடி

மேற்கு பார்த்து அமைந்த தலம். காவிரி இத்தலத்தில் மேற்கு நோக்கி ஓடுவது சிறப்பு. வளையம் அணிந்த தட்சணாமூர்த்தி. 16 பட்டைகள் கொண்ட சோடஷலிங்கம். உலகம் அழியும் இறுதிக்காலத்திலும் காப்பவராக இத்தலத்து இறைவன் அருள்புரிகிறார். திருமணத்தடை உள்ள பெண்கள் இத்தல இறைவிக்கு தாலி கட்டி பிரார்த்தனை செய்கின்றனர். எண்கோண வடிவிலுள்ள ஆவுடையார் மீது நவ கிரகங்கள் முன்னும் பின்னுமாக இருப்பது தனிச்சிறப்பு.

அருள்மிகு கடைமுடிநாதர் திருக்கோயில்,
கீழையூர் அஞ்சல் – 609 304,
தரங்கம்பாடி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-283261, 94427 79580

சென்னையிலிருந்து 265 கி.மீ., திருச்சியிலிருந்து 192 கி.மீ., மதுரையிலிருந்து 320 கி.மீ., சிதம்பரத்திலிருந்து சுமார் 28 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 64 கி.மீ. தொலைவில் உள்ளது. சீர்காழி – காரைக்கால் சாலையில் சுமார் 8 கி.மீ. தொலைவில் காத்திருப்பு எனும் இடத்திற்கு வலப்பக்க சாலையில் 8 கி.மீ. தொலைவில் உள்ளது.

19. அருள்மிகு மகாலட்சுமீசர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 19 வது
இறைவன் : மகாலட்சுமீசர் / லட்சுமிபுரீஸ்வரர்
இறைவி : லோகநாயகி
தல தீர்த்தம் : இலட்சுமி தீர்த்தம்
தல விருட்சம் : விளா மரம்
புராணப் பெயர்: நின்றயூர் / திருநின்றியூர்

கோச்செங்கணான் கட்டிய மாடக்கோயில்களுள் ஒன்று. கொடிமரம் இல்லை. பரசுராமர் வழிபட்ட லிங்கம். வலதுபுறம் திரும்பிய மயில் வாகனத்தில் முருகன். சோழ மன்னன் காட்டு வழிச் செல்ல தீப்பந்தம் திரி நின்று இறைவன் இருப்பதை உணர்த்திய தலம். ஆலயம் எழுப்ப குழி தோண்டியபோது இறைவன் மீது பட்ட கோடரி தழும்பை இறைவன் மீது இன்றும் காணலாம். இந்திரன், அகத்தியர், ஐராவதம், பசு, சோழ மன்னர்கள் பலரும் வழிபட்ட தலம்.

அருள்மிகு மகாலட்சுமீசர் திருக்கோயில்,
திருநின்றியூர் அஞ்சல், குறுமாணக்குடி,
மயிலாடுதுறை வட்டம் – 609 118,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04364-320520

சென்னையிலிருந்து 247 கி.மீ., திருச்சியிலிருந்து 143 கி.மீ., மதுரையிலிருந்து 277 கி.மீ., கும்பகோணத்திலிருந்து சுமார் 42 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வைத்தீஸ்வரன்கோயிலிருந்து சுமார் 7 கி.மீ. மயிலாடுதுறை-வைத்தீஸ்வரன் கோயில் சாலையில் சுமார் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

20. அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 20 வது
இறைவன் : சிவலோகநாதர்
இறைவி : சொக்கநாயகி
தல தீர்த்தம் : கணபதி தீர்த்தம்
தல விருட்சம் : புங்கன் மரம்
புராணப் பெயர்: புன்கூர் / திருப்புன்கூர்

விநாயகர் துணையோடு நந்தனார் வெட்டிய குளம். நந்தனார் வணங்குவதற்காக நந்தி சற்று விலகிய தலம். ஏயர்கோன் கலிக்காமர், சுந்தரருடன் தரிசித்த தலம். சோமாஸ் கந்தர் பெரிய திருமேனி தனிச்சிறப்பு. சூரியன், அக்னி வழிபட்ட லிங்கங்கள். நடராசர் சபையில் தேவர் ஒருவர் 4 கரங்களால் பஞ்சமுக வாத்தியம் இசைப்பது சிறப்பு. மூலவர் புற்றுமண். சுந்தரர் பாட மழை பொழியவும், நிற்கவும் 24 வேலி நிலம் இராஜேந்திரசோழன் வழங்கினான்.

அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில்,
திருப்புன்கூர் அஞ்சல் – 609 112,
சீர்காழி வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04364-279784, 94867 17634

சென்னையிலிருந்து 244 கி.மீ., திருச்சியிலிருந்து 140 கி.மீ., மதுரையிலிருந்து 274 கி.மீ., சிதம்பரத்திலிருந்து சுமார் 30 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 53 கி.மீ. தொலைவில் உள்ளது. வைத்தீஸ்வரன்கோயிலிலிருந்து திருப்பனந்தாள் செல்லும் சாலையில் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

21. அருள்மிகு அருள்சோமநாதேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 21 வது
இறைவன் : அருள்சோமநாதேஸ்வரர்
இறைவி : ஆதித்ய அபயாம்பிகை, வேதநாயகி,
தல தீர்த்தம் : செங்கழுநீர் தீர்த்தம்
தல விருட்சம் : மகிழ மரம்
புராணப் பெயர்: நீடூர் / திருநீடூர்

முனையடுவார் நாயனார் முக்தி தலம்

ஊழிக்காலத்தும் இத்தலம் அழியாது நீடித்திருக்குமாதலின் இப்பெயர். கிருத யுகத்தில் இந்திரன், திரேதா யுகத்தில் சூரியன், துவாபர யுகத்தில் பத்ரகாளி, கலியுகத்தில் நண்டு பூசித்து பேறு பெற்ற தலம். முனையடுவார் நாயனார் அவதாரம் மற்றும் முக்தி தலம். இந்திரனால் காவிரி மண்பிடித்து செய்யப் பட்ட சிவலிங்கத் திருமேனியில் நண்டு பூசித்த கால் சுவடு. மன்னர்கள் பலரும் திருப்பணி செய்துள்ளனர். சேக்கீழார் உள்ளிட்ட பலரது பாடல்கள் பெற்ற தலம்.

அருள்மிகு அருள்சோமநாதேஸ்வரர்
திருக்கோயில், திருநீடூர் அஞ்சல்,
மயிலாடுதுறை வட்டம் – 609 203,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04364–250142

சென்னையிலிருந்து 310 கி.மீ., திருச்சியிலிருந்து 125 கி.மீ., மதுரையிலிருந்து 260 கி.மீ., கும்பகோணத்திற்கு 39 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை – மணல்மேடு சாலையில் சுமார் 8 கி.மீ. தொலைவிலுள்ளது. திருப்பனந்தாள் சாலை யில் பட்டவர்த்தி ஊரின் இடதுபுறம் மயிலாடுதுறை சாலையில் சென்றும் அடையலாம்

22. அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 22 வது
இறைவன் : ஆபத்சகாயேஸ்வரர் / அக்னீஸ்வரர்
இறைவி : பிருகந்நாயகி / பெரியநாயகி
தல தீர்த்தம் : வருண, அக்னி தீர்த்தங்கள்
தல விருட்சம் : எலுமிச்சை மரம்
புராணப் பெயர்: அன்னியூர் / திருஅன்னியூர் / பொன்னூர்

லிகுசாரண்யம், பாஸ்கர ஷேத்திரம், பானு ஷேத்திரம் என்றும் பெயர். வருணன், அக்னி. சூரியன், ரதி, பஞ்சபாண்டவர்கள் முதலானோர் வழிபட்ட தலம். தீராத வெண்குஷ்டத்தால் பாதிக்கப்பட்ட ஹரிச்சந்திர மகாராஜா இங்கு நீராடி, வைகாசி விசாக தினத்தில் தயிர் சாதம் நிவேதனம் செய்து விமோசனம் பெற்றார். பங்குனி 25-29 ஐந்து நாட்கள் சூரியக் கதிர் இறைவன் மீது படும். வட்ட வடிவான காதணி அணிந்த கோலத்தில் முருகப்பெருமான் சிறப்பு.

ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்
பொன்னூர், பாண்டூர் – 609 203,
நீடூர் வழி, மயிலாடுதுறை வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04364–279784, 94867 17634

சென்னையிலிருந்து 307 கி.மீ., திருச்சியிலிருந்து 125 கி.மீ., மதுரையிலிருந்து 257 கி.மீ., சீர்காழியிலிருந்து சுமார் 28 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 36 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறை – கும்பகோணம் சாலையில் மூவலூர் வந்து அங்கிருந்து மணல்மேடு செல்லும் சாலையில் சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

23. அருள்மிகு கல்யாணசுந்தரேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 23 வது
இறைவன் : கல்யாணசுந்தரேஸ்வரர்/மணவாளேஸ்வரர்
இறைவி : பரிமளசுகந்தநாயகி / நறுஞ்சாந்து நாயகி
தல தீர்த்தம் : கௌதகாபந்தனம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: வேள்விக்குடி / திருவேள்விக்குடி

சிவபெருமானின் திருமணவேள்வி, கங்கணதாரணம் நடைபெற்ற தலம். நீண்டநாள் திருமணமாகாதவர்கள் வழிபட வேண்டிய தலம். இத்தலத்து அர்த்தநாரீஸ்வரர் சிலா உருவில் அம்பாள் வலதுபுறமும், இறைவன் இடதுபுறமும் உள்ளது தனிச்சிறப்பாகும். இறைவனின் திருமணத்தலம் ஆதலால் நவக்கிரகங்கள் கிடையாது. அதற்கு பதில் ஈசனே ஈசான்ய மூலையில் அருள்புரிகிறார். இராஜஇராஜன், செம்பியன் மாதேவி, பராக்கிரமசோழ கல்வெட்டுக்கள்.

கல்யாணசுந்தரேஸ்வரர் திருக்கோயில்
திருவேள்விக்குடி, குத்தாலம் அஞ்சல்,
மயிலாடுதுறை வட்டம் - 609 203,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-235462, 9942239089

சென்னையிலிருந்து 329 கி.மீ., திருச்சியிலிருந்து 147 கி.மீ., மதுரையிலிருந்து 279 கி.மீ., கும்பகோணத்திற்கு 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் குத்தாலம் வந்து, பிறகு பந்தநல்லூர் சாலையில் 6 கி.மீ. வந்து, மகாராஜபுரம் சாலையில் சுமார் 2கி.மீ. தொலைவு சென்றால் கோயில் வரும்.

24. அருள்மிகு ஐராவதேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 24 வது
இறைவன் : ஐராவதேஸ்வரர் / மத்யானேஸ்வரர்
இறைவி : சுகுந்தகுந்தளாம்பிகை / மலர்க்குழல்மாதம்மை
தல தீர்த்தம் : ஐராவத தீர்த்தம்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: எதிர்கொள்பாடி / மேலைத்திருமணஞ்சேரி

திருவேள்விக்குடியில் திருமணம் செய்துகொண்டு வந்த தன் அடியவனை இறைவன் எதிர்கொண்டு அம்மானைப்போல வரவேற்ற தலம். ஐராவதம் வழிபட்ட தலமாதலால் யானை சுற்றும் அளவிலான கர்ப்பக்கிரகம். மகளைப்பெற்றோர் நல்ல வரன் அமைய வழிபட வேண்டிய தலம். மாப்பிள்ளை வீட்டாருடன் ஏற்பட்ட மனக்கசப்பு நீங்க, மருமகன் திருந்த பெண் வீட்டார் வழிபட வேண்டிய தலம். ஞானசரஸ்வதி சன்னதி சிறப்பு. பரத்வாஜ முனிவர் வழிபட்ட தலம்.

அருள்மிகு ஐராவதேஸ்வரர் திருக்கோயில்
மேலைத்திருமணஞ்சேரி, திருமணஞ்சேரி
- 609 813, மயிலாடுதுறை வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-279784, 94867 17634

சென்னையிலிருந்து 331 கி.மீ., திருச்சியிலிருந்து 149 கி.மீ., மதுரையிலிருந்து 281 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் குத்தாலம் வந்து அஞ்சார்வார்த்தலை எனும் ஊரில் வாய்க்கால் பாலம் தாண்டி வலப்புறம் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

25. அருள்மிகு அருள்வள்ளல்நாதர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 25 வது
இறைவன் : அருள்வள்ளல்நாதர் / உத்வாகநாதர்
இறைவி : கோகிலாம்பாள் / யாழின்மென்மொழியம்மை
தல தீர்த்தம் : சப்தசாகர தீர்த்தம்
தல விருட்சம் : கருஊமத்தை
புராணப் பெயர்: திருமணஞ்சேரி / கீழைத்திருமணஞ்சேரி

இறைவன், உமாதேவியைத் திருமணம் செய்து கொண்ட தலம். திருமணத்தடை, புத்திர தோஷம், இராகு தோஷம் உள்ளவர்கள் வழிபட்டு நிவர்த்தி அடையவேண்டிய தலம். கோகிலாம்பாள் திருமணப்பெண் போன்று அருட்காட்சி தருகிறாள். மன்மதன் சாபம் நீங்கிய தலம். ஆமை பூசித்து மனித உருப்பெற்றதலம். கல்யாண சுந்தரர் கைகோர்த்தபடி திருமணக் கோலத்தில் அருள் பாலிக்கிறார். திருமணத்தடை நீக்கும் தலம். நவக்கிரகங்கள் கிடையாது.

அருள்மிகு அருள்வள்ளல்நாதர்
திருக்கோயில்,திருமணஞ்சேரி அஞ்சல்
மயிலாடுதுறை வட்டம் - 609 813,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-235002

சென்னையிலிருந்து 332 கி.மீ., திருச்சியிலிருந்து 150 கி.மீ., மதுரையிலிருந்து 282 கி.மீ., கும்பகோணத்திற்கு 28 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில், குத்தாலம் வந்து அங்கிருந்து இத்தலத்தை எளிதில் அடையலாம். எதிர்கொள்பாடியிலிருந்து 0.5 கி.மீ. தொலைவில் உள்ளது.

26. அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 26 வது
இறைவன் : வீரட்டேஸ்வரர்
இறைவி : ஞானாம்பிகை
தல தீர்த்தம் : சூல தீர்த்தம்
தல விருட்சம் : கடுக்கா மரம்
புராணப் பெயர்: திருக்குறுக்கை

அட்டவீரட்டானத்தலங்களுள் மன்மதனை எரித்த தலம். நடராஜ சபைக்கு காமனங்கநாசனி சபை, சம்பு விநோத சபை என்ற பெயர்கள். காமன் எரிந்த அம்பு களுள் ஒன்றான தாமரை பதிந்துள்ள அடையாளம் சுவாமி பீடத்தின் நடுவில் உள்ளது. ரதி, மன்மதன் சிற்பங்கள். காமதகன மூர்த்தி சன்னதி. குறுக்கை விநாயகர். ராஜகோபுரத்தில் பன்றி, யானை, மனித, நரசிம்ம உருவில் ஒரு சிலை. கோயில் அருகில் மணல் விபூதியாக விபூதிக்குட்டை

அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்
கொருக்கை, நீடூர் அஞ்சல்,
மயிலாடுதுறை வட்டம் - 609 203,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-203678, 94435 27044

சென்னையிலிருந்து 326 கி.மீ, திருச்சியிலிருந்து 133 கி.மீ, மதுரையிலிருந்து 264 கி.மீ, கும்பகோணத்திலிருந்து சுமார் 46 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறை - மணல்மேடு சாலையில் நீடூர் தாண்டி கொண்டல் வந்து இடதுபுறம் செல்லும் சாலையில் சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

27. அருள்மிகு குற்றம்பொறுத்தநாதர் திருக்கோயில்



சம்பந்தர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 27 வது
இறைவன் : குற்றம்பொறுத்தநாதர் / அபராதக்ஷமேவரர்
இறைவி : கோல்வளைநாயகி / விசித்ரபாலாம்பிகா
தல தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
தல விருட்சம் : கொகுடிமுல்லை
புராணப் பெயர்: திருக்கருப்பறியலூர்/தலைஞாயிறு/மேலைக்காழி

கொகுடிக்கோயில் என்று பெயர். சீர்காழி மலைக்கோயில் போல் அம்மையப்பர், சட்டைநாதர் உருவங்கள். கயிலையில் பூத உருவில் இருந்த இறைவன் மீது சிவன் என்று அறியாமல் இந்திரன் வச்சிராயுதத்தை எரிந்த தவற்றை பொறுத்தருளியதால் குற்றம் பொறுத்தநாதர் எனப்பெயர். சூரியன், அனுமன் வழிபட்ட தலம். சண்டிகேஸ்வரர் மனைவி யுடன் உள்ளார். 72 மகரிஷிகள் முக்திதலம். குழந்தை பாக்கியம் அருளும் தலம். பிறப்பறுத்து முக்தி தரும் தலம்...

குற்றம்பொறுத்தநாதர் திருக்கோயில்
தலைஞாயிறு அஞ்சல், இளந்தோப்பு வழி,
மயிலாடுதுறை வட்டம் - 609 201,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-203678, 94431 90169

சென்னையிலிருந்து 273 கி.மீ, திருச்சியிலிருந்து 149 கி.மீ, மதுரையிலிருந்து 269 கி.மீ, கும்பகோணத்திலிருந்து 48 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வைத்தீஸ்வரன்கோயில் - திருப்பனந்தாள் சாலையில் தலைஞாயிறு கைக்காட்டி உள்ள இடத்தில் வலப்புறம் சாலையில் சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

28. அருள்மிகு குந்தளேஸ்வரர் திருக்கோயில்



அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடக்ரை - 28 வது
இறைவன் : குந்தளேஸ்வரர்
இறைவி : குந்தளாம்பிகை
தல தீர்த்தம் : கணபதி தீர்த்தம்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: குரக்குக்கா / திருக்குரக்காவல்

பஞ்ச(கா) தலங்களுள் ஒன்று. குரங்கு வழிபட்டது. ஒவ்வொரு சித்திரை மாதமும் இரண்டு குரங்குகள் வந்து சிவபூஜை செய்யும் அதிசயம். சூரிய, சனி தோஷ நிவர்த்தி தலம். செல்லியம்மன் சன்னதி. குழந்தை வரம் வேண்டி அம்மனுக்கு வளையல் சாத்தி வழிபாடு. ஆஞ்சநேயரே சிவனை உருவாக்கி வழிபட்ட தலம். சிவபக்த ஆஞ்சனேயருக்கு தனி சன்னதி மற்றும் அமாவாசை பூஜை. செங்கல் திருப்பணி. கொடிமரம், இராஜகோபுரம் இல்லை.

அருள்மிகு குந்தளேஸ்வரர் திருக்கோயில்
திருக்குரக்காவல், இளந்தோப்பு அஞ்சல்,
மயிலாடுதுறை வட்டம் - 609 201,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04364-258785

சென்னையிலிருந்து 280 கி.மீ., திருச்சியிலிருந்து 156 கி.மீ., மதுரையிலிருந்து 276 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 54 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து பட்டவர்த்தி வந்து மதகடி, இளந்தோப்பு வழியாக சென்று சுமார் 3 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.

29. அருள்மிகு மாணிக்கவண்ணர் திருக்கோயில்


சம்பந்தர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 29 வது
இறைவன் : மாணிக்கவண்ணர் / இரத்தினபுரீஸ்வரர்
இறைவி : பிரமகுந்தளாம்பாள் / வண்டமர்பூங்குழலி
தல தீர்த்தம் : பிரம தீர்த்தம்
தல விருட்சம் : வாகை மரம்
புராணப் பெயர்: வாளொளிப்புத்தூர் /திருவாழ்கொளிபுத்தூர்

அர்ஜுனனுடைய வாளை இறைவன் வாசுகி பாம்பு வாழ்ந்த புத்தினுள் ஒளித்து வைத்து மீண்டும் வழங்கியமையால் வாளொளிப்புத்தூர் என்று பெயர். மகிஷனை வதம் செய்த துர்க்கை சாந்தமடைந்த தலம்.அந்த வெற்றிக்கு அடையாளமாக வாகை மரம். வாசுகி சிலை. வாசுகி பாம்பு புற்றினுள் இருந்து வழிபட்டு தான் இழந்த வலிமையைப் பெற்ற தலம். வண்டு பூசித்த தலம். அரதனபுரம் எனப்பெயர். ராகு-கேது தோஷம் நீக்கும் விநாயகர் சன்னதி.

அருள்மிகு மாணிக்கவண்ணர்
திருக்கோயில், திருவாளப்புத்தூர் அஞ்சல்
மயிலாடுதுறை வட்டம் – 609 205,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 98425 38954, 99767 82952

சென்னையிலிருந்து 282 கி.மீ., திருச்சியிலிருந்து 158 கி.மீ., மதுரையிலிருந்து 278 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 45 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வைத்தீஸ்வரன்கோயில் – திருப்பனந்தாள் சாலையில் உள்ள இளந்தோப்பு எனும் ஊரிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

30. அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 30 வது
இறைவன் : நீலகண்டேஸ்வரர் / முக்தீஸ்வரர் / படிக்கரைநாதர்
இறைவி : அமிர்தகரவல்லி / மங்களநாயகி
தல தீர்த்தம் : பிரம, அமிர்த தீர்த்தங்கள்
தல விருட்சம் : இலுப்பை
புராணப் பெயர்: பழமண்ணிப்படிக்கரை

இலுப்பைப்பட்டு என்று பெயர். இலுப்பை வனமாக இருந்த இடம். திரௌபதி வழிபட்ட வலம்புரி விநாயகர். அருகில் இடம் புரி விநாயகர். சனியின் ஆதிக்கம் குறைய நளன் வழிபட்ட தலம். முருகன் மீது அருணகிரிநாதர் திருப்புகழ். பஞ்ச பாண்டவர்கள் வழிபட்ட பஞ்ச லிங்க தலம். வாசுகி கக்கிய விஷம் உண்ட இறைவன் கண்டத்தைப் பிடித்து நிறுத்திய அம்மன். 16 செல்வம் அருளும் பீமன் வழிபட்ட சோடச லிங்கம். ஜோதிடம் கற்போர் வணங்கும் முக்தீஸ்வரர்.

அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்
இலுப்பைப்பட்டு, மணல்மேடு அஞ்சல்,
மயிலாடுதுறை வட்டம் – 609 201,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 92456 19738, 99762 17869

சென்னையிலிருந்து 285 கி.மீ., திருச்சியிலிருந்து 161 கி.மீ., மதுரையிலிருந்து 281 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 42 கி.மீ. மயிலாடுதுறையிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ளது. வைத்தீஸ்வரன்கோயில் – திருப்பனந்தாள் சாலையில் உள்ள இளந்தோப்பு எனும் ஊரிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

31. அருள்மிகு குற்றம்பொறுத்தநாதர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 31 வது
இறைவன் : பிரணவவியாக்ரபுரீஸ்வரர் / துயர்தீர்த்த நாதர்
இறைவி : புஷ்பலதாம்பிகை / பூங்கொடிநாயகி
தல தீர்த்தம் : கொள்ளிடம், கௌரி
தல விருட்சம் : இலந்தை மரம்
புராணப் பெயர்: ஓமாம்புலியூர் / ஓமமாம்புலியூர்

புலிக்கால் முனிவர் (வியாக்ரபாதர்) வழிபட்டதால் புலியூர் என்றும், வேத ஓமங்களில் சிறப்புற்றதால் ஓமம் புலியூர் என்றும் பெயர். கோயில் பெயர் வடதளி. இறைவன் தட்சிணாமூர்த்தியாக இருந்து உமாதேவிக்கு பிரணவப்பொருள் உபதேசித்த தலம். சுயம்பு குருமூர்த்தத் தலம். குருவே பிரதானமாக இருப்பதால் நவக்கிரகங்கள் கிடையாது. குரு தெட்சணாமூர்த்தி தனிச் சன்னதியில் அருள்பாலிக்கிறார். குருப் பெயர்ச்சி, வியாழக்கிழமை சிறப்பு பூஜை.

அருள்மிகு துயர்தீர்த்தநாதர் திருக்-
கோயில், ஓமாம்புலியூர் அஞ்சல், ஆயங்குடி
காட்டுமன்னார்குடி வட்டம் - 608 306,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04144-264845

சென்னையிலிருந்து 278 கி.மீ., திருச்சியிலிருந்து 154 கி.மீ., மதுரையிலிருந்து 274 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 42 கி.மீ. சிதம்பரத்திலிருந்து 31 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரத்திலிருந்து குமராட்சி வழியே குஞ்சமேடு மற்றும் முட்டம் ஊர்கள் வழியாகக் கோயிலை அடையலாம்.

32. அருள்மிகு பதஞ்சலிநாதர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 32 வது
இறைவன் : பதஞ்சலிநாதர்
இறைவி : கானார்குழலி / அம்புஜாட்சி / கோல்வளைக்கையாள்
தல தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
தல விருட்சம் : வெள்ளெருக்கு
புராணப் பெயர்: கானாட்டுமுள்ளூர்

பதஞ்சலி முனிவர் வழிபட்ட தலம். சித்திரையில் சூரிய பூஜை. சிவபெருமான் பதஞ்சலி முனிவருக்காக நடனக்காட்சி அருளிய தலம். சனீஸ்வரர் தனிச்சன்னதியில். கருவறை பின்புறம் மகாவிஷ்ணு நின்ற கோலத்தில். எதிரே முருகன், வள்ளி, தெய்வானை நின்ற கோலத்தில். முன்மண்டபத்தில் இரண்டு நாகங்களுக்கு நடுவில் கிருஷ்ணனும், சிவலிங்கமும். குருவிற்கு கல்லால மரம் இல்லை. நடராஜர் சன்னதிக்கு எதிரே நால்வருடன் பதஞ்சலி முனிவர்.

அருள்மிகு பதஞ்சலிநாதர் திருக்கோயில்
கானாட்டாம்புலியூர், முட்டம் அஞ்சல்
காட்டுமன்னார்குடி வட்டம்-608 306,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04144-208091

சென்னையிலிருந்து 278 கி.மீ., திருச்சியிலிருந்து 154 கி.மீ., மதுரையிலிருந்து 274 கி.மீ., சிதம்பரத்திலிருந்து சுமார் 35 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 46 கி.மீ. தொலைவில் உள்ளது. சிதம்பரம்-காட்டுமன்னார்குடி சுமார் 12 கி.மீ-ல் ஓமாம்புலியூர் செல்லும் சாலையில் மோவூர் சென்று, முட்டம் பாதையில் இடப்புறம் 1 கி.மீ-ல் கோயில்

33. அருள்மிகு சௌந்தரேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 33 வது
இறைவன் : சௌந்தரநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி
தல தீர்த்தம் : காருண்ய தீர்த்தம்
தல விருட்சம் : புன்னாகம் மரம்
புராணப் பெயர்: நாரையூர் / திருநாரையூர்

சாபம் பெற்ற நாரை பூசித்து முக்தி பெற்ற தலம். பிள்ளையாரின் 6-ம் படைவீடு. உளி கொண்டு செதுக்கப்படாமல் சுயம்புவாக உருவாகிய பொள்ளாப்பிள்ளையார் மிகவும் சிறப்பு. நம்பியாண்டார் நம்பி மூலம் திருமுறைகளை பொல்லாப்பிள்ளையார் வெளிப் படுத்திய தலம். நம்பியாண்டார் நம்பி அவதரித்த தலம். 2 கலசங்கள் கொண்ட சுவாமி சன்னதி விமானம். 2 சண்டிகேசுவரர்கள். 3 பைரவர்கள். வைகாசி புனர் பூசம் நம்பியாண்டார் நம்பி குரு பூஜை.

அருள்மிகு சௌந்தரநாதர் திருக்கோயில்
திருநாரையூர் அஞ்சல், லால்பேட்டை வழி
காட்டுமன்னார்குடி வட்டம் - 608 303.
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04144 - 208879

சென்னையிலிருந்து 255 கி.மீ., திருச்சியிலிருந்து 115 கி.மீ., மதுரையிலிருந்து 235 கி.மீ., சிதம்பரத்திலிருந்து 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சிதம்பரம் - காட்டுமன்னார்கோயில் சாலையில், குமராட்சியை அடுத்து இடதுபுறம் திருநாரையூர் சாலையில் சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

34. அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 34 வது
இறைவன் : அமிர்தகடேஸ்வரர்
இறைவி : வித்யுஜோதிநாயகி / சோதிமின்னம்மை
தல தீர்த்தம் : சக்தி தீர்த்தம்
தல விருட்சம் : கடம்பு மரம்
புராணப் பெயர்: கடம்பூர் / மேலைக்கடம்பூர்

தேர் வடிவில் சுவாமி சன்னதி. இந்திரன் ஆணவம் போக்கிய ஆரவார விநாயகர். பிரதோஷத்திற்கு மட்டும் தரிசன மருளும் ரிஷபதாண்டவமூர்த்தி. குஞ்சிதபாத நடராஜர். கோஷ்டத்தில் பிரம்மா இறைவனை பூசிக்க எமன், சித்ரகுப்தன். அருகே பதஞ்சலி தலை மீது நடராஜர். அசுரனை அழிக்க முருகன் வில் வாங்கிய தலம். செவ்வாய் வழிபட்ட தலம். கழுகு வாகனத்தில் சனிபகவான். ஆலிங்கனமூர்த்தி. மூன்று வேளையில் மூன்று விதம் காட்சியருளும் அம்பிகை.

அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்
மேலைக்கடம்பூர், ரெட்டியூர் வழி,
காட்டுமன்னார்குடி வட்டம்-608 304,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04144-264638,9345656982

சென்னையிலிருந்து 291 கி.மீ., திருச்சியிலிருந்து 138 கி.மீ., மதுரையிலிருந்து 258 கி.மீ., சிதம்பரத்திலிருந்து சுமார் 33 கி.மீ. தொலைவில் உள்ளது. காட்டுமன்னார்குடி - எய்யலூர் சாலையில் சுமார் 6 கி.மீ. வந்து கீழக்கடம்பூர் கைக்காட்டி காட்டும் பாதையில் சென்று கீழக்கடம்பூரை அடைந்து பிறகு மேலக்கடம்பூர் செல்லலாம்.

35. அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 35 வது
இறைவன் : பசுபதீஸ்வரர்
இறைவி : வேணுபுஜாம்பிகை, காம்பனதோளியம்மை
தல தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
தல விருட்சம் : சரக்கொன்றை
புராணப் பெயர்: பந்தணைநல்லூர்

திருஞானசம்பந்தர் திருவாயில். ஆவணி 19,20,21 ல் சூரியபூஜை. நவக்கிரகங்கள் ஒரே வரிசையில் அனுக்கிரக மூர்த்திகளாக. பரிமளவல்லித் தாயாருடன் ஆதிகேசவப்பெருமாள் தனிக்கோயிலாக. பெருமாள்,பிரமன்,இந்திரன்,வாலி முதலியோர் வழிபட்ட தலம். கண் நோய் நீக்கும் தலம். பித்ரு தோஷ நிவர்த்தி தலம். பசுவின் பதியானதால் பசுபதீஸ்வரர்.மூலவர் புற்றாலான சுயம்பு. அம்பாள் விளையாடிய பந்து அணைந்த தலம். சிவலிங்க சிரசில் பசு குளம்புச்சுவடு

அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில்
பந்தநல்லூர், பந்தநல்லூர் அஞ்சல்
கும்பகோணம் வட்டம் – 609 807,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 – 2450595

சென்னையிலிருந்து 323 கி.மீ., திருச்சியிலிருந்து 131 கி.மீ., மதுரையிலிருந்து 251 கி.மீ., கும்பகோணத்திற்கு 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம்-திருப்பனந்தாள்-மணல்மேடு செல்லும் பாதையில் சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

36. அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்


அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 36 வது
இறைவன் : அக்னீஸ்வரர்
இறைவி : கற்பகாம்பிகை
தல தீர்த்தம் : அக்கினி, பராசுரர் தீர்த்தங்கள்
தல விருட்சம் : பலாசு மரம்
புராணப் பெயர்: கஞ்சனூர்

பராசரருக்கு சித்தபிரமை நீக்கியது. பிரமனுக்கு திருமணக்காட்சி. அக்னிக்கு சோகை நீக்கியது.சந்திரன் சாபம் நீக்கியது. கம்சன் உடற்பிணி நீக்கியது. கலிக்காமருக்கு திருமணம் நடந்தது. மானக்கஞ்சாரர், பஞ்சாட்சர மகிமை உணர்த்திய ஹரதத்தர் அவதாரத் தலம். சுரைக்காய் பக்தர் அவர் மனையாளுடன். கல்நந்தி புல் தின்றது. அக்னீஸ்வரர் லிங்க வடிவில். பராசர முனிவருக்கு முக்திதாண்டவம் காட்டியது. நவக்கிரகங்களில் சுக்ரனுக்குரிய தலம்.

அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்
கஞ்சனூர் – 609 804, துகிலி வழி,
திருவிடைமருதூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 – 2473737, 2470155

சென்னையிலிருந்து 278 கி.மீ., திருச்சியிலிருந்து 104 கி.மீ., மதுரையிலிருந்து 235 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் – கல்லணை சாலையில் கதிராமங்கலம் வந்து திருக்கோடிக்காவல் தாண்டி கோட்டூர் வழியே சென்றால் கஞ்சனூர் அடையலாம்.

37. அருள்மிகு கோடீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 37 வது
இறைவன் : கோடீஸ்வரர் / கோடிகாநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி / வடிவாம்பிகை
தல தீர்த்தம் : சிருங்கோத்பவ தீர்த்தம், காவிரி
தல விருட்சம் : பிரம்பு
புராணப் பெயர்: கோடிகா / திரிக்கோடிக்கா / வேத்ரவனம்

பஞ்ச "கா" க்களுள் ஒன்று. 3 கோடி மந்திர தேவதைகள் சாபம் நீங்கிய தலம். ஆனி 19, 20, 21 சூரிய பூஜை. சனி-எமன்,துர்வாசர்-சித்ரகுப்தர் எதிரெதிர் சன்னதிகளில். கருட வாகனத்தில் "பால சனி" தலையில் சிவலிங்கம். தெற்கிலிருந்து வடக்கு பாயும் " உத்திர வாஹினி" யாக காவிரி. இறைவன் திரு மேனிக்கு இணையான தலம். எமபயம் நீக்கும் தலம்.64 லீலைகளின் சிற்பங்கள் மற்றும் கண்கவர் சிற்பங்கள். சொல்லி லடங்கா பெருமைகள் கொண்ட தலம்.

அருள்மிகு கோடீஸ்வரர் திருக்கோயில்
திருக்கோடிகாவல், நரசிங்கம்பேட்டை வழி,
திருவிடைமருதூர் வட்டம் - 609 802,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435-2450595,94866 70043

சென்னையிலிருந்து 276 கி.மீ., திருச்சியிலிருந்து 102 கி.மீ., மதுரையிலிருந்து 233 கி.மீ., கும்பகோணத்திற்கு 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - கல்லணை சாலை வழியாகவும், மயிலாடுதுறை-கல்லணை சாலை வழியாகவும் கதிராமங்கலம் தாண்டி திருக்கோடிக்காவை அடையலாம்.

38. அருள்மிகு பிரணவரதேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 38 வது
இறைவன் : பிரணவரதேஸ்வரர்
இறைவி : மங்களநாயகி
தல தீர்த்தம் : மங்கள (காவிரி) தீர்த்தம்
தல விருட்சம் : வெள்ளெருக்கு
புராணப் பெயர்: திருமங்கலக்குடி

பஞ்சமங்கள க்ஷேத்திரம் - மங்கள விநாயகர், மங்கள தீர்த்தம்,மங்கள நாயகி, மங்கள விமானம், மங்கலக்குடி. ஆவுடையாரைவிட உயர்ந்த பாணம். நடராசர் சன்னதியில் மரகத லிங்கம். மனித,விலங்கு,பறவை முகங்கொண்ட புருஷமிருகம். தாலி தருகின்ற அம்பாள். வெள்ளெருக்கு இலையில் நை வேத்தியம். சூரியனார்கோயில் செல்லும் முன் வழிபடவேண்டிய தலம். 2 நடராஜ உற்சவ மூர்த்திகள். கிரக தோஷ, புத்ர தோஷ, மாங்கல்ய தோஷ நிவர்த்தி தலம்.

அருள்மிகு பிரணவரதேஸ்வரர்
திருக்கோயில், திருமங்கலக்குடி அஞ்சல்
- 612 102, திருவிடைமருதூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 - 2470480

சென்னையிலிருந்து 285 கி.மீ., திருச்சியிலிருந்து 111 கி.மீ., மதுரையிலிருந்து 242 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில் ஆடுதுறைக்கு அடுத்து சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

39. அருள்மிகு தாலவனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 39 வது
இறைவன் : செஞ்சடையப்பர் / தாலவனேஸ்வரர் / ஜடாதரர்
இறைவி : தாலவனேஸ்வரி / பெரியநாயகி
தல தீர்த்தம் : பிரம, ஐராவத, தாடகை தீர்த்தங்கள்
தல விருட்சம் : பனை மரம்
புராணப் பெயர்: பனந்தாள் / தாடகைஈச்சரம்

தாடகைக்கு இறைவன் தலை சாய்த்து பூமாலை ஏற்றது. சாய்ந்த சிவலிங்கத்தினை தன் கழுத்தில் கயிறு கட்டி குங்கலிய நாயனார் நிமிர்த்தியது. சித்திரையில் சூரிய பூஜை. ஆண் பனைமரங்கள். பெண் நாகம் (நாகக்கன்னி) வழிபட்ட தலம். குமரகுருபரர் நிறுவிய காசிமடம். சுவாமி விமானம் பிரணவ வடிவில். குங்கலியநாயனார் கோயில். இறைவன் அம்மைக்கு ஞான உபதேசம் செய்தது. திருமால், பிரமன், ஐராவதம் வழிபட்டது.கண்கவர் சிற்பங்கள்

அருள்மிகு தாலவனேஸ்வரர் திருக்கோயில்
திருப்பனந்தாள் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம் – 612 504,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 – 2456422, 94431 16322

சென்னையிலிருந்து 267 கி.மீ., திருச்சியிலிருந்து 104 கி.மீ., மதுரையிலிருந்து 235 கி.மீ., கும்பகோணத்திற்கு 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் – சென்னை செல்லும் சாலையில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை – கும்பகோணம் சாலையில் ஆடுதுறையிலிருந்து சுமார் 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

40. அருள்மிகு பாலுகந்தநாதர் திருக்கோயில்


அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 40 வது
இறைவன் : பாலுகந்தநாதர் / பாலுகந்தீஸ்வரர்
இறைவி : பெரியநாயகி / பிருகந்நாயகி
தல தீர்த்தம் : மண்ணியாறு
தல விருட்சம் : ஆத்தி
புராணப் பெயர்: ஆப்பாடி / வீராக்கன்

சண்டேஸ்வரர் முக்தி பெற்ற தலம்.மூலஸ்தானத்திற்கு அருகே சண்டிகேஸ்வரர் சன்னதி முன்மண்டபம் வவ்வால் நெத்தியமைப்புடையது. சிவராத்திரி அமாவாசை சண்டேசுவரர் பிரம்மோற்சவம். விசாரசருமன் மாடு (ஆ) மேய்த்த இடமாதலால் ஆப்பாடி. இறைவன் தன் கழுத்திலிருந்த கொன்றை மாலை சூட்டி விசாரசருமனை சண்டிகேஸ்வரர் ஆக்கிய தலம். விசாரசருமன் அன்புடன் வழங்கிய பாலை ஏற்றதால் பாலுகந்த நாதர். சுமார் 2000 ஆண்டுகள் பழமை.

அருள்மிகு பாலுகந்தநாதர் திருக்கோயில்
திருவாய்ப்பாடி, திருப்பனந்தாள் அஞ்சல்,
திருவிடைமருதூர் வட்டம் – 612 102
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 94421 67104

சென்னையிலிருந்து 270 கி.மீ., திருச்சியிலிருந்து 107 கி.மீ., மதுரையிலிருந்து 238 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் – சென்னை செல்லும் சாலையில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை – கும்பகோணம் சாலையில் ஆடுதுறையிலிருந்து சுமார் 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

41. அருள்மிகு சத்யகிரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 41வது
இறைவன் : சத்யகிரிநாதர் / சத்யகிரீஸ்வரர்
இறைவி : சகிதேவியம்மை
தல தீர்த்தம் : மண்ணி தீர்த்தம், சத்திய புஷ்கரணி
தல விருட்சம் : ஆத்தி
புராணப் பெயர்: சேய்ஞலூர் (சேய் = முருகன், நல் + ஊர்)

ஈஸ்வரப்பட்டம் பெற்ற சண்டேஸ்வர நாயனார் அவதாரத்தலம். கோச்செங்கண்ணன் கட்டிய மாடக்கோயில். 2 பிரகாரங்கள். மகாமண்டபத்தில் தட்டினால் வெங்கல ஒலி கேட்கும் பைரவர் சன்னதி. அரிச்சந்திரன், சிபி வழிபட்ட தலம். நாலாயிரத் திவ்யப்பிரபந் தத்திற்கு உரையெழுதிய பெரியவாய்ச் சான் பிள்ளை அவதாரத் தலம். முருகப் பெருமான் வழிபட்ட தலம். முருகனுக்கு பெரிய சன்னதி. சோழர்களின் முக்கிய 5 நகர்களுள் ஒன்று. குமாரபுரம் என்றும்.

அருள்மிகு சத்யகிரீஸ்வரர் திருக்கோயில்
சேங்கனூர், திருப்பனந்தாள் அஞ்சல்,
திருவிடைமருதூர் வட்டம் – 612 504,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 – 2457459, 93459 82373

சென்னையிலிருந்து 271 கி.மீ., திருச்சியிலிருந்து 108 கி.மீ., மதுரையிலிருந்து 239 கி.மீ., கும்பகோணத்திற்கு 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் – திருப்பனந்தாள் சாலையில் நெடுங்கொல்லை கிராமம் தாண்டி சேங்கனூர் கூட்டு ரோடு வழியாக கோயிலை அடையலாம்.

42. அருள்மிகு கற்கடேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 42 வது
இறைவன் : கற்கடேஸ்வரர்
இறைவி : அருமருந்தம்மை, அபூர்வநாயகி
தல தீர்த்தம் : நவபாஷாணம்
தல விருட்சம் : நங்கை மரம்
புராணப் பெயர்: திருந்துதேவன்குடி (இந்திரன் தவறுணர்ந்து திருந்தியதால்)

நண்டு பூசித்த தலம். அமர்ந்த நிலையில் சந்திரன். 2 அம்பாள் சன்னதி. கோயிலைச் சுற்றி அகழி. தன்வந்திரி சன்னதி. காறாம்பசும்பால் பதின்கலம் கொண்டு அபிஷேகம் செய்தால் சுவாமி முடிமீது பொன்னிற நண்டு ஊர்தல் போன்ற தரிசனம். இறைவன் ஓர் அரசனுக்கு கிழவர்போல் வந்து நோய் தீர்த்த தலம். கடக ராசிக்காரர்களுக்கான பரிகாரத் தலம். இறைவன் திருமேனியில் நண்டு ஐக்கியமான துளை, இந்திரனால் வெட்டப்பட்ட காயம் இன்றும் காணலாம்.

அருள்மிகு கற்கடேஸ்வரர் திருக்கோயில்
திருந்தேவன்குடி,திருவிசநல்லூர் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம் – 612 105,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435-200240,99940 15871

சென்னையிலிருந்து 321 கி.மீ., திருச்சியிலிருந்து 121 கி.மீ., மதுரையிலிருந்து 252 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் – சூரியனார்கோயில் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. தற்போது நண்டாங்கோயில் என்று அனைவராலும் அழைக்கப்படுகிறது.

43. அருள்மிகு யோகானந்தீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 43 வது
இறைவன் : யோகானந்தீஸ்வரர் / புராதனேஸ்வரர்
இறைவி : சாந்தநாயகி / சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : சடாயு தீர்த்தம் உட்பட 8 தீர்த்தங்கள்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: வியலூர் / திருவிசலூர் / திருவிசநல்லூர்

சித்திரை 1,2,3 சூரிய பூஜை. மதிற்சுவற்றில் சூரிய ஒளி கடிகாரம். ரிஷப ராசிக்கு உகந்த தலம். சதுர்கால பைரவர் சன்னதி. கார்த்திகை அமாவாசை தன் வீட்டில் கங்கை பொங்க செய்த ஸ்ரீதர ஐயாவாள் அவதாரத்தலம். ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள் சன்னதி. நான்கு யுகம் கண்ட தலம். திருவுந்தியார் எனும் நூலை இயற்றிய உய்யவந்த தேவநாயனார் அவதாரத் தலம். ஜடாயு இறக்கை விழுந்த இடத்தில் தீர்த்தம். சிவ ராத்திரி அகத்தியர் வழிபடுவதாக ஐதீகம்.

அ/மி யோகானந்தீஸ்வரர் திருக்கோயில்
திருவிசலூர் அஞ்சல், வேப்பத்தூர் வழி,
கும்பகோணம் வட்டம் - 612 105,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 - 2941752, 94447 47142

சென்னையிலிருந்து 319 கி.மீ., திருச்சியிலிருந்து 119 கி.மீ., மதுரையிலிருந்து 250 கி.மீ., கும்பகோணத்திற்கு 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - சூரியனார்கோயில் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில் திருவிடைமருதூர்-வேப்பத்தூர் சாலையில் உள்ளது.

44. அருள்மிகு கோடீஸ்வரர் திருக்கோயில்


அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 44 வது
இறைவன் : கோடீஸ்வரர்
இறைவி : பந்தாடுநாயகி / கந்துககிரீடாம்பாள்
தல தீர்த்தம் : கோடி தீர்த்தம், அமுத தீர்த்தம்
தல விருட்சம் : கொட்டைச் செடி (ஆமணக்கு)
புராணப் பெயர்: கொட்டையூர்

சோழ மன்னனுக்கும், ஏரண்ட முனிவருக்கும் கோடி லிங்கமாகக் காட்சியித்த தலம். மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். பத்திரயோகி முனிவருக்கு கோடி விநாயகர், கோடி அம்மன், கோடி முருகன், கோடி தம் உருவாக காட்சியளித்த தலம். இறைவி பாவங்கள் அனைத்தையும் எட்டி உதைக்கும்படி. நவக்கிரகங்கள் தத்தம் வாகனங்களில் அமர்ந்தபடி. இறைவன் திருமேனியில் கொட்டை போன்ற அமைப்பு. ஏரண்ட முனிவருக்கு தனிச் சன்னதி உள்ளது.

அருள்மிகு கோடீஸ்வரர் திருக்கோயில்
கொட்டையூர், மேலக்காவிரி அஞ்சல்,
கும்பகோணம் வட்டம் - 612 002,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 - 2454421

சென்னையிலிருந்து 280 கி.மீ., திருச்சியிலிருந்து 91 கி.மீ., மதுரையிலிருந்து 222 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் - திருவையாறு சாலையில் மேலக்காவிரி எனும் ஊருக்கு அடுத்து அமைந்துள்ளது. கும்பகோணம்-சுவாமிமலை கொட்டையூர் வழிப்பேருந்தும் உள்ளது.

45. அருள்மிகு எழுத்தறிநாதர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 45 வது
இறைவன் : எழுத்தறிநாதர் / தான்தோன்றீஸ்வரர்
இறைவி : சுகுந்தகுந்தளாம்பிகை / நித்யகல்யாணி
தல தீர்த்தம் : ஐராவத தீர்த்தம்
தல விருட்சம் : பலா, சண்பகம்
புராணப் பெயர்: இன்னம்பர்

அகத்தியர் வழிபட்டு தமிழ் இலக்கணம் உபதேசம் பெற்ற தலம். யானைப் படுத்திருப்பது போன்ற கஜப்பிருஷ்ட விமானம். தினசரி திருமணக்கோலத்தில் அம்பாள். பங்குனி, புரட்டாசி மாதங்களில் சூரிய பூஜை. குழந்தைகள் பள்ளியில் சேரும் முன்னர் வழிப்பட வேண்டிய தலம். ஐராவதம் வழிப்பட்ட தலம்.கல்வியில் சிறந்து விளங்க வழிபட வேண்டிய தலம். காட்சி கொடுத்த நாதர். திருமணம், குழந்தைப்பேறு வேண்டுவோர் வழிபட வேண்டிய தலம்.

அருள்மிகு எழுத்தறிநாதர் திருக்கோயில்
இன்னம்பூர் அஞ்சல், திருப்புறம்பியம் வழி, கும்பகோணம் வட்டம் - 612 303,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 - 2000157

சென்னையிலிருந்து 286 கி.மீ., திருச்சியிலிருந்து 97 கி.மீ., மதுரையிலிருந்து 228 கி.மீ., கும்பகோணத்திற்கு 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - திருவையாறு பாதையில் புளியஞ்சேரி சென்று திருப்புறம்பியம் சாலையில் சுமார் 3 கி.மீ. கடந்து சென்றால் ஆலயத்தை அடையலாம். நகரப்பேருந்து வசதியும் உள்ளது.

46. அருள்மிகு சாட்சிநாதேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 46 வது
இறைவன் : சாட்சிநாதேஸ்வரர் / புன்னைவனநாதர்
இறைவி : கரும்பன்னசொல்லி / இக்ஷுவாணி
தல தீர்த்தம் : பிரம தீர்த்தம்
தல விருட்சம் : புன்னை மரம்
புராணப் பெயர்: புறம்பயம்/புன்னாகவனம்/கல்யாணமாநகர்

பிரளயத்திற்கு புறம்பாய் அமைந்த தலம். பிரளயம் காத்த விநாயகர் சன்னதி. அகத்தியர், பிரமா, சனகாதி முனிவர்கள், விசுவாமித்திரர் வழிபட்ட தலம். விநாயகர் சதுர்த்தியில் நடைபெறும் தேனாபிஷேகத்தின் போது தேன் முழுதும் உள்ளே ஈர்க்கப்படும் அதிசயம். தட்சணாமூர்த்திக்குரிய 24 தலங்களுள் ஒன்று. திருவிளையாடல் நிகழ்ந்த தலம். அரம் தீண்டயரை சம்பந்தர் பதிகம் பாடி எழுப்பி திருமணம் நிகழ்த்த, இறைவன் அதற்கு சாட்சியாக இருந்த தலம்.

அருள்மிகு சாட்சிநாதேஸ்வரர் திருக்கோயில்
திருப்புறம்பியம் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம் - 612 303,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 - 2459011, 94864 90042

சென்னையிலிருந்து 289 கி.மீ., திருச்சியிலிருந்து 100 கி.மீ., மதுரையிலிருந்து 231 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் - திருவையாறு பாதையில் புளியஞ்சேரி வழியே திருப்புறம்பியம் ஆலயத்தை அடையலாம். நகரப்பேருந்து வசதியும் உள்ளது.

47. அருள்மிகு விஜயநாதேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 47 வது
இறைவன் : விஜயநாதேஸ்வரர் / விஜயநாதர்
இறைவி : மங்களாம்பிகை / மங்கைநாயகி
தல தீர்த்தம் : அருச்சுன தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: விசயமங்கை

மகாபாரதப்போரில் வெற்றிபெற பஞ்சபாண்டவர்களுள் ஒருவரான அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற தலம். விஜயன் வழிப்பட்டதால் விஜயமங்கை என்று பெயர். வரலாற்றின் படி இறைவன் மீது அர்ச்சுனன் அம்பால் அடித்த தழும்பு லிங்கத்தின் மீது காணலாம். சோழர்களால் கட்டப்பெற்றது. நான்கு திருக்கரங்களுடன் மங்களநாயகி. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம். ஆயுள் விருத்தி, ஆயுள் தோஷ நிவர்த்தி வழிபாட்டுக்குச் சிறந்த தலம்.

அருள்மிகு விஜயநாதர் திருக்கோயில்
திருவிசயமங்கை, புள்ளம்பூதங்குடி,
கும்பகோணம் வட்டம் - 612 301,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 - 2941912, 94440 30158

சென்னையிலிருந்து 293 கி.மீ., திருச்சியிலிருந்து 104 கி.மீ., மதுரையிலிருந்து 235 கி.மீ., கும்பகோணத்திற்கு 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - திருவையாறு பாதையில் திருப்புறம்பியம் அடுத்து திருவைகாவூர் செல்லும் சாலையில் சுமார் 4 கி.மீ. கடந்து சென்றால் ஆலயத்தை அடையலாம்.

48. அருள்மிகு வில்வவனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 48 வது
இறைவன் : வில்வவனேஸ்வரர் / வில்வவனநாதர்
இறைவி : சர்வஜனரட்சகி / வளைக்கைநாயகி
தல தீர்த்தம் : எம தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: வைகாவூர்/ வில்வவனம்

மகாசிவராத்தி தினத்தில் புலிக்கு பயந்து மரத்தின் மீதிருந்து வில்வம் பரித்து போட்ட வேடனுக்கு முக்தியளித்த தலம். மகாசிவராத்திரி சிறப்பு பெற்ற தலம். திரும்பிய முகமாக நந்தி. வீணையேந்திய தட்சணாமூர்த்தி. துவாரபாலகர்களாக விஷ்ணு, பிரம்மா. ஒரே கல்லால் ஆன ஆறுமுகன், இடப்புறமாக திரும்பிய மயில். பிரளயகாலத்தில் நால் வேதங்கள் வில்வமரமாக இருந்து அழியா நிலைப்பெற்ற தலம். மும்மூர்த்தி கள் தலம். சப்தகன்னிகள் வழிபட்ட தலம்.

அருள்மிகு வில்வவனநாதர் திருக்கோயில்
திருவைகாவூர் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம் - 612 304,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0435 - 2941912, 94440 30158

சென்னையிலிருந்து 295 கி.மீ., திருச்சியிலிருந்து 106 கி.மீ., மதுரையிலிருந்து 237 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் - திருவையாறு பாதையில் திருப்புறம்பியம் அடுத்து திருவைகாவூர் செல்லும் சாலையில் சுமார் 6 கி.மீ. கடந்து சென்றால் ஆலயத்தை அடையலாம்.

49. அருள்மிகு தயாநிதீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 49 வது
இறைவன் : குலைவணங்கீசர் / தயாநிதீஸ்வரர் / வாலிநாதர்
இறைவி : அழகுசடைமுடியம்மை / ஜடாமகுடேஸ்வரி
தல தீர்த்தம் : காவிரி
தல விருட்சம் : தென்னை மரம்
புராணப் பெயர்: வட குரங்காடுதுறை

கர்ப்பிணிப் பெண்ணுக்கு இறைவன் தென்னை மரத்தை வளைத்து தாகம் தீர்த்த தலம். சிட்டுக்குருவி வழிபட்டதால் சிட்டிலிங்கேஸ்வரர் எனப்பெயர். வாலி வழிபட்டு இழந்த சக்தியைப் பெற்ற தலம். கர்ப்பிணிப் பெண்கள் வழிபடுவதற்கு உகந்த தலம். நடராஜர் கல் திருமேனி மூலவராக உள்ளார். அஷ்டபுஜ விஷ்ணு துர்க்கை மீது விழும் பால் நீல நிறமாக மாறும் அதிசயம். கார்த்திகையில் அம்பிகையை பெண்கள் 1008 முறை சுற்றி வருவது மிகவும் சிறப்பானது.

அருள்மிகு தயாநிதீஸ்வரர் திருக்கோயில்
ஆடுதுறை பெருமாள் கோயில், கணபதி அக்ரஹாரம் வழி, உள்ளிக்கடை-614 202
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 04374 - 240491, 93671 82044

சென்னையிலிருந்து 310 கி.மீ., திருச்சியிலிருந்து 107 கி.மீ., மதுரையிலிருந்து 238 கி.மீ., கும்பகோணத்திற்கு 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - திருவையாறு சாலையில் உமையாள்புரம், உள்ளிக்கடை கடந்து சென்றால் ஆலயத்தை அடையலாம்.

50. அருள்மிகு ஆபத்சகாயர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 50 வது
இறைவன் : ஆபத்சகாயர்
இறைவி : பெரியநாயகி
தல தீர்த்தம் : மங்கள தீர்த்தம்
தல விருட்சம் : வாழைமரம்
புராணப் பெயர்: பழனம்

பங்குனி,புரட்டாசி பௌர்ணமி தினங்களில் நிலவு ஒளி இறைவன் மீது விழும் அதிசயம். சந்திரன்,குபேரன்,திருமால்,லட்சுமி, தர்மசர்மா வழிபட்ட தலம். சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. கதலிவனம் என்றும் பெயர். ஆபத்தில் காத்ததால் ஆபத்சகாயர் எனப்பெயர். கருவரைச் சுவற்றில் நெற்றிக் கண்ணுடன் சிவன், கஜசம்ஹாரமூர்த்தி. வேணுகோபாலர் சன்னதி. அழகிய வனம் இருந்த இடமாதலால் பழனம் எனப்பெயர் சிற்பங்கள் பல நிறைந்த கலைப்பெட்டகம்

அருள்மிகு ஆபத்சகாயர் திருக்கோயில்
திருப்பழனம் அஞ்சல்,
திருவையாறு வழி - 613 204,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 04362 - 326668

சென்னையிலிருந்து 312 கி.மீ., திருச்சியிலிருந்து 109 கி.மீ., மதுரையிலிருந்து 240 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 22 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் - திருவையாறு சாலையில் அமைந்துள்ளது. திருவையாறு ஊரிலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. வடகுரங்காடுதுறையிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில்.

51. அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 51 வது
இறைவன் : ஐயாற்றீசுவரர் / பஞ்சநதீஸ்வரர்
இறைவி : அறம்வளர்த்தநாயகி / தர்மசம்வர்த்தினி
தல தீர்த்தம் : சூரிய, காவிரி தீர்த்தங்கள்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: ஐயாறு

காசிக்கு நிகரான 6 தலங்களுள் ஒன்று. கருவரைச் சுற்றில் இறைவன் விரிசடையிருப்பதால் பிரகாரம் சுற்ற அனுமதியில்லை. அப்பர் கயிலாயக்காட்சி கண்ட வடகயிலாயம். மாறுபட்ட அர்த்தநாரீஸ்வரர். மூலவர் பிருத்விலிங்கம். 51 சக்தி பீடங்களில் தர்மசக்தி பீடம். சப்தஸ்தான தலங்ளுள் முதன்மையானது. சூரியன்,வாலி, இந்திரன் பூசித்த தலம்.சிவனுக்கு வடமாலை. சுந்தரர் பாடி காவிரியை வழிவிடச் செய்த தலம். மூன்றாம் பிரகாரம் 7 முறை எதிரொளிக்கும்.

அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் திருக்கோயில்
திருவையாறு அஞ்சல்
திருவையாறு - 613 204.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04362 - 260332

சென்னையிலிருந்து 335 கி.மீ., திருச்சியிலிருந்து 51 கி.மீ., மதுரையிலிருந்து 182 கி.மீ., கும்பகோணத்திற்கு 38 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - திருவையாறு பேருந்துகள் உள்ளது. தஞ்சாவூரிலிருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

52. அருள்மிகு நெய்யாடியப்பர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 52 வது
இறைவன் : நெய்யாடியப்பர் / கிருதபுரீஸ்வரர்
இறைவி : பாலாம்பிகை / இளமங்கை
தல தீர்த்தம் : காவிரி
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: நெய்த்தானம்

சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. சிவனுக்கு பசுநெய் அபிஷேகம் ஆன பின்பு வெந்நீர் அபிஷேகம் சிறப்பானது. திருநாவுக்கரசர் இத்தலத்து அம்பாளை மட்டுமே போற்றிப் பாடியுள்ளார். ஏழூர் பல்லக்கும் ஓரிடத்தில் காணும் சிறப்புப்பெற்ற தலம். தெட்சணாமூர்த்தி நின்ற கோலத்தில். இலங்கை மன்னர்களின் குலதெய்வம். சரஸ்வதி, காமதேனு,காசியபரிஷி வழிபட்ட தலம். அருணகிரிநாதர், ஒட்டக்கூத்தர்,புகழேந்தியார் பாடல்பெற்ற தலம்.

அருள்மிகு நெய்யாடியப்பர் திருக்கோயில்
தில்லைஸ்தானம் அஞ்சல்,
திருவையாறு வட்டம் - 613 203,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04362 - 260553

சென்னையிலிருந்து 336 கி.மீ., திருச்சியிலிருந்து 52 கி.மீ., மதுரையிலிருந்து 183 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 39 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் - திருவையாறு சென்றால் அங்கிருந்து 1 கி.மீ. தொலைவில் கோயில் உள்ளது. தஞ்சாவூரிலிருந்து சுமார் 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

53. அருள்மிகு வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 53 வது
இறைவன் : வியாக்ரபுரீஸ்வரர்
இறைவி : சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : காவிரி
தல விருட்சம் : சரக்கொன்றை
புராணப் பெயர்: பெரும்புலியூர்

பஞ்ச புலியூர்த்தலங்களுள் ஒன்று. நவக்கிரக சன்னதியில் வெவ்வேறு திசையில் இல்லாமல் சூரியனைப் பார்த்தவாறு கிரகங்கள் இருப்பது தனிச்சிறப்பு. வியாக்ரபாதர் எனும் புலிக்கால் முனிவர் வழிபட்ட தலம். நான்கு அடுக்கு களால் ஆன தாமரை மீது அமைந்துள்ள மூலஸ்தானம். அருணகிரி நாதர் முருகன் மீது திருப்புகழ் பாடி யுள்ளார்கள். திருப்பாதிரிபுலியூர், பெரும் பற்றப்புலியூர் (சிதம்பரம்), எருக்கத்தம் புலியூர்,ஓமாம்புலியூர், பெரும்புலியூர்.

அருள்மிகு வியாக்ரபுரீஸ்வரர் திருக்கோயில்
பெரும்புலியூர், திருநெய்த்தானம் அஞ்சல்
திருவையாறு வழி & வட்டம் – 613 203.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 94434 47826, 94427 29856

சென்னையிலிருந்து 340 கி.மீ., திருச்சியிலிருந்து 56 கி.மீ., மதுரையிலிருந்து 187 கி.மீ., கும்பகோணத்திற்கு 43 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவையாற்றிலிருந்து திருக்காட்டுப்பள்ளி செல்லும் சாலையில் தில்லைஸ்தானத்திற்கு வலப்புறம் பிரியும் சாலையில் 4 கி.மீ. தொலைவில் திருத்தலம் அமைந்துள்ளது.

54. அருள்மிகு வச்சிரதம்பேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 54 வது
இறைவன் : வச்சிரதம்பேஸ்வரர்/மழுவாடீஸ்வரர்/
இறைவி : அழகம்மை / பாலாம்பிகை / சுந்தராம்பிகை
தல தீர்த்தம் : இலட்சுமி, சிவகங்கை, கொள்ளிட தீர்த்தங்கள்
தல விருட்சம் : பனை மரம்
புராணப் பெயர்: மழபாடி

நந்திக்கு திருமணம் நடைபெற்ற தலம். வடதிசை நோக்கி பாயும் உத்திரவாகினியாக காவிரி. சிவனே கேட்க, சுந்தரர் தேடிச் சென்று பாடிய தலம். ஒரே கல்லாலான சோமஸ் கந்தர்,புருஷாமிருக சிலை. மிகவும் சிறப்பு வாய்ந்தது. பங்குனி புனர்பூசம் திருமண உற்சவம். திருமால், இந்திரன் வழிபட்டது. நந்தி தேவர் சிலையும், அவருடைய மனைவி வசிஷ்ட முனிவரின் பேத்தி சுயம்பிரகாசை சிலையும் உள்ளது. புருஷாமிருகத்தால் நிறுவப்பட்ட மூலவர்.

அருள்மிகு வச்சிரதம்பேஸ்வரர் திருக்-
கோயில், திருமழபாடி அஞ்சல்,
அரியலூர் வட்டம் – 621 851,
பெரம்பலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04329 – 292890, 94436 23014

சென்னையிலிருந்து 345 கி.மீ., திருச்சியிலிருந்து 61 கி.மீ., மதுரையிலிருந்து 192 கி.மீ., திருவையாற்றிலிருந்து 16 கி.மீ. தஞ்சாவூரிலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவையாற்றிலிருந்து மஞ்சள்மேடு, பழையபாடி வழியாக வரலாம். திருவையாறு – திருச்சி சாலையில் திருமானூருக்கு அடுத்து 5 கி.மீ. தொலைவில்.

55. அருள்மிகு வடமூலேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 55 வது
இறைவன் : வடமூலேஸ்வரர், ஆலந்துறையார், யோகவனேஸ்வரர்
இறைவி : அருந்தவநாயகி / மகாதபஸ்வினி
தல தீர்த்தம் : பிரம, பரசுராம தீர்த்தங்கள்
தல விருட்சம் : ஆல மரம்
புராணப் பெயர்: பழுவூர் (பழு = ஆலமரம்)

பரசுராமர் தன் தாயைக்கொன்ற பாவம் தீர வழிபட்ட தலம். அம்பாள் தவமிருந்து அருள்பெற்ற தலமாதலால் யோகவனம் என்றும் பெயர். சிவனுக்கு சாம்பிராணித் தைலம் பூசப்படுகிறது. கஜமுகாசுரனை அழித்துவிட்டு விநாயகர் ஆனந்தநடனம் புரிந்தார். பங்குனி 18ல் சூரிய பூஜை. பரசுராமர் சயனக்காட்சி.வள்ளலார், அருணகிரி பாடல்பெற்றது. புற்று மண்ணாலான மூலவர்.காலசம்ஹாரமூர்த்தி,சண்டிகேஸ்வரரின் பஞ்சலோக சிலைகள் சிறப்பு.

அருள்மிகு வடமூலேஸ்வரர் திருக்கோயில்
கீழப்பழுவூர் அஞ்சல்
அரியலூர் வட்டம் - 621707.
பெரம்பலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 97861 63398

சென்னையிலிருந்து 355 கி.மீ., திருச்சியிலிருந்து 71 கி.மீ., மதுரையிலிருந்து 202 கி.மீ., கும்பகோணத்திற்கு 54 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருச்சி - அரியலூர் சாலையில் மழபாடியிலிருந்து சுமார் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பேருந்து நிலையத்திற்கு அருகில் கோயில் அமைந்துள்ளது.

56. அருள்மிகு செமேனிநாதர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 56 வது
இறைவன் : செம்மேனிநாதர்/கரும்பேஸ்வரர் / செமேனிநாதர்
இறைவி : சிவலோகநாயகி
தல தீர்த்தம் : கொள்ளிட தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: கானூர்

அம்பாள் தவமிருக்க இறைவன் அக்னிப்பிழம்பாக காட்சியருளிய தலம். பங்குனியில் சூரிய பூஜை. அம்பாள் விக்ரகம் சாளக்கிராமம். விமானம் உருண்டை வடிவான ஏகதளம். கரிகாற்சோழன் வாழ்ந்த ஊர். பரசுராமர் சத்திரிய தோஷம் நீங்க வழிபட்ட தலம். கணவன்,மனைவி ஒற்றுமையாக வாழ வழிபட வேண்டிய தலம். மணலுக்குள் புதைந்த ஊராதலால் மணல்மேடு எனப்பெயர். கரும்பு மட்டுமே இருந்த இடத்தில் தோன்றியதால் கரும்பேஸ்வரர்.

அருள்மிகு செமேனிநாதர் திருக்கோயில்
விஷ்ணம்பேட்டை அஞ்சல்,
திருக்காட்டுப்பள்ளி வழி - 613 105.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04362 - 320067,93450 09344

சென்னையிலிருந்து 346 கி.மீ., திருச்சியிலிருந்து 71 கி.மீ., மதுரையிலிருந்து 202 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து சுமார் 29 கி.மீ. திருவையாற்றிலிருந்து 24 கி.மீ. தொலைவில் உள்ளது. திருக்காட்டுப்பள்ளியிலிருந்து காவிரிப்பாலத்தைக் கடந்து, விஷ்ணம்பேட்டை வழியாக வந்து திருக்கோயிலை அடையலாம்.

57. அருள்மிகு சத்தியவாகீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 57 வது
இறைவன் : ஆலந்துறையார் / பிரமபுரீஸ்வரர் / சத்யவாகீஸ்வரர்
இறைவி : சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : சந்திர தீர்த்தம்
தல விருட்சம் : ஆல மரம்
புராணப் பெயர்: அன்பிலாலந்துறை

கொள்ளிடம் ஆற்றின் வெள்ளம் காரணமாக தொலைவில் நின்று பாடிய சம்பந்தர் பாடலைக் கேட்பதற்காக ஒருகால் மண்டியிட்டும், மறுகால் குதிக்கால் இட்டும் செவி சாய்த்து கேட்கும் விநாயகர் சிறப்பு. சாம கானம் கேட்ட விநாயகர் என்றும் பெயர். பிரமா, வாகீச முனிவர் வழிபட்ட தலம். காது குறைபாடு உள்ளவர்கள் வழிபட வேண்டிய தலம். பிரமன் வழிபடும் சிற்பம். மாடக்கோயிலாக இருந்து பராந்தக சோழனால் மாற்றப்பட்ட தலம்.

அருள்மிகு சத்யவாகீஸ்வரர் திருக்கோயில்
அன்பிலாலந்துறை
அன்பில் அஞ்சல் - 621702.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 0431-2541040, 98654 22027

சென்னையிலிருந்து 346 கி.மீ., திருச்சியிலிருந்து 26 கி.மீ., மதுரையிலிருந்து 157 கி.மீ., லால்குடியிலிருந்து 8 கி.மீ. திருக்காட்டுப்பள்ளியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருச்சியிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளது. ஊரின் பெயர் அன்பில்.

58. அருள்மிகு ஆம்ரவனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 58 வது
இறைவன் : ஆம்ரவனேஸ்வரர்/ஆதித்ரனேஸ்வரர்/மிருகண்டீஸ்வரர்
இறைவி : அழகம்மை / பாலாம்பிகை
தல தீர்த்தம் : காயத்ரி ஆறு
தல விருட்சம் : மா மரம்
புராணப் பெயர்: மாந்துறை

சூரியன்,திங்கள்,கன்னுவ முனிவர், ஆதிசங்கரர், மிருகண்டு மகரிஷி வழிபட்ட தலம். பங்குனியில் சூரிய பூஜை. செவ்வாய்க்கிழமை சதுர்த்தி சிறப்பு பூஜை. மானுக்கு அருள் புரிந்த தலமாதலும், மாமரங்கள் நிறைந்த தலமாதலாலும் மாந்துறை என்று பெயர். கைத்தடி ஏந்திய சுந்தரர். சூரியன் தன் மனைவியருடன். திருப்புகழ் பெற்ற 5 அடி உயர முருகன்.திருச்சி அருகிலுள்ள பஞ்ச சிவாலயங்களுள் ஒன்று. சூரியன் தனியே நிற்க கிரகங்கள் சூரியனைப் பார்த்தவாறு.

அருள்மிகு ஆம்ரவனேஸ்வரர் திருக்
கோயில், மாந்துறை அஞ்சல், ஆங்கரை
வழி, லால்குடி வட்டம் - 621703.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 99427 40062

சென்னையிலிருந்து 347 கி.மீ., திருச்சியிலிருந்து 27 கி.மீ., மதுரையிலிருந்து 158 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 73 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சி - லால்குடி சாலையில் லால்குடிக்கு அருகில் அமைந்துள்ளது.

59. அருள்மிகு ஆதிமூலேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 59 வது
இறைவன் : ஆதிமூலேஸ்வரர் / ஆதிமூலநாதர்
இறைவி : மேகலாம்பிகை / மேகலநாயகி
தல தீர்த்தம் : கொள்ளிடம் ஆறு
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: பாற்றுறை

மார்க்கண்டேயருக்காக இறைவன் பாலபிஷேகக் காட்சியருளிய தலம். வீணையேந்திய தட்சிணாமூர்த்தி, அனுக்ஞை விநாயகர். தேவ சபை எனப்படும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த நான்கு தூண்கள் கொண்ட அர்த்த மண்டபம். பங்குனி, புரட்டாசியில் சூரிய பூஜை. கருவறை கோஷ்டத்தில் சங்கர நாராயண.பிரகாரத்தில் வேணுகோபாலர். குழந்தை பாக்கியம் அருளும் அம்பாள். பால் பொங்கிய இடத்தில் தோன்றியதால் பாற்றுறைநாதர் என்றும் பெயர்.

அருள்மிகு ஆதிமூலேஸ்வரர் திருக்கோயில்
திருப்பாற்றுறை அஞ்சல் – 620 005.
திருவானைக்கா வழி,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 0431 – 2060455

சென்னையிலிருந்து 397 கி.மீ., திருச்சியிலிருந்து 15 கி.மீ., மதுரையிலிருந்து 150 கி.மீ., லால்குடியிலிருந்து 32 கி.மீ. திருவானைக்காவிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவானைக்கா – கல்லணை சாலையில் சென்று பனையபுரம் கிராமம் வழியே உள்ளே சென்று கோயிலை அடையலாம்.

60. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 60 வது
இறைவன் : ஜம்புகேஸ்வரர் / ஜம்புநாதர் / வெண்ணாவலீசர்
இறைவி : அகிலாண்டேஸ்வரி
தல தீர்த்தம் : காவிரி தீர்த்தம்
தல விருட்சம் : வெண்ணாவல்
புராணப் பெயர்: ஆனைக்கா

பஞ்சபூத தலங்களுள் அப்பு (நீர்) தலம். 51 சக்தி பீடங்களில் ஞானசக்தி பீடம். சிலந்தி, யானை வழிபட்ட தலம். வெண்ணாவல் அடியில் உள்ளதால் வெண்ணாவலீசர். கோச் செங்கட்சோழன் கட்டிய முதல் மாடக்கோயில்.நின்ற நிலையில் வீணையில்லா சரஸ்வதி பஞ்சமுக விநாயகர், குபேர லிங்கம். நவ துளை ஜன்னல். விபூதி சித்தராக சிவன். ஆதிசங்கரரால் தோடாக அணிவிக்கப் பட்ட ஸ்ரீசக்கரங்கள். திருக்கல்யாணம் கிடையாது. குழந்தை வடிவில் பாலசனி....

அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில்
திருவானைக்கா அஞ்சல்,
திருச்சி வட்டம் – 620 005.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 0431 – 2230257

சென்னையிலிருந்து 340 கி.மீ., திருச்சியிலிருந்து 7 கி.மீ., மதுரையிலிருந்து 155 கி.மீ., தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து அதிக அளவில் பேருந்து வசதிகள் உள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து திருச்சிக்கு சென்றடைந்து அங்கிருந்து எளிதில் கோயிலை அடையலாம்.

61. அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 61 வது

இறைவன் : ஞீலிவனநாதர்/ நீலகண்டேஸ்வரர் / ஆரண்யவிடங்கர்

இறைவி : விசாலாட்சி

தல தீர்த்தம் : அப்பர் தீர்த்தம் உட்பட 7 தீர்த்தங்கள்

தல விருட்சம் : ஞீலிவாழை ஒருவகை கல்வாழை

புராணப் பெயர்: பைஞ்ஞீலி

பங்குனி, புரட்டாசியில் சூரிய பூஜை. திருநாவுக்கரசருக் இறைவன் பொதிசோறு கொடுத்தருளிய தலம். மூலவர் சன்னதிமேல் பத்ர விமானம். குடவரைக்கோயிலாக உள்ள எமதர்மராஜா சன்னதி. வசிஷ்ட முனிவருக்கு இறைவன் காட்சி தந்தருளிய இரத்தின சபையாதலால் மேலச்சிதம்பரம் என்றும் பெயர். சித்திர வடிவில் நடராஜர். இராவண வாயில். நவ கிரகங்களும் ஒன்பது குழிகளாக. வாழை மரமாக மாறிய சப்த கன்னிகள் ....

அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்
திருப்பைஞ்ஞீலி அஞ்சல் - 621 005,
திருச்சி வட்டம்,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 0431 - 2061400

சென்னையிலிருந்து 352 கி.மீ., திருச்சியிலிருந்து 27 கி.மீ., மதுரையிலிருந்து 148 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. திருச்சி-மண்ணச்சநல்லூர் சாலையில் சுமார் 17 கி.மீ. தொலைவில் சமயபுரம் கோயில் எதிரில் செல்லும் சாலையில் சுமார் 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

62. அருள்மிகு மாற்றறிவரதர் திருக்கோயில்



சம்பந்தர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி வடகரை - 62 வது

இறைவன் : மாற்றறிவரதர் / சமீவனேஸ்வரர் / பிரமபுரீஸ்வரர்

இறைவி : பாலாம்பிகை / பாலசௌந்தரி

தல தீர்த்தம் : சிலம்பாறு

தல விருட்சம் : வன்னி மரம்

புராணப் பெயர்: பாச்சிலாச்சிராமம்

சுந்தரருக்கு இறைவன் பொன்முடி வழங்கிய தலம். தலைமுடியைச் சேர்த்துக் கட்டி, சர்பத்தை மிதித்தபடி ஆடும் முயலகன் இல்லா சர்ப்ப நடராஜர். தாளத்துடன் சுந்தரர். கல் தூண் செய்து, நடுவே உருளை சுழலும் வண்ணமிருப்பது அதிசயம். மஞ்சள் கயிறுகட்டி துவாரபாலகியருக்கு வழிபாடு. அம்மன் குழந்தை, திருமண வரம் அருளுகிறாள். அர்த்த ஜாம பூஜை யில் அம்பாளுக்கு முதல் பூஜை. தலவிநாயகர் அனுக்ஞை விநாயகர்.

அருள்மிகு மாற்றறிவரதர் திருக்கோயில்
திருவாசி அஞ்சல் - 621 216,
பிச்சாண்டார்கோயில் வழி,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 0431 - 6574972, 92452 57239

சென்னையிலிருந்து 347 கி.மீ., திருச்சியிலிருந்து 16 கி.மீ., மதுரையிலிருந்து 143 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 88 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சி - குளித்தலை சேலம் சாலையில் அமைந்துள்ளது.

63. அருள்மிகு மரகதாசலேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி வடகரை – 63 வது
இறைவன் : மரகதாசலேஸ்வரர் / மரகதநாதர்
இறைவி : மரகதவல்லி
தல தீர்த்தம் : காவிரி
தல விருட்சம் : புளியமரம்
புராணப் பெயர்: ஈங்கோய்மலை

மாசி சிவராத்திரி மூன்று தினங்கள் சூரியபூஜை. மரக நிறத்தால் ஆன சுயம்பு லிங்கம். அம்மனின் 51 சக்தி பீடத்தில் சாயாசக்தி பீடம். காவிரி வடகரைத் தலங்களில் கடைசித் தலம். அகத்தியர் ஈ வடிவில் பூசித்த தலம். 500 படிகள் கொண்ட மலைக்கோயில்.சிவன் தன் பாதியை சக்திக்கு அருள வாக்கு தந்த சக்திமலை. சங்ககாலப்புலவர் நக்கீரர் ஈங்கோய் எழுபது பாடிய தலம். சிவன் சுந்தரருடன் ஒளிந்து விளையாடிய தலம். 2 துர்க்கை, 2 அர்த்த நாரீஸ்வரர்.

அருள்மிகு மரகதநாதர் திருக்கோயில்
திருவிங்கநாதமலை – 621 209.
மணல்மேடு வழி, தொட்டியம் வட்டம்,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 04326 – 262744, 94439 50031

சென்னையிலிருந்து 347 கி.மீ., திருச்சியிலிருந்து 47 கி.மீ., மதுரையிலிருந்து 143 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. திருச்சி–நாமக்கல், சேலம் சாலையில் 35 கி.மீ. தொலைவில் முசிறிக்கு முன்பு அமைந்துள்ளது. திருச்சியிலிருந்து குளித்தலை வந்து அங்கிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

64. அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில்


அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 1 வது
இறைவன் : இரத்தினகிரீஸ்வரர் / மாணிக்க ஈசர் / முடித்தழும்பர்
இறைவி : கரும்பார்குழலி
தல தீர்த்தம் : காவிரி
தல விருட்சம் : வேம்பு
புராணப் பெயர்: வாட்போக்கி/ ஐயர்மலை / ரத்தினகிரி

சித்திரையில் சூரிய கதிர்கள் 9 துவாரங்கள் வழியே விழும். 1117 படிகள் கொண்ட மலை. காகம் பறக்காத மலை. 12 ஆண்டுக்கு ஒருமுறை இடிபூஜை. நவரத்தனங்களாக இறைவன் அருளுகிறார். மன்னனுக்கு ரத்தினம் கொடுத்த தலம். குழந்தை வரமருளிய சிவனுக்கு சிரசை காணிக்கையாக தந்த வைராக்கிய பெருமாள். தினமும் காவிரியிலிருந்து தீர்த்தம்.இந்திரன்,சயந்தன்,ஆதிசேஷன்,அகத்தியர், வாயு வழிபட்ட தலம். உச்சிகால பூஜை மிகவும் சிறப்பானது...

அருள்மிகு இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில்
ஐயர்மலை, வாட்போக்கி, சிவாயம் அஞ்சல்
– 639 124, வைகநல்லூர் வழி,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 04323 – 245522, 245359

சென்னையிலிருந்து 352 கி.மீ., திருச்சியிலிருந்து 55 கி.மீ., மதுரையிலிருந்து 148 கி.மீ., தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து நாமக்கல், சேலம் சாலையில் சுமார் 35 கி.மீ. தொலைவில் குளித்தலை அடைந்து, அங்கிருந்து 1 கி.மீ. தொலைவு நால்ரோட்டுக்கு இடப்புறம் மணப்பாறை செல்லும் சாலையில் 9 கி.மீ. தொலைவில்.

65. அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில்


அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 2 வது
இறைவன் : கடம்பவனேஸ்வரர் / கடம்பவனநாதர்
இறைவி : பாலகுஜலாம்பாள் / முற்றிலாமுலையாள்
தல தீர்த்தம் : காவிரி தீர்த்தம்
தல விருட்சம் : கடம்பு
புராணப் பெயர்: கடம்பந்துறை

கருவறையின் பின்புறம் சப்தகன்னியர்கள். சப்தகன்னியர்களின் தோஷம் நீக்கிய தலம். சாமுண்டிக்கு சிறப்பு வழிபாடு. துர்க்கை அம்மன் சன்னதி இல்லை.அகத்தியர், கண்ணுவ முனிவர் வழிபட்ட தலம். காவிரிக்கரையில் வடக்கு பார்த்த சன்னதி கொண்ட ஒரே தலம். காலை வழிபாடு சிறப்பானது. கண்வ மகரிஷிக்கு கடம்ப மரத்தில் காட்சி யளித்த தலம். இறைவன் தூம்ர-லோசனை அழித்து சப்தகன்னியருக்கு பாதுகாப்பாக இருப்ப தாக ஐதீகம்....

அருள்மிகு கடம்பவனேஸ்வரர்
திருக்கோயில்
குளித்தலை அஞ்சல் – 639 104.
கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 04323 – 225228

சென்னையிலிருந்து 327 கி.மீ., திருச்சியிலிருந்து 35 கி.மீ., மதுரையிலிருந்து 175 கி.மீ., திருச்சியிலிருந்து நாமக்கல், சேலம் சாலையில் சுமார் 35 கி.மீ. தொலைவில் முசறி எனும் ஊருக்கு முன்னர் அமைந்துள்ளது. தற்போது குளித்தலை என்று அழைக்கப்படுகிறது.

66. அருள்மிகு தாருகாவனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 3 வது
இறைவன் : தாருகாவனேஸ்வரர் / பராய்த்துறைநாதர்
இறைவி : பசும்பொன்மயிலாம்பாள் / ஹேமவர்ணாம்பாள்
தல தீர்த்தம் : காவிரி தீர்த்தம்
தல விருட்சம் : பராய் மரம்
புராணப் பெயர்: பராய்த்துறை (தாருகா – பராய் மரம்)

புரட்டாசி சூரிய பூஜை. பேரழகே உருவாய் பிட்சாடனர் உருவில் தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அடக்கிய தலம். இந்திரன், சப்தரிஷிகள்,குபேரன் வழிபட்ட தலம். ஐப்பசியில் முதல் முழுக்கு நடைபெறுகிறது. காலில் காலணிகளுடன் முருகன். எண்ணற்ற நோய்களைத் தீர்க்கும் பராய் மரம். வைகாசி மாதம் பிரம்மோற்சவத்தில் நடராஜர் மட்டுமே தேரில் வீதியுலா. 2 கி.மீ அகலமுள்ள அகண்ட காவிரி தீர்த்தம்.12 இராசிகளுக்கான கட்டம் மேல்கூரையில்.

அருள்மிகு தாருகாவனேஸ்வரர் திருக்
கோயில், திருப்பராய்த்துறை அஞ்சல்,
திருப்பராய்த்துறை – 639 115,
கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 0431 – 2614063

சென்னையிலிருந்து 345 கி.மீ., திருச்சியிலிருந்து 23 கி.மீ., மதுரையிலிருந்து 170 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 100 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து கரூர், ஈரோடு சாலையில் சுமார் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

67. அருள்மிகு உஜ்ஜீவநாதசுவாமி திருக்கோயில்


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 4 வது
இறைவன் : உஜ்ஜீவநாதசுவாமி / உச்சிநாதர் / முக்தீசர்
இறைவி : அஞ்சனாட்சி / பாலாம்பிகை / மைவிழியம்மை
தல தீர்த்தம் : குடமுருட்டி, ஞானவாவி, எண்கோணம்...
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: கற்குடி / உய்யக்கொண்டான்மலை

மார்க்கண்டேயர் உயிரைக் காப்பதாக வரமளித்த தலம். ஆடி பௌர்ணமியில் மார்க் கண்டேயருக்கு காட்சியளித்த தலம். ஜேஷ்டாதேவியின் சிலை. இராவணன் தம்பி கரன் மிருகண்டு மகரிஷி,பிரம்மா,விஷ்ணு வழிபட்டது. 50 அடி ஓம் வடிவ மலைக்கோயில். 90 நாட்களுக்கு ஒருமுறை என 4 முறை சூரிய பூஜை. தை மாதத்தில் அம்பாள் மீது சூரியக் கதிர்கள் விழும் சிறப்பு. பாதத்தைப் பிடிமானமாகக் கொண்ட நடராஜர் சிலை. மன்னருக்கு ஆனந்த தாண்டவ தரிசனம்.

அருள்மிகு உச்சிநாதர் திருக்கோயில்
உய்யக்கொண்டான் திருமலை அஞ்சல்
சோமரசம்பேட்டை வழி - 620 102.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 94426 28044, 94436 50493

சென்னையிலிருந்து 335 கி.மீ., திருச்சியிலிருந்து 11 கி.மீ., மதுரையிலிருந்து 155 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. திருச்சியிலிருந்து வயலூர் செல்லும் சாலையில் சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. உய்யக்கொண்டான்மலை என்று அழைக்கப்படுகிறது.

68. அருள்மிகு பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 5 வது
இறைவன் : பஞ்சவர்ணேஸ்வரர்
இறைவி : காந்திமதி
தல தீர்த்தம் : சிவ தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: மூக்கீச்சரம்

மதம்பிடித்த வீரவாதித்த சோழனின் பட்டத்து யானையின் தலையில் கோழியாக வந்து கொத்தி மதத்தை அடக்கிய தலம். புகழ்ச்சோழ நாயனார் அவதாரத் தலம். உதங்க முனிவருக்காக பஞ்சவர்ணத்தில் காட்சியளித்த தலம்.பஞ்ச பூதங்களையும் ஒன்றாக்கி இறைவன் உறையும் தலம். ஆடிப் பௌர் ணமியில் உற்சவம். மாணிக்கவாசகர் நிறங்கள் ஓர் ஐந்துடையாய் எனப் பாடி யுள்ளார். கார்க்கோடகன், கத்ரு, கருடன், நாகக்கன்னி வழிபட்டது. மாடக்கோயில்...

அருள்மிகு பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோயில்
உறையூர் அஞ்சல்,
உறையூர் - 620 003,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 0431 - 2768546

சென்னையிலிருந்து 337 கி.மீ., திருச்சியிலிருந்து 2 கி.மீ., மதுரையிலிருந்து 157 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 104 கி.மீ. தொலைவில் உள்ளது. தற்போது உறையூர் என்றழைக்கப்படுகிறது.

69. அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 6 வது
இறைவன் : தாயுமானவர் / மாத்ருபூதேஸ்வரர்
இறைவி : மட்டுவார்குழலி / சுகுந்தகுந்தளாம்பிகை
தல தீர்த்தம் : காவிரி தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: சிராப்பள்ளி

இரத்தினாவதி என்ற பெண்ணிற்கு இறைவனே தாயாக இருந்து மகப்பேறு காலத்தில் உதவிய தலம். திரிசுரன்,வாயு,ஆதிசேஷன்,பிரம்மா,இந்திரன்,ராமன்,நாகக்கன்னியர், அனுமன் வழிபட்ட தலம். பங்குனி சூரிய பூஜை. பள்ளத்திற்குள் பாதாள ஐயனார். தாயுமானவர் வாழ்ந்த தலம். தெட்சிணா மூர்த்தி 8 சீடர்களுடன் தர்ப்பாசனத்தில். 64 மூர்த்தங்களுள் கங்காள மூர்த்தம். 2 மலைக்குகை, உச்சிப்பிள்ளையார். சுகப் பிரசவம் அருளும் அம்மன்...

அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில்
மலைக்கோட்டை,
திருச்சி வட்டம் – 620 002.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 0431 – 2704621, 2710484

சென்னையிலிருந்து 330 கி.மீ., திருச்சியிலிருந்து 2 கி.மீ., மதுரையிலிருந்து 150 கி.மீ., கும்பகோணத்திற்கு 104 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பேருந்துகள், இரயில்கள், விமானங்கள் இயக்கப்படுகின்றன. திருச்சி விமான நிலையம்.

70. அருள்மிகு எறும்பீஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 7 வது
இறைவன் : மதுவனேஸ்வரர் / மாணிக்கநாதர் / பிப்பிலிகேஸ்வரர்
இறைவி : மதுவனேஸ்வரி / நறுங்குழல்நாயகி / இரத்தினாம்பாள்
தல தீர்த்தம் : பிரம தீர்த்தம்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: எறும்பியூர்

தாரகாசுரன் எனும் அசுரனின் கண்ணில் படாதிருப்பதற்காக தேவர்கள் எறும்பு வடிவில் வந்து வழிபட்ட தலம். மணலால் ஆன லிங்கம் சற்றே சாய்ந்தும், இரண்டு பிளவுகளுடன் சிவசக்தி சொரூபமாக காட்சியளிக்கிறார். 125 படிகள் கொண்ட மலைமீது கோயில். சிவன், விஷ்ணு இணைந்த சங்கரநாராயணர்,சொர்ணகால பைரவர், கொளுசு அணிந்த நடராஜர். திருமால், பிரம்மன், நைமிசக்காட்டு ரிஷிகள் வழி பட்ட தலம். சூரியன் மனைவி எதிரெதிரில்.

அருள்மிகு எறும்பீஸ்வரர் திருக்கோயில்
திருவெறும்பூர் அஞ்சல்,
திருவெறும்பூர் – 620 013,
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 0431 – 2510241, 6574738

சென்னையிலிருந்து 335 கி.மீ., திருச்சியிலிருந்து 11 கி.மீ., மதுரையிலிருந்து 155 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 90 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சி – தஞ்சை சாலையில் அமைந்துள்ளது.

71. அருள்மிகு நெடுங்களநாதர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 8 வது
இறைவன் : நித்யசுந்தரேஸ்வரர் / நெடுங்களநாதர்
இறைவி : ஒப்பிலாநாயகி / மங்களநாயகி
தல தீர்த்தம் : அகத்தியர், சுந்தரர் தீர்த்தங்கள்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: நெடுங்களம்

அகத்தியர் பூஜித்த தலம். சக்திக்கு இடதுபாகத்தைக் கொடுத்து இறைவன் சற்றே தள்ளி இருப்பது சிறப்பு.கருவறையில் அம்பாள் இறைவனோடு உறைவதாக ஐதீகம். அர்த்த நாரீஸ்வரராகக் காட்சி. கருவறை கோபுரத்தில் 2 கலசங்கள். ஆடி 7–12 சூரிய பூஜை. சித்தாசனத்தில் மான்மழு, சின்முத்திரை, விபூதிப்பெட்டகத்துடன் யோக தெட்சிணா மூர்த்தி. சோழர்காலத்து கல் உரல். உபய நாச்சியார், வரதராஜப்பெருமாள். சுந்தரத் தீர்த்தக்கரையில் கருப்பண்ணசுவாமி.

அருள்மிகு நெடுங்களநாதர் திருக்கோயில்
திருநெடுங்களம் அஞ்சல்,
திருச்சி வட்டம் – 620 015.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
: 0431 – 2520126, 94437 45009

சென்னையிலிருந்து 385 கி.மீ., திருச்சியிலிருந்து 22 கி.மீ., மதுரையிலிருந்து 165 கி.மீ., கும்பகோணத்திற்கு 87 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருச்சி – தஞ்சாவூர் சாலையில் துவாக்குடி என்னும் ஊரை அடைந்து அங்கிருந்து பிரியும் சாலையில் சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

72. அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 9 வது
இறைவன் : அக்னீஸ்வரர் / தீயாடியப்பர்
இறைவி : அழகம்மை / சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : அக்னி, காவிரி தீர்த்தங்கள்
தல விருட்சம் : வன்னி, வில்வம்
புராணப் பெயர்: மேலைத் திருக்காட்டுப்பள்ளி

அக்னி வழிபட்ட தலம். சூரியனைப் பார்த்தபடி கிரகங்கள். சூரியன்,திருமால்,பிரம்மன், பகீரதன்,உறையூர் அரசி வழிபட்ட தலம். பிரம்மாவிற்கு தனிச்சன்னதி. பிரம்மா சாபம் நீங்கப்பெற்ற தலம். மகாவிஷ்ணு ஸ்ரீனிவாசப்பெருமாள் என்ற திருநாமத்துடன் அருள் புரிகிறார்.2–ம் பிரகார தெட்சிணாமூர்த்தி கீழ் துவாரம் வழியே மற்றோர் தெட்சிணா மூர்த்தி தரிசனம். குரங்காசனத்தில் யோக தெட்சிணாமூர்த்தி. சிவலிங்கத்தின் சிரசில் ஐந்து நாகங்கள் படமெடுக்கும் காட்சி.

அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்
திருக்காட்டுப்பள்ளி அஞ்சல்,
திருக்காட்டுப்பள்ளி – 613 104,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 94423 47433

சென்னையிலிருந்து 375 கி.மீ., திருச்சியிலிருந்து 37 கி.மீ., மதுரையிலிருந்து 200 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 52 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவையாறு – கல்லணை செல்லும் சாலையில் சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ளது.

73. அருள்மிகு ஆத்மநாதேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 10 வது
இறைவன் : ஆத்மநாதேஸ்வரர்
இறைவி : ஞானாம்பிகை
தல தீர்த்தம் : காவிரி
தல விருட்சம் : ஆல மரம்
புராணப் பெயர்: ஆலம்பொழில்

காசிபர் மகரிஷி, அஷ்ட வசுக்கள் வழிபட்ட தலம். ஏழுர் திருவிழா நடைபெறும் சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. மேதா தெட்சிணாமூர்த்தி. ஞானம் அருளும் அம்பிகை. இந்திரன் சாப விமோசனம் பெற்ற திருத்தலம். ஐப்பசி அன்னாபிஷேகம். வேண்டுவோர்க்கு வேண்டும் வரமருளும் துர்க்கையம்மன். கல்வெட்டு, திருநாவுக்கரசர் பாடல்களைக் கொண்டு ஊரின் பெயர் பரம்பைக்குடி என்றும், கோயில் ஆலம்பொழில் என்றும் அறியமுடிகிறது.

அருள்மிகு ஆத்மநாதேஸ்வரர் திருக்கோயில்
திருவாலம்பொழில், திருக்கண்டியூர் வழி,
திருவையாறு வட்டம் – 613 103.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0431 – 2520126, 94437 45009

சென்னையிலிருந்து 365 கி.மீ., மதுரையிலிருந்து 190 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவையாறு – திருக்காட்டுப்பள்ளி சாலையில் சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. தஞ்சையிலிருந்து வருபவர்கள் திருக்கண்டியூர் வந்து இடது பக்க சாலையின் வழியே சென்று கோயிலை அடையலாம்.

74. அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 11 வது
இறைவன் : புஷ்பவனேஸ்வரர் / ஆதிபுராணர் / பொய்யிலியர்
இறைவி : சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: பூந்துருத்தி

சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. அப்பரால் மடம் அமைக்கப்பட்ட தலம். அப்பரும், சம்பந்தரும் உழவாரப்பணி செய்த தலம். சம்பந்தருக்காக நந்தி விலகிய தலம். அப்பர் சம்பந்தரை சுமந்து வந்த தலம். ஒற்றைக்காலில் தவம் செய்யும் துர்க்கை. அமர்ந்த நிலையில் அப்பர். காசிபரிஷி, இந்திரன் வழிபட்ட தலம். கழுகு உருப்பெற்ற விஞ்ஞயர் இருவர் சாப விமோசனம் பெற்றது. மனைவியருடன் சுந்தரர். பூந்துருத்தி காடவர்கோன் அவதாரத் தலம்.

அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்
திருப்பூந்துருத்தி அஞ்சல், கண்டியூர்
வழி, திருவையாறு வட்டம் – 613 103,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 94866 71417

சென்னையிலிருந்து 360 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 13 கி.மீ., மதுரையிலிருந்து 195 கி.மீ., தொலைவில் உள்ளது. திருவையாறு – திருக்காட்டுப்பள்ளி சாலையில் சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. தஞ்சையிலிருந்து வருபவர்கள் திருக்கண்டியூர் வந்து இடது பக்க சாலையின் வழியே சுமார் 3 கி.மீ. சென்று கோயிலை அடையலாம்.

75. அருள்மிகு பிரமசிரகண்டீஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 12 வது

இறைவன் : பிரமசிரகண்டீஸ்வரர் / வீரட்டேஸ்வரர்

இறைவி : மங்களநாயகி

தல தீர்த்தம் : நந்தி, தட்ச, பிரம, குடமுருட்டி தீர்த்தங்கள்

தல விருட்சம் : வில்வ மரம்

புராணப் பெயர்: கண்டியூர்

மாசி 13,14,15 சூரிய பூஜை. அட்டவீரட்ட தலங்களுள் ஒன்று. சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. சாதாதாப முனிவருக்காக கயிலையிலிருந்து வில்வமரம் அருளப்பெற்றதால் ஆதிவில்வாரண்யம். துவாரபாலகர்களாக ஸ்கந்தகுரு, ஞானகுரு.பிரம்மா, சரஸ்வதி தனிச்சன்னதியில். சூரியன் மனைவியருடன். ஒரே சன்னதியில் ஏழு விநாயகர்கள். மாப்பிள்ளை விருந்து அளிக்கும் தலம். ஐம்முகத்தின் பொலிவை நான்முகத்தில் அளித்தது.சதாசபருக்கு காட்சியளித்தது.

அருள்மிகு பிரமசிரக்கண்டீஸ்வரர்
திருக்கோயில், திருக்கண்டியூர் அஞ்சல்
திருவையாறு வழி - 613 202.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04362 - 262322, 98653 02750

சென்னையிலிருந்து 357 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 10 கி.மீ., மதுரையிலிருந்து 192 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. திருவையாறு - திருக்காட்டுப்பள்ளி சாலையில் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

76. அருள்மிகு சோற்றுத்துறைநாதர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 13 வது

இறைவன் : தொலையாச்செல்வர் / ஓதவனேஸ்வரர்

இறைவி : அன்னபூரணி / ஒப்பிலாம்பிகை

தல தீர்த்தம் : காவிரி தீர்த்தம்

தல விருட்சம் : வில்வம்

புராணப் பெயர்: சோற்றுத்துறை

காசிக்கு அடுத்து இறைவன் பசிப்பிணி தீர்க்க அட்சயப்பாத்திரம் வழங்கிய தலம். சப்தஸ்தானங்களுள் ஒன்று. பிறவிப்பிணி தீர்த்து வீடுபேறு அருளும் தலம்.இந்திரன் வழிபட்டு பதவி பெற்றது. கவுதமர் வழிபட்டு முக்தி பெற்றது. நந்தி,சுயம்பிரகாசையை எதிர்கொண்டு அழைக்கும் நிகழ்ச்சி. கௌதமர் திருவுருவம். ஏழூர் வலம்வரும் பக்தர்களுக்கு அன்னம்பாலிப்பு. பெரிய முருகப்பெருமான். திருமணக்கோலத்தில் அம்பாள்.கௌதமர் வழிபட்ட காட்சி சிற்பம்

அருள்மிகு சோற்றுத்துறைநாதர் திருக்கோயில்
திருச்சோற்றுத்துறை, கண்டியூர் வழி,
திருவையாறு வட்டம் - 613 202,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04362 - 262814, 94435 61731

சென்னையிலிருந்து 357 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 14 கி.மீ., மதுரையிலிருந்து 192 கி.மீ., தொலைவில் உள்ளது. திருவையாற்றிலிருந்து வரும்போது திருக்கண்டியூரைக் கடந்து இடதுபுற சாலையில் சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

77. அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 14 வது
இறைவன் : வேதபுரீஸ்வரர் / வாழைமடுநாதர்
இறைவி : மங்கையர்க்கரசி
தல தீர்த்தம் : வேத தீர்த்தம்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: வேதிகுடி (வேதி = பிரம்மா)

சிவனின் வலதுபுறம் அம்மன் இணைந்துள்ள அர்த்தநாரீஸ்வரர். சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. பிரம்மா,சூரியன்,குபேரன் வழிபட்ட தலம். தலைசாய்த்து வேதம் கேட்கும் வேத விநாயகர். வாழைமடுவில் தோன்றிய ஈசன். பங்குனி 13,14,15-ல் சூரிய பூஜை. திருமணத்தடைகள் நீக்கும் அம்பாள். பிரம்மா மற்றும் வேதங்களின் தோஷம் நீக்கிய சிவன். 108 லிங்கங்கள். லட்சுமி நாராயணர், ஆஞ்சநேயர். நால்வகை வேதங்கள் அறிந்த பலர் வாழ்ந்த தலம்...

அருள்மிகு வேதபுரீஸ்வரர்
திருக்கோயில், திருவேதிகுடி,
கண்டியூர் அஞ்சல் – 613 202.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 93451 04187

சென்னையிலிருந்து 357 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 15 கி.மீ., மதுரையிலிருந்து 192 கி.மீ., திருக்காட்டுப்பள்ளியிலிருந்து 23 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவையாற்றிலிருந்து வரும்போது திருக்கண்டியூரைக் கடந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் சென்று இத்தலத்தை அடையலாம்.

78. அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 15 வது
இறைவன் : வசிஷ்டேஸ்வரர்/பசுபதிநாதர்/தேனுபுரீஸ்வரர்/நாகேஸ்வரர்
இறைவி : சுகுந்தகுந்தளாம்பிகை / உலகநாயகி
தல தீர்த்தம் : சூல தீர்த்தம்
தல விருட்சம் : சண்பக மரம்
புராணப் பெயர்: தென்குடித்திட்டை

காலபைரவரின் பிரம்மஹத்தி தோஷம் நீக்கியவர். ராமபிரானின் குலகுரு வசிஷ்டர் வழிபட்ட தலம். ராஜ குருவாக குருபகவான் வீற்றிருக்கும் குரு தலம். தஞ்சை பெரியக்கோயிலை பிரதான மாகக் கொண்ட சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. ஆவணி 15,16,17 மற்றும் பங்குனி 25,26,27-ல் சூரிய பூஜை. நித்யாபிஷேகமாக மூலவர் திருமேனியில் இந்திரனின் வழிபாடாகச் சொல்லப்படும் சொட்டு சொட்டாக நீர்த் துளி இன்றளவும் விழும் அதிசயம்....

அருள்மிகு வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்
திட்டை, பசுபதிகோயில்
அஞ்சல் – 614 206,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04362 – 252858, 94434 45864

சென்னையிலிருந்து 380 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 10 கி.மீ., மதுரையிலிருந்து 205 கி.மீ., மயிலாடுதுறையிலிருந்து 71 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது. தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை சாலையில் சுமார் 9 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம்-பாபநாசம்-மேலட்டூர் வழியிலும் செல்லலாம்.

79. அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 16 வது
இறைவன் : பசுபதீஸ்வரர் / பிரமபுரீஸ்வரர் / ஆலந்துறைநாதர்
இறைவி : அல்லியங்கோதை / சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : திருக்குளம்
தல விருட்சம் : ஆலமரம்
புராணப் பெயர்: புள்ளமங்கை

சக்கரப்பள்ளியின் சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று.சப்தகன்னியர்கள்,காமதேனு வழிபட்ட தலம். சக்திவாய்ந்த துர்க்கையின் மகிஷாசுரமர்த்தினி தோற்றம். சோழர்கால கலைப் பெட்டகம். கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில். நவக்கிரகங்களுக்கு நடுவில் நந்தி.கோபுரங்கள் மீது கழுகுகள் உறைகின்றன.வெள்ளத்தின் பேரழிவிற்கு பிறகு பராந்தகனின் திருப்பணி. அர்த்த மண்டபத்தில் அநேகச் சிற்பங்கள். பசு இறைவன் மீது பால்சொறியும் காட்சி...

அருள்மிகு பசுபதீஸ்வரர்
திருக்கோயில், ,
பசுபதிகோயில் அஞ்சல் - 614 206,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04374-242041,94433 62563

சென்னையிலிருந்து 381 கி.மீ., திருச்சியிலிருந்து 74 கி.மீ., மதுரையிலிருந்து 204 கி.மீ., கும்பகோணத்திற்கு 25 கி.மீ. தஞ்சாவூரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - தஞ்சாவூர் செல்லும் சாலையில் அய்யம்பேட்டை அடுத்து கண்டியூர் பாதையில் அமைந்துள்ளது.

80. அருள்மிகு சக்கரவாகேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 17 வது
இறைவன் : சக்கரவாகேஸ்வரர்
இறைவி : தேவநாயகி
தல தீர்த்தம் : காவிரி, காக தீர்த்தம்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: சக்கரப்பள்ளி

பஞ்ச ஆரண்ய தலங்களுள் ஒன்று. கல்யாணக் கோலத்தில் சன்னதி. மூவருள் யார் பெரியவர் என்று போட்டி எழுந்தபோது மகாவிஷ்ணு வராக (பன்றி) வடிவம் தாங்கி பூமியைத் தோண்டி பாதளம் சென்றதாக வரலாறு. அப்படி அவர் தோண்டிய துவாரம் இப்போதும் கருவறையின் முன்பு உள்ளது. இறைவன் வராகத்தின் ஒரு கொம்பை முறித்து தன் மார்பில் அணிந்து கொண்டதாக வரலாறு. அம்மன் துர்க்கை அம்சத்துடன். வியாக்ரபாதர், பதஞ்சலியுடன் நடராஜர்.

அருள்மிகு பாதாளேஸ்வரர் திருக்-கோயில், அரித்வாரமங்களம் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம் – 609 503,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 94421 75441

சென்னையிலிருந்து 270 கி.மீ., திருச்சியிலிருந்து 90 கி.மீ., மதுரையிலிருந்து 226 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 31 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 22 கி.மீ. நீடாமங்கலத்திலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணம் மன்னார்குடி பாதையில் அமராவதியிலிருந்து அம்மாப்பேட்டை வழி பெருங்குடியைக் கடந்து உள்ளது.

163. அருள்மிகு சாட்சிநாதர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 100 வது
இறைவன் : சாட்சிநாதர்
இறைவி : சௌந்தரநாயகி / சௌந்தரவல்லி
தல தீர்த்தம் : சந்திர தீர்த்தம்
தல விருட்சம் : பாதிரி மரம்
புராணப் பெயர்: அவளிவணல்லூர்

பஞ்ச ஆரண்யத் தலங்களுள் ஒன்று. கருவறையில் இறைவன் ரிஷபாரூடராகக் காட்சி. சிவாச்சாரியாரின் மகள்களுள்,மூத்தவள் நோயின் தன்மையால் உருக்குலைந்து,கண் பார்வை இழந்து இருக்கவே, அவளது கணவன் இளையவளை தன் மனைவி என வாதிட இறைவனே சாட்சியாக இருந்து அவள் இவளென உணர்த்திய தலம். மூத்தவள் இறையருளால்,இழந்த பொலிவு பெற்றாள். அவள்,இவள் சிலைகள். வராகர் வழிபட்ட தலம்.கண்வ முனிவர்,வீரபத்திரர்...

அருள்மிகு சாட்சிநாதர் திருக்கோயில்
அவளிவணல்லூர், அரித்வாரமங்கலம்
அஞ்சல், கும்பகோணம் வட்டம் – 612 802,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04374 – 316911

சென்னையிலிருந்து 270 கி.மீ., திருச்சியிலிருந்து 90 கி.மீ., மதுரையிலிருந்து 226 கி.மீ., கும்பகோணத்திற்கு 7 கி.மீ. நாச்சியார்கோயிலிலிருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் – மன்னார்குடி சாலையில் அரித்துவாரமங்கலத்தி லிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

164. அருள்மிகு பாஸ்கரேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 101 வது
இறைவன் : பாஸ்கரேஸ்வரர் / பரிதியப்பர்
இறைவி : மங்களாம்பிகை / மங்களநாயகி
தல தீர்த்தம் : சூரிய, சந்திர, கருங்குழி தீர்த்தங்கள்
தல விருட்சம் : அரச மரம்
புராணப் பெயர்: பரிதிநியமம் (பரிதி = சூரியன்)

பங்குனி 18,19,20 சூரிய பூஜை.சூரியன் வழிபட்ட தலங்களுள் ஒன்று. சிபிச்சக்கர வர்த்தியால் கட்டப் பெற்ற ஆலயம்.மூலவருக்கு எதிரே சூரியன் நின்ற நிலையில் சிவதரிசனம் செய்வது சிறப்பு. மார்க்கண்டேயர் அருவ வடிவில் தினமும் வழிபடுவதாக ஐதீகம். ஆயுள் விருத்தி தலம். பிரமசர்மா, அவர் மனைவி சுசீலை கிளி உருவம் நீங்கப் பெற்ற தலம். கோஷ்டத்தில் மகாவிஷ்ணு, ஆஞ்சநேயர். பிதுர் தோஷ பரிகாரத் தலம்.முருகப்பெருமான் சிறப்பு வழிபாடு.

அருள்மிகு பாஸ்கரேஸ்வரர் திருக்-
கோயில், பரிதியப்பர் கோயில்,
மேலவுளூர்அஞ்சல் – 614 904,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04372 – 256910

சென்னையிலிருந்து 290 கி.மீ., திருச்சியிலிருந்து 112 கி.மீ., மதுரையிலிருந்து 242 கி.மீ., தஞ்சாவூரிலிருந்து 17 கி.மீ. பட்டுக்கோட்டையிலிருந்து 34 கி.மீ. கும்பகோணத்தி லிருந்து 46 கி.மீ. தொலைவில் உள்ளது. தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை சாலையில் உழுவூர் வழியாக சென்றால் சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

165. அருள்மிகு வெண்ணிநாதர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 102 வது
இறைவன் : வெண்ணிநாதர் / வெண்ணிக்கரும்பேஸ்வரர்
இறைவி : சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : சூரிய, சந்திர தீர்த்தம்
தல விருட்சம் : நந்தியாவர்த்தம்
புராணப் பெயர்: வெண்ணி (வெண்ணி = நந்தியாவர்த்தம்)

பங்குனி 2,3,4 சூரிய பூஜை. புறநானூற்றில் இடம்பெறும் வெண்ணிப்போரில் வெற்றிகண்ட கரிகாற் சோழன் திருப்பணிகள். கரும்புக்கழிகளை சேர்த்தது போன்ற இறைவன் திருமேனி. நர்த்தன விநாயகர். இத்தல இறைவனை வணங்குவோர்க்கு சர்க்கரை நோய் நீங்கும் என்பது நம்பிக்கை. கரிகாற் சோழன் வழிபட்ட பிடாரி அம்மன். 4 யுகங்கண்ட தலம். சங்ககாலப்புலவர் வெண்ணிக்குயத்தியார் அவதாரத் தலம். முசுகுந்தர் திருப்பணிகள்.

அருள்மிகு வெண்ணிநாதர் திருக்-
கோயில், வெண்ணி அஞ்சல்,
நீடாமங்கலம் வட்டம் - 614 403,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 98422 94416, 99524 92583

சென்னையிலிருந்து 290 கி.மீ., திருச்சியிலிருந்து 112 கி.மீ., மதுரையிலிருந்து 242 கி.மீ., கும்பகோணத்திற்கு 31 கி.மீ. தஞ்சாவூரிலிருந்து 26 கி.மீ. திருவாரூரிலிருந்து 36 கி.மீ. நீடாமங்கலத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தஞ்சாவூர் - நீடாமங்கலம் சாலையில் சென்று கோயில்வெண்ணி என்ற ஊரிலிருந்து 0.5 கி.மீ.

166. அருள்மிகு புஷ்பவனநாதர் திருக்கோயில்



அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 103 வது
இறைவன் : புஷ்பவனநாதர் / சதுரங்க வல்லபநாதர்
இறைவி : கற்பகவல்லி, இராஜராஜேஸ்வரி (இரண்டு அம்பாள்)
தல தீர்த்தம் : க்ஷீரபுஷ்கரணி, கிருஷ்ணகுஷ்டஹர, பாமணி தீர்த்தங்கள்
தல விருட்சம் : பலாமரம்
புராணப் பெயர்: பூவனூர்

வசுதேவன்,மனைவி காந்திமதி இருவருக்கும் தவப்புதல்வியாகப் பிறந்த குழந்தைக்கு ராஜராஜேஸ்வரி என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். சதுரங்கத்தில் தேர்ச்சி பெற்ற அவரை, சித்தர் வடிவம் பூண்டு வெற்றி கண்டு இறைவன் மணம்முடித்த தலம்.அம்மனின் வளர்ப்புத்தாயாக இருந்த சாமுண்டிக்கு இங்கு சிறப்பு வழிபாடு.விஷக்கடி,எலிக்கடி நீங்க வேர்கட்டி சாமுண்டீஸ்வரி வழிபாடு. தர்மவர்மன் கருங்குஷ்ட நோய் நீங்கியது. சுகப்பிரம்மரிஷி மலர்வனம் வைத்து வழிபட்டது.

அருள்மிகு புஷ்பவனநாதர்
திருக்கோயில், பூவனூர்,
பூவனூர் அஞ்சல் - 612 803,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04367 - 261182, 98653 28552

சென்னையிலிருந்து 290 கி.மீ., திருச்சியிலிருந்து 112 கி.மீ., மதுரையிலிருந்து 242 கி.மீ., கும்பகோணத்திற்கு 28 கி.மீ. மன்னார்குடியிலிருந்து 12 கி.மீ. நீடாமங்கலத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவாரூர் - நீடாமங்கலம் வழியே மன்னார்குடி சாலையில் பாமணி ஆற்றைக் கடந்து செல்ல கோயிலை அடையலாம்.

167. அருள்மிகு சர்ப்பபுரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 104 வது
இறைவன் : சர்ப்பபுரீஸ்வரர் / நாகநாதர்
இறைவி : அமிர்தநாயகி
தல தீர்த்தம் : நாக தீர்த்தம்
தல விருட்சம் : மாமரம்
புராணப் பெயர்: பாதாளேச்சுரம்

புற்றுமண்ணால் உருவாகிய சுயம்பு லிங்கம். புற்றுமண் லிங்கத்திற்கு அபிஷேகம் நடைபெறுவது தனிச்சிறப்பு. சுகல முனிவர் வழிபட்ட தலம். காமதேனு பால் சொரிந்து வழிபட்ட தலம். காமதேனு முட்டிய மூன்று வடுக்களுடன் காட்சி. பாதளத்திலிருந்து ஆதி சேஷன் தனஞ்செய முனிவராக வந்து வழி பட்ட தலம். மனித முகம், பாம்பு உடலுடன் ஆதிசேஷன். சிம்ம தெட்சிணா மூர்த்தி. 1000 தலையுடைய ஆதிசேஷன் வழிபட்டதால் சகல தோஷங்களும் நீக்கும் தலம்.

அருள்மிகு சர்ப்பபுரீஸ்வரர் திருக்-
கோயில், பாமணி அஞ்சல்,
மன்னார்குடி வட்டம் - 614 014,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 93606 85073, 97885 44971

சென்னையிலிருந்து 273 கி.மீ., திருச்சியிலிருந்து 95 கி.மீ., மதுரையிலிருந்து 224 கி.மீ., கும்பகோணத்திற்கு 39 கி.மீ. மன்னார்குடியிலிருந்து 2 கி.மீ. நாகப்பட்டினத்தி லிருந்து 53 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மன்னார்குடியிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

168. அருள்மிகு பாரிஜாதவனநாதர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 105 வது
இறைவன் : பாரிஜாதவனேஸ்வரர் / களர்முளைநாதர்
இறைவி : அமுதவல்லி / இளங்கொம்பன்னாள் / அழகேஸ்வரி
தல தீர்த்தம் : துர்வாச, பிரம, ஞான, ருத்ர தீர்த்தங்கள்
தல விருட்சம் : பாரிஜாதம் (பவள மல்லிகை)
புராணப் பெயர்: களர் (களர் = தாண்டவம்)

துர்வாச முனிவருக்கு பிரம தாண்டவ தரிசனம் அருளிய தலம்.நடராஜர் சன்னதியில் கைகூப்பிய நிலையில் துர்வாசர். துர்வாசர் இக்கோயிலுக்கு முதல் கும்பாபிஷேகம். குரு வடிவாய் 60,000 முனிவர்களுக்கும்,துர்வாசருக்கும் பஞ்சாட்சர மந்திர உபதேசம் அருளிய முருகன். தனிச்சன்னதியில் அகோர வீரபத்திரர். சிம்ம வாகனத்தில் அஷ்டபுஜ துர்க்கை. துர்வாசர் ஏற்படுத்திய பாரிஜாத வனத்தில் தேவதட்சனைக் கொண்டு ஏற்படுத்திய தலம்...

அருள்மிகு பாரிஜாதவனேஸ்வரர்
திருக்கோயில், திருக்களர்,
திருக்களர் அஞ்சல் - 614 720,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04367 - 279374, 9843058499

சென்னையிலிருந்து 292 கி.மீ., திருச்சியிலிருந்து 114 கி.மீ., மதுரையிலிருந்து 243 கி.மீ., கும்பகோணத்திற்கு 60 கி.மீ. மன்னார்குடியிலிருந்து 22 கி.மீ. கோட்டூரிலிருந்து 7 கி.மீ. திருத்துறைப்பூண்டியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருத் துறைப்பூண்டி-மன்னார்குடி சாலையில் உள்ளது.

169. அருள்மிகு ஸ்வர்ணதாபனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 106 வது
இறைவன் : ஸ்வர்ணஸ்தாபனேஸ்வரர் / பொன்வைத்தநாதர்
இறைவி : அகிலாண்டேஸ்வரி
தல தீர்த்தம் : சுவர்ண புஷ்கரணி
தல விருட்சம் : ஆத்தி மரம்
புராணப் பெயர்: சிற்றேமம்

பிரம்மரிஷி, சித்தர்கள் தேனீக்களாக மாறிவந்து இறைவனை வழிபட்ட தலம். தேன் கூட்டிற்கு தினமும் பூஜை.அன்பிற்பிரியாள் என்ற பக்தைக்கு பொன் வைத்து கொடுத்து, பிரசவம் பார்த்து, கற்புநெறி தவறாதவள் என்றுணர்த்த கோயில் கதவை தானே திறக்க, தலவிருட்சம் கோயில் முன் வர, பலிபீடம் நந்திக்கு முன் இருக்க அருளிய தலம். சுகப்பிரசவம் வேண்டி வழிபாடு. ஆத்திமர விநாயகர்,கன்னிவிநாயகர்,பிரமரிஷி, அன்பிற்பிரியாள்,வணிகர் உற்சவர்களாக.

அருள்மிகு ஸ்வர்ணதாபனேஸ்வரர்
திருக்கோயில், சித்தாய்மூர் அஞ்சல்,
பொன்னிறை – 610 203,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04366 – 247846, 94427 67565

சென்னையிலிருந்து 273 கி.மீ., திருச்சியிலிருந்து 95 கி.மீ., மதுரையிலிருந்து 224 கி.மீ., கும்பகோணத்திற்கு 67 கி.மீ. மன்னார்குடியிலிருந்து 43 கி.மீ. திருவாரூரி லிருந்து 23 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவாரூர்-திருத்துறைப்பூண்டி சாலையில் ஆலத்தம்பாடி கடந்து 3 கி.மீ. தொலைவில் செண்பக நதியோரம் உள்ளது

170. அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 107 வது
இறைவன் : மந்திரபுரீஸ்வரர் / சூதுவனப்பெருமான்
இறைவி : பிருகந்நாயகி / பெரியநாயகி
தல தீர்த்தம் : அனும,மார்க்கண்டேய,கவுதம,குஞ்சித,நெல்லி தீர்த்தங்கள்
தல விருட்சம் : மாமரம்
புராணப் பெயர்: உசாத்தானம் (உசாவுதல் = கேட்டுத் தெரிந்து கொள்ளுதல்)

இராமர் இலங்கை செல்லவும்,போரில் வெற்றி பெறவும் மந்திர உபதேசம் பெற்ற தலம். கடலுக்கு நடுவே பாலம் கட்ட ஆலோசனைகள் கேட்ட தலம். எமன் வீசிய பாசக் கயிற்றின் வடுக்கள் நீங்க மார்க்கண்டேயன் வழிபட்ட தலம். எருமையில்லா துர்க்கை. பாற்கடலில் அமுதம் கடையும் முன்பே தோன்றியது. சூதவன விநாயகர். அமுதம் வீழ்ந்து வெண்மையாக மாறிய லிங்கம். 3 தலை ஜ்வரஹரேஸ்வரர். விசுவாமித்தி ரருக்கு சிதம்பர நடனம் காட்டிய கோயிலூர்.

அருள்மிகு மந்திரபுரீஸ்வரர் திருக்கோயில்
கோவிலூர், முத்துப்பேட்டை அஞ்சல்
– 614 704, திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04369 – 262014, 99420 39494

சென்னையிலிருந்து 315 கி.மீ., திருச்சியிலிருந்து 112 கி.மீ., மதுரையிலிருந்து 210 கி.மீ., மன்னார்குடியிலிருந்து 40 கி.மீ. திருத்துறைப்பூண்டியிலிருந்து 27 கி.மீ. வேதாரண்யத்திலிருந்து 47 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. முத்துப்பேட்டை – மன்னார்குடி சாலையில் முத்துப்பேட்டையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

171. அருள்மிகு சற்குணேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 108 வது
இறைவன் : சற்குணேஸ்வரர் / இடும்பாவனேஸ்வரர் / சற்குணநாதர்
இறைவி : கல்யாணேஸ்வரி / மங்களவல்லி
தல தீர்த்தம் : பிரம, அகத்திய, எம தீர்த்தங்கள்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: இடும்பாவனம்

மகாபாரதக்காலத்தில் இடும்பன் வழிபட்ட தலம். பிரமன் சத்வ குணங்கள் வேண்டிப் பெற்ற தலம். அகத்தியருக்கு மணக்கோலம் காட்டிய தலம். கருவறையில் திருமணக் காட்சி. அரக்கனாக இருந்த தேவசருமன், அவர் மனைவிக்கும் அகத்தியர் இறையருளால் முக்தி. வெள்ளை விநாயகர். குணபரன் தந்தையின் அஸ்தி மலராக மாற்றிய பிதுர் முக்தி தலம். ராவணனை வெல்ல ராமன் வழிபட்டது. எமன் வழிபட்டது. ஒரே கல் கஜலெட்சுமி,தெட்சிணாமூர்த்தி,சனி....

அருள்மிகு சற்குணேஸ்வரர்
திருக்கோயில், இடும்பாவனம்,
இடும்பாவனம் அஞ்சல் - 614 735,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04369 - 240200

சென்னையிலிருந்து 320 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 215 கி.மீ., திருத்துறைப்பூண்டியிலிருந்து 14 கி.மீ. வேதாரண்யத்திலிருந்து 31 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. முத்துப்பேட்டை - வேதாரண்யம் சாலையில் 13 கி.மீ. தொலைவில் உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து தொண்டியக்காடு வழி வரலாம்

172. அருள்மிகு கற்பகநாதர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 109 வது
இறைவன் : கற்பகேஸ்வரர் / கற்பகநாதர்
இறைவி : சௌந்தரநாயகி / பாலசௌந்தரி
தல தீர்த்தம் : விநாயக தீர்த்தம்
தல விருட்சம் : பலா மரம்
புராணப் பெயர்: கடிக்குளம்

கார்த்திகாசூரன் என்பவன் பூஜை செய்து வேண்டிய வரங்கள் யாவும் கற்பக மரத்தைப் போன்று தந்தருளியதால் கற்பகநாதர் என்று பெயர், கற்பக விநாயகர், கற்பக நாத்ரை வழிபட்டு மாங்கனி பெற்ற தலம். விநாயகர், இராமர் வழிபட்ட தலங்களுள் ஒன்று. எட்டுப் பட்டைகளுடன் சுயம்பு லிங்கம். இவரை வழிபட்டால் அஷ்டலட்சுமி அருள் கிடைக்கும். சனிக்கிழமை புத ஹோரை, அஷ்டமி திதிகளிலும் குங்குமப்பூவுடன் வெண்ணெய் சாத்தி வேண்டுதல்....

அருள்மிகு கற்பகநாதர் திருக்கோயில்
கற்பகநாதர் குளம் அஞ்சல் - 614 703,
குன்னலூர், திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04369 - 240187, 97880 48653

சென்னையிலிருந்து 323 கி.மீ., திருச்சியிலிருந்து 120 கி.மீ., மதுரையிலிருந்து 218 கி.மீ., திருத்துறைப்பூண்டியிலிருந்து 17 கி.மீ. வேதாரண்யத்திலிருந்து 29 கி.மீ. முத்துப்பேட்டையிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருத்துறைப் பூண்டியிலிருந்து தொண்டியக்காடு வழியே கோயிலை அடையலாம்.

173. அருள்மிகு ஸ்திரபுத்தீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 110 வது
இறைவன் : நீள்நெறிநாதர் / ஸ்திரபுத்தீஸ்வரர்
இறைவி : ஞானாம்பிகை
தல தீர்த்தம் : ஓமக தீர்த்தம்
தல விருட்சம் : குருந்தை
புராணப் பெயர்: தண்டலை நீள்நெறி

கோச்செங்கட்சோழன் மாடக்கோயில். நடராஜர் பாதத்தில் கங்கை. கல்மாடு புல் உண்ட தலம். கோச்செங்கட்சோழன் குஷ்ட நோய் நீக்கிய தலம். அரிவாள் தாய நாயனார் முக்தி தலம்.வியாக்ரபாதர்,பதஞ்சலி பூசித்த லிங்கங்கள். மனைவியுடன் அரிவாட்ட நாயனார், கோச்செங்கட்சோழன், அரிவாட்ட நாயனார், அவர் மனைவி வைத்திருக்கும் அரிசி,மாவடு கீழே கொட்டுவது,அரிவாட்ட நாயனார் கையை இறைவன் தடுப்பது, காட்சியளிப்பது காண வேண்டிய சிற்பங்கள்.

அருள்மிகு நீள்நெறிநாதர் திருக்கோயில்
தண்டலைச்சேரி, வேளூர் அஞ்சல் –
614 715, திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 98658 44677

சென்னையிலிருந்து 323 கி.மீ., திருச்சியிலிருந்து 120 கி.மீ., மதுரையிலிருந்து 218 கி.மீ., திருவாரூரிலிருந்து 27 கி.மீ. மன்னார்குடியிலிருந்து 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் திருத்துறைப் பூண்டியிலிருந்து 5 கி.மீ. உள்ளது.

174. அருள்மிகு கொழுந்தீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 111 வது
இறைவன் : கொழுந்தீஸ்வரர் / சமீவனேஸ்வரர்
இறைவி : மதுரபாஷிணி / தேனார்மொழியாள் / தேனாம்பாள்
தல தீர்த்தம் : அமுத,ரம்பை,மண்டை,விசுவகன்ம,சிவ உட்பட 9 தீர்த்தங்கள்
தல விருட்சம் : வன்னி மரம்
புராணப் பெயர்: கோட்டூர்

பிரதோஷ கால மூல மூர்த்தி. தேவலோக ரம்பை வழிபட்ட தலம்.தவக்கோலத்தில் ரம்பை தனிச் சன்னதியில்.எழில்மிகு அர்த்தநாரீஸ்வரர். ததீசி முனிவரைக் கொன்று அவரது முதுகெலும்பை வச்சுராயுதமாக்கி விருத்திராசுரனைக் கொன்ற இந்திரன் பிரம்மஹத்தி தோஷம் நீங்க வழிபட்ட தலம். அகோர வீரபத்திரர், வல்லப கணபதி, மகிஷாசுர மர்த்தினி, நந்திகேஸ்வரர். மாசிமக பால் அபிஷேகத்தின் போது இறைவன் மீது அர்த்தநாரீஸ்வரர் வடிவம் தெரியும்...

அருள்மிகு கொழுந்தீஸ்வரர் திருக்கோயில்
கோட்டூர் அஞ்சல் – 614 703,
மன்னார்குடி வழி,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04367 – 279791

சென்னையிலிருந்து 287 கி.மீ., திருச்சியிலிருந்து 109 கி.மீ., மதுரையிலிருந்து 238 கி.மீ., திருவாரூரிலிருந்து 43 கி.மீ. மன்னார்குடியிலிருந்து 16 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. மன்னார்குடியிலிருந்து மழவராயநல்லூர் வழி, திருத்துறைப்பூண்டியிலிருந்து விளாக்குடி வழியாக வரலாம்.

175. அருள்மிகு மதுவனேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 112 வது
இறைவன் : வெண்டுறைநாதர் / மதுவனேஸ்வரர்
இறைவி : சத்யதாயதாட்சி / பிரகதாம்பாள் / வேல்நெடுங்கண்ணி
தல தீர்த்தம் : பிரம தீர்த்தம்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: வெண்டுறை

சிவனை மட்டும் வழிபட வேண்டி பிருங்கி முனிவர் வண்டாக வந்து இறைவன் உடலை துளைத்து சுற்றி வந்ததன் பயனாகப் பெற்ற சாபம் நீக்கி, சிவனும் சக்தியும் ஒன்றென உணர்த்திய தலம். நங்கை எனும் பெண் முனிக்காக வடக்கு பார்த்த நந்தி. துருவ மன்னன் அங்கவன்,அரிச்சந்திரன்,முசுகுந்தர் மகன் தியாகசோழன் வழிபட்ட தலம். திருமால், பிரம்மன் வழிபட்ட தலம். அர்த்தநாரீஸ்வரர், பிட்சாடணர், 4 யுகம் கண்ட ஆஞ்சநேயர், பிருங்கி முனி,மண்டபத்தூண் சிற்பங்கள்...

அருள்மிகு மதுவனேஸ்வரர் திருக்கோயில்
வண்டுறை அஞ்சல், ஆதிச்சபுரம்,
மன்னார்குடி வட்டம் - 614 717,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04367 - 294640

சென்னையிலிருந்து 281 கி.மீ., திருச்சியிலிருந்து 103 கி.மீ., மதுரையிலிருந்து 232 கி.மீ., திருவாரூரிலிருந்து 27 கி.மீ. கோட்டூரிலிருந்து 8 கி.மீ. மன்னார்குடியிலிருந்து 11 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 23 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. திருத்துறைப்பூண்டி - மன்னார்குடி சாலை கோட்டூருக்கு முன்பு உள்ளது.

176. அருள்மிகு வில்வாரண்யேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 113 வது
இறைவன் : வில்வாரண்யேஸ்வரர் / வில்வநாதர்
இறைவி : சௌந்தரநாயகி / அழகுநாச்சியார்
தல தீர்த்தம் : பிரம,அகத்திய, காண்டீப, முள்ளியாறு தீர்த்தங்கள்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: கொள்ளம்புதூர்

சம்பந்தர், பக்தர்களுடன் பலதலங்கள் யாத்திரைச் சென்று இத்தலத்தை அடையும் சமயம் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடவே, ஓடத்தில் ஏறி அமர்ந்து பதிகம் பாட இறைவன் அருளால் ஓடம் தானாக மறுகரையை அடைந்தது. ஐப்பசி அமாவாசை மறு நாள் ஓடத்திருவிழா. சம்பந்தர் ஓடம் ஏறிச் செல்லும் சிற்பம். பிரம்மா பிரம்மஹத்தி தோஷம் நீங்க வழிபட்ட தலம். கங்கை அம்மன், சாட்சிநாதர், கஜமுக்தீஸ்வரர், ஆதி வில்வநாதர், பாதாளவரதர்...

அருள்மிகு வில்வாரண்யேஸ்வரர்
திருக்கோயில்,
திருக்களம்பூர் அஞ்சல் - 622 414,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 94421 854800

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 24 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 19 கி.மீ. நன்னிலித்திலிருந்து 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணம் - குடவாசல் - கொரடாச்சேரி சாலையில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. திருக்களம்புதூர் பெயர்.

177. அருள்மிகு ஜகதீஸ்வரர் திருக்கோயில்


அப்பர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 114 வது
இறைவன் : ஜகதீஸ்வரர்
இறைவி : ஜகன் நாயகி / ஜகதீஸ்வரி /பெண்ணமிர்த நாயகி
தல தீர்த்தம் : அக்னி தீர்த்தம்
தல விருட்சம் : நாரத்தை மரம்
புராணப் பெயர்: பேரெயில்

குறுந்தொகை, புறநானூற்றுப் பாடல்கள் பாடிய சங்ககாலப் புலவர் பேரெயில் முறுவலார் வாழ்ந்த ஊர். திருவாரூர் சோழ நாட்டின் தலைநகராக இருந்த போது கோட்டைக்கு அருகில் அமைந்திருந்த ஊரில் உள்ள தலம். அப்பர்பெருமானின் திருக் குறுந்தொகைப் பதிகம் பெற்றது. சித்திரை சஷ்டி திருவிழா.வெண்குஷ்ட நோய் நீங்க நீராட வேண்டிய அக்னி தீர்த்தம். கற்பக விநாயகர், அய்யனார். காண்போரைக் கவரும் அழகுற அமைந்த சபாபதி சபை.

அருள்மிகு ஜகதீஸ்வரர் திருக்கோயில்
ஓகைப்பேரையூர், வடபாதிமங்கலம்
அஞ்சல், திருவாரூர் வட்டம் - 610 206,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 94431 35129

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 11 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 47 கி.மீ. மன்னார் குடியிலிருந்து 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திருவாரூர் - திருத்துறைப் பூண்டி சாலையில் மாவூர் கூட்டு ரோடு-நாட்டியத்தான்குடி-வடபாதிமங்கலம் வழி.

178. அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 115 வது
இறைவன் : அக்னீஸ்வரர்
இறைவி : மிருதுபாத நாயகி / பஞ்சின்மெல்லடியம்மை
தல தீர்த்தம் : அக்னி தீர்த்தம்
தல விருட்சம் : வன்னி மரம், ஊமத்தை, கொன்றை
புராணப் பெயர்: கொள்ளிக்காடு (கொள்ளி = அக்னி)

சனி தோஷ நிவர்த்தி தலம்

தனது பணிகளினால் பலர் துன்பப்படுவது கண்டு மனம் வருந்திய சனி, வசிஷ்டர் அறிவுரைப்படி இங்கு தவம் இருக்க,அக்னியாக தோன்றி சனியினை மகிழ்ச்சி பொங்கு சனியாக அருள் செய்த தலம். அக்னி வழிபட்ட தலமாதலால் செந்நிறமாக இறைவன். மகாலெட்சுமிக்கு அருகில் உழைப்பின் மகிமையை உணர்த்தும் கலப்பை ஏந்திய சனி.நவக்கிரகங்கள் "ப"வடிவில் இருப்பது சிறப்பு.வேலுடன் தனுசு சுப்ரமணியர். திரி புனச்சக்கரவர்த்தி சனிதோஷ நிவர்த்தி.

அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்
திருக்கொள்ளிக்காடு, கீராலத்தூர் அஞ்சல்,
நெல்லிக்காவல் வழி - 610 205,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04369 - 237454

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 25 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 54 கி.மீ. மன்னார் குடியிலிருந்து 20 கி.மீ. திருத்துறைப்பூண்டியிலிருந்து 20 கி.மீ. தொலைவில். திரு வாரூர் - திருத்துறைப் பூண்டி சாலையில் நெல்லிக்கா சென்று தெங்கூர் வழியாக.

179. அருள்மிகு இரஜதகிரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 116 வது
இறைவன் : இரஜதகிரீஸ்வரர் / வெள்ளிமலைநாதர்
இறைவி : பிருகந்நாயகி / பெரியநாயகி
தல தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
தல விருட்சம் : தென்னை மரம்
புராணப் பெயர்: தெங்கூர்

மகாலெட்சுமி பூஜை செய்து அருள் பெற்ற தலம். மேற்கு நோக்கிய ஆவுடையார். வெள்ளிமலை நாதர். மார்ச் 18 – 24 சூரிய பூஜை. பிரம்மன்,இந்திரன் வழிபட்ட தலம். நவக்கிரகங்கள் ஆளுக்கொரு லிங்கம் எனப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட நவ லிங்கங்கள் கிரகங்களின் பெயராலேயே உள்ளன. நவக்கிரக தோஷம் நீக்கும் லிங்கங்கள். மகாலெட்சுமி சன்னதி. உயர்ந்த பாணம் கொண்ட சிவலிங்கத் திருமேனி. தென்னை மரங்கள் நிறைந்த ஊரில் வீற்றிருப்பவர்.

அருள்மிகு இரஜதகிரீஸ்வரர் திருக்கோயில்
திருத்தங்கூர், திருநெல்லிக்காவல் அஞ்சல்,
திருத்துறைப்பூண்டி வட்டம் – 610 205,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04369 – 237454,94423 46042

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 22 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 62 கி.மீ. மன்னார் குடியிலிருந்து 22 கி.மீ. திருத்துறைப்பூண்டியிலிருந்து 20 கி.மீ. தொலைவில். திரு வாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் நெல்லிக்கா வழியாக செல்ல வேண்டும்.

180. அருள்மிகு ஆம்லகேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 117 வது
இறைவன் : நெல்லிவனநாதர் / நெல்லிவனேஸ்வரர்
இறைவி : ஆம்லகேஸ்வரி / மங்களநாயகி
தல தீர்த்தம் : பிரம, சூரிய தீர்த்தங்கள்
தல விருட்சம் : நெல்லி மரம்
புராணப் பெயர்: நெல்லிக்கா

துர்வாசர் சாபத்தினால் நெல்லி மரங்களாக மாறிய கற்பகம், சந்தனம், அரிசந்தன், பாரிஜாதம்,மந்தாரம் ஆகிய தேவலோக மரங்களின் கர்வம் நீக்கி,நெல்லியின் அருமையை உலகறியச் செய்த தலம்.நெல்லி மரத்தின் அடியில் தோன்றிய ஈசன்.ஐப்பசி கிருஷ்ண பட்ச சதுர்த்தசி முதல் 7 நாட்கள், மாசி 18 முதல் 7 நாட்கள் சூரிய பூஜை. ஆமலகேச சோழன் கட்டிய கோயில். ஆவணி முதல் வெள்ளி மணமாலை சூடிய மங்களநாயகி. பஞ்சகூடத்தலங்களுள் ஒன்று....

அருள்மிகு நெல்லிவனநாதர் திருக்கோயில்
திருநெல்லிக்காவல் அஞ்சல்,
திருத்துறைப்பூண்டி வட்டம் – 610 205,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04369 – 237624, 97861 52928

சென்னையிலிருந்து 252 கி.மீ., திருச்சியிலிருந்து 112 கி.மீ., மதுரையிலிருந்து 242 கி.மீ., திருவாரூரிலிருந்து 20 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 60 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 18 கி.மீ. தொலைவில். திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் புதூர் வழியாக செல்ல வேண்டும்.

181. அருள்மிகு மாணிக்கவண்ணர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 118 வது
இறைவன் : ரத்னபுரீஸ்வரர் / நாட்டியத்துநம்பி / கரிநாலேஸ்வரர்
இறைவி : மங்களாம்பிகை / மாமலர் மங்கை
தல தீர்த்தம் : சூரிய, சந்திர, கரி தீர்த்தங்கள்
தல விருட்சம் : மாவிலங்கை
புராணப் பெயர்: நாட்டியத்தான்குடி

ரத்னேந்திர சோழனுக்கும்,அவன் தம்பிக்கும் ரத்தினங்களை மதிப்பிட்டு பிரித்துக் கொள்வதில் ஏற்பட்ட குழப்பத்தை போக்க இறைவனே ரத்தின வியாபாரியாக வந்து குழப்பம் நீக்கிய தலம். கோட்புலி நாயனார் அவதாரத்தலம்.கோட்புலி நாயனார் வீட்டில் தங்கி கோயிலுக்கு தரிசனம் செய்ய வந்தபோது உழவன், உழத்தியாக நடவு நடும் காட்சி. யானைக்கு அருள்புரிந்த ஈசன். சுந்தரருக்கு கைகாட்டிய விநாயகர். கோட்புலி நாயனாரின் பெண்கள் இருவரையும் சிங்கடி, வனப்பகை சுந்தரர் புதல்வியாக ஏற்ற தலம்...

அருள்மிகு மாணிக்கவண்ணர் திருக்கோயில்
திருநாட்டியத்தான்குடி அஞ்சல், மாவூர் வழி,
திருவாரூர் வட்டம் – 610 202,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04367 – 237707, 94438 06495

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 16 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 46 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 29 கி.மீ. தொலைவில். திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர் கூட்டு ரோடு வந்து வடபாதிமங்கலம் வழியாக செல்ல வேண்டும்.

182. அருள்மிகு கண்ணாயிரமுடையார் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 119 வது
இறைவன் : கண்ணாயிரமுடையார் / கண்ணாயிரநாதர்
இறைவி : கைலாசநாயகி
தல தீர்த்தம் : பிரம,சேஷ தீர்த்தங்கள்
தல விருட்சம் : பலா மரம்
புராணப் பெயர்: காறாயில்

சப்தவிடங்கத் தலங்களுள் குக்குட நடனத்துடனான வீரவிடங்கர் தலம். நான்கு கால்களுடன் நின்ற நிலையில் நந்தி. சொர்ணகர்ஷண பைரவர். 1000 ஆண்டுகள் தவமிருந்து பிரமன் வழிபட்டு அருள் பெற்றது.விஷ்ணு,லட்சுமி,கபாலமுனி,பதஞ்சலி வியாக்ரபாதர் முசுகுந்தர் வழிபட்ட தலம். கடுக்காய் விநாயகர், பிரமோத விநாயகர், ஞானதெட்சிணாமூர்த்தி. கண், தோல் நோய் அகல முக்கூட்டு மூலிகை தேய்த்து நீராடி தேன் அத்திப்பழ பிரசாதம். 3 பைரவர்கள்.

அருள்மிகு கண்ணாயிரமுடையார்
திருக்கோயில், காறைவாசல் அஞ்சல்,
திருவாரூர் வட்டம் – 610 202,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04366 – 316222, 94424 21063

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 13 கி.மீ. கோட்டூரிலிருந்து 30 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 53 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 18 கி.மீ. தொலைவில். திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் புலிவலம், கீழமணலி வழியாக செல்ல வேண்டும்.

183. அருள்மிகு நடுதறியப்பர் திருக்கோயில்


அப்பர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 120 வது
இறைவன் : வஸ்த்தம்பபுரீஸ்வரர் / நடுதறியப்பர் / நடுதறிநாதர்
இறைவி : மாதுமையம்மை / ஸ்ரீவல்லிநாயகி
தல தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
தல விருட்சம் : கல்பனை மரம்
புராணப் பெயர்: கன்றாப்பூர் (கன்று + ஆப்பு + ஊர்)

கமலவல்லி எனும் சிவபக்தை சிவலிங்கம் வைத்து வழிபட்டு வந்தார். அதை விரும்பாத கணவர் லிங்கத்தை கிணற்றில் வீசிவிட்டார்.பின்னர்,கன்று கட்டியிருந்த நடுதறியை (ஆப்பு) லிங்கமாக நினைந்து வழிபட்டால்.அதுவும் விரும்பாத கணவன் கோடரி கொண்டு வெட்ட இறைவன் காட்சி தந்து அருள் புரிந்தார். பாணத்தின் மீது வெட்டுத்தழும்பு. ஊரில் உள்ள எல்லா நிலமும் சிவன் பெயரில். தனிப்பட்டா இல்லை. பிடாரி அம்மன் உற்சவர். இடும்பன் வழிபட்ட தலம்...

அருள்மிகு நடுதறியப்பர் திருக்கோயில்
கோயில் கன்னாப்பூர் அஞ்சல், வலிவலம் வழி, திருவாரூர் வட்டம் – 610 207,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04367 – 204144, 94431 95111

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., நாகப்பட்டினத்திலிருந்து 29 கி.மீ. சாட்டியக்குடியிலிருந்து 5 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 21 கி.மீ. தொலைவில். நாகை – திருத்துறைப்பூண்டி சாலையில் சாட்டியக்குடி வந்து ஆதமங்கலம் கடந்து கண்ணாப்பூர் கூட்ரோடு வழி திரும்பி 1 கி.மீ.

184. அருள்மிகு இருதயகமலநாதேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 121 வது
இறைவன் : மனத்துணைநாதர் / இருதயகமலநாதேஸ்வரர்
இறைவி : மாழையொன்கண்ணி / அங்கயற்கண்ணி
தல தீர்த்தம் : சக்கர தீர்த்தம்
தல விருட்சம் : புன்னை மரம்
புராணப் பெயர்: வலிவலம் (வலியான் = கரிக்குருவி)

தேவாரப் புகழ் விநாயகர்

ஓதுவார்கள் தேவாரம் பாடும் முன் பாடவேண்டிய பாடலாக சம்பந்தர் முறைசெய்து பாடியுள்ள வலம்புரி விநாயகர் அமைந்துள்ள தலம். கோச்செங்கட்சோழன் மாடக்கோயில். ஏகச்சக்கர நாராயணப்பெருமாள்.சூரியன்,காரண மாமுனிவர் வழிபட்டதலம். முன் வினையால் மிகச்சிறிய கரிக்குருவியாகப் பிறந்த ஒருவன் இறைவனை வேண்டி அருள்பெற்று வலியான் எனும் பெயர் பெற்றான்.அவன் மரபில் வந்த வலியான் வழிபட்டு முக்திபெற்ற தலம்....

அருள்மிகு மனத்துணைநாதர் திருக்கோயில், வலிவலம் அஞ்சல்,
திருக்குவளை வட்டம் – 610 207,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04366 – 205636

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 21 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 60 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 21 கி.மீ. கோட்டூர் 33 கி.மீ. தொலைவில். திருவாரூர் – திருத்துறைப் பூண்டி சாலையில் புலிவலம், மாவூர் வழியாக வரலாம்.

185. அருள்மிகு கைச்சினேஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 122 வது
இறைவன் : கைச்சினேஸ்வரர்
இறைவி : சுவேதவளைநாயகி / வெள்வளைநாயகி
தல தீர்த்தம் : வச்சிர, இந்திர, அகத்திய தீர்த்தங்கள்
தல விருட்சம் : கொங்கு, இலவு மரம்
புராணப் பெயர்: கைச்சினம்


சம்பந்தர்

இந்திரன் மணலால் லிங்கம் செய்து வழிபட்ட லிங்கத்தின் மீது இந்திரனின் கைச்சின்னம் உள்ளது. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்.இந்திரன் ஐராவதத்தின் தந்தம் கொண்டு செய்யபட்ட வெள்வளையை அணிந்து வழிபட்ட நாயகி. ஜேஷ்டா தேவிக்கு சன்னதி. ரிஷபத்தின் மீதமர்ந்து அருள் புரியும் தெட்சிணாமூர்த்தி. கலையழகு மிகுந்த அர்த்தநாரீஸ்வரர். அகத்தியரின் பிரம்மஹத்தி தோஷம் நீக்கிய தலம். இறைவன் மீது கைச்சின்னம் காணலாம்.

அருள்மிகு கைச்சினேஸ்வரர்
திருக்கோயில், கச்சினம் அஞ்சல்,
திருவாரூர் வட்டம் - 610 201,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04366 - 247277

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., திருவாரூரிலிருந்து 20 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 59 கி.மீ. திருத்துறைப் பூண்டியிலிருந்து 13 கி.மீ. கோட்டூருக்கு 25 கி.மீ. தொலைவில். திருவாரூர் - திருத் துறைப்பூண்டி சாலையில் கீழமணலி,திருக்காரவாசல், விளாத்தூர் வழியாக வரலாம்.

186. அருள்மிகு கோளிலிநாதர் திருக்கோயில்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 123 வது
இறைவன் : கோளிலிநாதர் / பிரமபுரீஸ்வரர்
இறைவி : வண்டமர்பூங்குழலி
தல தீர்த்தம் : தேற்றா மரம்
தல விருட்சம் : பிரம தீர்த்தம்
புராணப் பெயர்: கோளிலி


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

சப்தவிடங்கத் தலங்களுள் பிருங்க நடனம் ஆடும் அவனி விடங்கர் தலம். பிரம்மர் தன் சாபம் நீங்க வழிபட்ட தலம். நவகோள்களின் குற்றம் நீக்கி அருள்புரிந்த ஈசன்.நவக் கிரகங்கள் ஒரே நேராக தென்திசை நோக்கி.பகாசுரனை அழித்த பிரம்மஹத்தி தோஷம் நீங்க பீமன் வழிபட்டது.பகாசுரன் சிற்பம். குவளை சாற்றி பூஜை.வெண்மணலால் ஆன லிங்கம்.நெல் மூட்டைகள் எடுத்துச் செல்ல சுந்தரர் பதிகம் பாடியது.தியாக விநாயகர்,இந்திரபுரீசுவரர்,சண்டிகேஸ்வரர்.

அருள்மிகு கோளிலிநாதர்
திருக்கோயில், திருக்குவளை அஞ்சல்,
திருவாரூர் வட்டம் - 610 204,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04366 - 245412, 329 268

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., நாகபட்டினத்திலிருந்து 29 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 65 கி.மீ. மன்னார் குடியிலிருந்து 47 கி.மீ. தொலைவில். திருவாரூர் - எட்டுக்குடி சாலையில் சுமார் 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

187. அருள்மிகு வாய்மூர்நாதர் திருக்கோயில்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 124 வது
இறைவன் : வாய்மூர்நாதர்
இறைவி : பாலின் நன்மொழியாள் / க்ஷீரோப வசனி
தல தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
தல விருட்சம் : பலா மரம்
புராணப் பெயர்: வாய்மூர்


சம்பந்தர் அப்பர்

சப்தவிடங்கத் தலங்களுள் ரத்தின சிம்மாசனத்தில் நீல விடங்கர். கமல நடனம். அப்பரை இறைவன் திருமறைக்காட்டிலிருந்து அழைத்த தலம். சம்பந்தருக்கு ஈசன் அம்பிகையுடன் நடனக்காட்சியருளிய தலம். பங்குனி 12,13 சுவாமி,அம்மன் சூரிய பூஜை. சூரியன்,பிரம்மா உள்ளிட்ட தேவர்கள் வழி பட்ட தலம். ஒரே வரிசையில் நவகிரகம். பெட்டிக்குள் மிகச்சிறிய விடங்கலிங்கம். அஷ்ட பைரவர்கள் தலம். சித்திரை முதல் வெள்ளி பைரவருக்கு ஜயந்தன் பூஜை....

அருள்மிகு வாய்மூர்நாதர்
திருக்கோயில், திருவாய்மூர் அஞ்சல்,
திருக்குவளை வழி - 610 204,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 0 97862 44876

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., நாகப்பட்டினத்திலிருந்து 29 கி.மீ. திருவாரூரிலிருந்து 29 கி.மீ. திருத்துறைப்பூண்டியிலிருந்து 17 கி.மீ. எட்டுக்குடியிலிருந்து 3 கி.மீ. தொலைவில். நாகப்பட்டினம் - திருத்துறைப்பூண்டி சாலையில் எட்டுக்குடி சாலையில் திரும்பி.

188. அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 125 வது
இறைவன் : மறைக்காட்டீஸ்வரர் / வேதாரண்யநாதர்
இறைவி : வேதநாயகி,வீணாவாதவிதூஷிணி
தல தீர்த்தம் : வேத தீர்த்தம், மணிகர்ணிகை...
தல விருட்சம் : வன்னி மரம், புன்னை
புராணப் பெயர்: மறைக்காடு

கோளறு பதிகம் அருளிய தலம்


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

வேதங்கள் வழிபட்டது.அகத்தியருக்கு திருமணக்காட்சி.அப்பர் பாட கதவு திறந்தது. சம்பந்தர் பாட கதவு தாழிட்டது.யாழினும் இனிய மொழியம்மை.தவக்கோலத்தில் சுவடியுடன் சரஸ்வதி.இராவணனைக் கொன்ற பழி தீர இராமன் வழிபட்டது.7 விடங்கத் தலங்களுள் புவன விடங்கர்.ஹம்ச நடனம்.எலி மாவலி சக்கரவர்த்தியானது.திரிபங்கி வடிவில் துர்க்கை. சக்தி பீடங்களுள் சுந்தரி சக்தி பீடம். பக்த சபை தலம். கோளறு பதிகம் பாடப் பெற்றது. 7 திருமுறைகளில் பாடப்பெற்ற தலம். வீரஹத்தி விநாயகர், மேலக்குமரன். பரஞ்சோதி முனிவர் அவதாரப்பதி.ஆதிசேது,கடல் நீராடுதல்..

அருள்மிகு வேதாரண்யேஸ்வரர்
திருக்கோயில், வேதாரண்யம் அஞ்சல்,
வேதாரண்யம் வட்டம் - 614 810,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04369 - 250238

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., முத்துப்பேட்டையிலிருந்து 44 கி.மீ. திருவாரூரிலிருந்து 67 கி.மீ. திருத்துறைப்பூண்டியிலிருந்து 37 கி.மீ. அகத்தியான்பள்ளி 4 கி.மீ. தொலைவில். அகத்தியான்பள்ளி - திருத்துறைப்பூண்டி சாலையில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

189. அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 126 வது
இறைவன் : அகஸ்தீஸ்வரர் / அக்னீஸ்வரர்
இறைவி : மங்கைநாயகி / பாகம்பிரியாள்
தல தீர்த்தம் : அக்னி, எம, அகத்திய தீர்த்தங்கள், அக்னி சமுத்திரம்
தல விருட்சம் : வன்னி மரம், அகத்தி
புராணப் பெயர்: அகத்தியான்பள்ளி

அகத்தியர் சிவலிங்கம் வைத்து பூஜை செய்த தலங்களுள் ஒன்று. அகத்தியர் வழிபட்ட ஈசன் ஆதலால் அகஸ்தீஸ்வரர். அகத்தியருக்கு இத்தலத்தில் இருந்தே இறைவன் திரு மணக்கோலக்காட்சி காண அருளியது. மூலவர் கருவறையில் திருமணக் காட்சி சிற்பம். அம்பாள் சன்னதிக்கு அருகில் சுவாமியைப் பார்த்தவாறு அகத்தியர் தனிக்கோயிலில். அழகுற அமைந்துள்ள அகத்தியர் சிலை. எமதர்மன் வழிபட்ட தலம்.நவக்கிரகங்கள் அனைத்தும் ஒரே திசைப் பார்த்து ...

அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில்
சேது ரஸ்தா சாலை, அகஸ்தியான்பள்ளி,
அஞ்சல், வேதாரண்யம் வழி – 614 810,
திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04369 – 250012

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., முத்துப்பேட்டையிலிருந்து 45 கி.மீ. திருவாரூரிலிருந்து 68 கி.மீ. திருத் துறைப்பூண்டியிலிருந்து 39 கி.மீ. வேதாரண்யத்திலிருந்து 14 கி.மீ. தொலைவில். வேதாரண்யம் – கோடியக்கரை சாலையில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது.

190. அருள்மிகு அமுதகடேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : சோழ நாடு – காவிரி தென்கரை – 127 வது
இறைவன் : அமுதகடேஸ்வரர் / குழகேஸ்வரர்
இறைவி : அஞ்சனாக்ஷி / மைத்தடங்கண்ணி
தல தீர்த்தம் : அக்னி சமுத்திரம், அமுத கிணறு
தல விருட்சம் : குரா மரம்
புராணப் பெயர்: கோடி

திருப்பாற்கடலில் கடைந்த அமுதத்தை வாயு எடுத்துச்சென்ற போது விழுந்த அமிர்தத் துளியில் தோன்றிய ஈசன். அமுதக் கலசத்துடன் அமிர்த சுப்ரமணியர். குழகர்கோயில் என்றும் பெயர். இராமன் இலங்கை செல்லும் முன் வழிபட்ட தலம். இராமர் பாதம். காடு கிழாள் எனும் வனதேவதை. நேர்க்கோட்டில் நவக்கிரகங்கள்.தக்ஷிணாயன,உத்திராயண நீராடுதல்.நாரதர்,இந்திரன்,குழக முனி, சித்தர் கள் வழிபட்டது. திருவாச்சி, மயில், முருகன் ஒரே கல். சேரமான்பெருமாள் நாயனாருடன் சுந்தரர் வந்த தலம்.

அருள்மிகு அமுதகடேஸ்வரர்
திருக்கோயில், கோடியக்காடு அஞ்சல்,
வேதாரண்யம் வட்டம் – 614 821,
நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04369 – 272470

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., முத்துப்பேட்டையிலிருந்து 54 கி.மீ. திருவாரூரிலிருந்து 76 கி.மீ. திருத் துறைப்பூண்டியிலிருந்து 46 கி.மீ. அகத்தியான்பள்ளி 9 கி.மீ. வேதாரண்யத்தி லிருந்து 12 கி.மீ. தொலைவில். வேதாரண்யம் – கோடியக்கரை சாலையில் உள்ளது.

191. அருள்மிகு புண்ணியகோடீஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : சோழ நாடு - காவிரி தென்கரை - 128 வது
இறைவன் : இடைவாய்நாதர் / விடையாப்பர் / புண்ணியகோடீஸ்வரர்
இறைவி : உமையம்மை, அபிராமி
தல தீர்த்தம் : புண்ணியகோடி தீர்த்தம்
தல விருட்சம் : கஸ்தூரி அரளி
புராணப் பெயர்: விடைவாய்

தேவாரத் தலங்களுள் 275-வதாக 1917-ல் கண்டெடுக்கப்பட்டு சேர்க்கப்பட்ட தலம். வைகாசி, மார்கழியில் சூரிய பூஜை. ஐயடிகள் காடவர்கோண் க்ஷேத்திரக்கோவையில் தென் இடைவாய் என்று இடம்பெற்றுள்ளது. விடையே கொடியாகவும், வாகனமாகவும். நர்த்தன விநாயகர் சிறப்பம்சம். சிம்மாசனத்தில் தெட்சிணாமூர்த்தி. பால சாஸ்தா சூரிய,சந்திரர்கள் வாகனங்களுடன். வெண்ணாறு,வெள்ளையாறு,பாண்டையாறு, கடல் சூழ அமைந்துள்ள தலம்.

அருள்மிகு புண்ணியகோடீஸ்வரர்
திருக்கோயில், திருவிடைவாசல்,
கூத்தாநல்லூர் அஞ்சல் - 613 702.
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 0435 - 2941912, 99436 66180

சென்னையிலிருந்து 251 கி.மீ., திருச்சியிலிருந்து 117 கி.மீ., மதுரையிலிருந்து 256 கி.மீ., மன்னார்குடியிலிருந்து 19 கி.மீ. திருவாரூரிலிருந்து 18 கி.மீ. கூத்தா நல்லூரிலிருந்து 8 கி.மீ. கொரடாச்சேரி 8 கி.மீ. தொலைவில். கொரடாச்சேரி - கூத்தாநல்லூர் சாலையில் வெண்ணாற்றுப்பாலம் அருகில் உள்ளது.

192. அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில்



அமைவிடம் : பாண்டிய நாடு - 1 வது
இறைவன் : சோமசுந்தரர் /ஆலவாய் அண்ணல் /சொக்கேசர்
இறைவி : மீனாட்சி / அங்கயற்கண்ணி
தல தீர்த்தம் : பொற்றாமரை தீர்த்தம்
தல விருட்சம் : கடம்பு மரம்
புராணப் பெயர்: ஆலவாய்

உலகே வியக்கும் அதிசயம்

மீனாட்சி அம்மன். 64 திருவிளையாடல்கள்,இந்திரன் அமைத்த விமானம்,சுந்தரானந்த சித்தர் பீடம்.ராஜ மாதங்கி சியாமள சக்தி பீடம். முக்குறுணி விநாயகர். ஈசன் தருமியாக நக்கீரருடன் வாதம். மாணிக்கவாசகருக்கு பெயர் சூட்டியது. குமரகுருபரர் மீனாட்சி பிள்ளைத்தமிழ். சம்பந்தரின் அனல் வாதம்,புனல் வாதம்.பொற்றாமரைக்குளம்.திருக்குறளுக்காக சங்கப்பலகை தோன்றியது. வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடும் நடராஜர். சிவனே எல்லாம் வல்ல சித்தர்.கையை சந்தனக் கட்டையாக்கிய மூர்த்தி நாயனார்.இயல்,இசை, நாடகம் கொண்ட முத்தமிழ் கோயில்.பழமையான தலம். தங்கத்தேர். கோடி சிற்பங்கள். 1000 கால், 8 சக்தி மண்டபம். தமிழ்ச்சங்கம். எழுத்திலடங்கா...

அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர்
திருக்கோயில்,
மதுரை அஞ்சல் - 625 001,
மதுரை மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 0452 - 2344360, 272222

சென்னையிலிருந்து 497 கி.மீ., திருச்சியிலிருந்து 161 கி.மீ., திருப்பரங்குன்றத்திலிருந்து 10 கி.மீ. திருவேடகத்திலிருந்து 20 கி.மீ. திருமங்கலத்திலிருந்து 24 கி.மீ. மேலூரிலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ளது. இரயில் நிலையத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில். மதுரை இரயில் நிலையம். மதுரை விமான நிலையம்.

193. அருள்மிகு ஆப்புடையார் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : பாண்டிய நாடு - 2 வது
இறைவன் : இடபுரேசர் / அன்னவினோதன் / ஆப்புடையார்
இறைவி : குரவங்கமழ்குழலி / சுகுந்தகுந்தளாம்பிகை
தல தீர்த்தம் : வைகை, இடப தீர்த்தங்கள்
தல விருட்சம் : கொன்றை
புராணப் பெயர்: ஆப்பனூர்

சோழாந்தகன் என்ற பாண்டிய மன்னனுக்காக ஆப்பிலே காட்சி அருளிய சிவன். இடபம் வந்து நின்ற ஊர். ஒரு முறை பஞ்சம் நிலவிய காலத்தில் அர்ச்சகர் சமைத்த வைகையாற்று மணலை அன்னமாக்கிய சிவனாதலால் அன்னவிநோதன். வன்னிமர விநாயகர். கல் சிற்பமாக மத்தளத்துடன் நந்தி, நடராஜர், சிவகாமி. புண்ணிய சேனருக்கு குபேர வாழ்வு அருளிய ஆப்புடையார். கீர்த்தி சிறியது, மூர்த்தி பெரியது. கண்கவர் கலைச்சிற்பங்கள்.

அருள்மிகு ஆப்புடையார்
திருக்கோயில், ஆப்புடையார்கோயில்
அஞ்சல் - 625002.
மதுரை மாவட்டம், தமிழ்நாடு.
: 0452 - 2530173, 94436 76174

சென்னையிலிருந்து 497 கி.மீ., திருச்சியிலிருந்து 161 கி.மீ., திருப்பரங்குன்றத்திலிருந்து 10 கி.மீ. திருவேடகத்திலிருந்து 20 கி.மீ. திருமங்கலத்திலிருந்து 24 கி.மீ. மேலூரிலிருந்து 28 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரையிலிருந்து 1 கி.மீ. தொலைவில். மதுரை இரயில் நிலையம். மதுரை விமான நிலையம்.

194. அருள்மிகு பரங்கிரிநாதர் திருக்கோயில்


சம்பந்தர் சுந்தரர்

அமைவிடம் : பாண்டிய நாடு - 3 வது
இறைவன் : பரங்கிரிநாதர் / சத்தியகிரீஸ்வரர்
இறைவி : ஆவுடைநாயகி
தல தீர்த்தம் : சரவணப்பொய்கை,லட்சுமி உள்பட 11 தீர்த்தங்கள்
தல விருட்சம் : கல்லத்தி
புராணப் பெயர்: பரங்குன்றம் (பரம் = சிவன்,குன்றம்=மலை)

முருகனின் முதல் படைவீடு. நக்கீரர் வாழ்ந்த தலம். முருகன் தெய்வானையை மணம் புரிந்த தலம். முருகனின் ஞான வேலுக்கு பாலாபிஷேகம்.குடவரைக்கோயில்.முருகன் தெய்வானை கல்யாணச் சிற்பம்.பவளக்கனிவாய் பெருமாள்.மனைவி காலகண்டியுடன் நந்தி. பெரிய நந்தி, மூஞ்சூறு, மயில். திரு மணக்கோல பஞ்ச லிங்கங்கள்.எண்திசை விநாயகருடன் பஞ்சமுக விநாயகர்.தெட்சிணாமூர்த்திக்கு ருத்ராபிஷேகம். நவவீரர்கள், வெள்ளை மயில், தேவி லிங்கம், பஞ்சாட்சர குகை. முருகன் அருகில் கருடாழ்வார்...

அருள்மிகு பரங்கிரிநாதர்
திருக்கோயில்,
திருப்பரங்குன்றம் அஞ்சல்- 625 005
மதுரை மாவட்டம், தமிழ்நாடு.
: 0452 - 2482248, 98653 70393

சென்னையிலிருந்து 486 கி.மீ., திருச்சியிலிருந்து 167 கி.மீ., திருவேடகத்திலிருந்து 25 கி.மீ. திருமங்கலத்திலிருந்து 16 கி.மீ. மேலூரிலிருந்து 40 கி.மீ. மதுரையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரை-திருமங்கலம் சாலையில். மதுரை இரயில் நிலையம். மதுரை விமான நிலையம்.

195. அருள்மிகு ஏடகநாதேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : பாண்டிய நாடு - 4 வது
இறைவன் : ஏடகநாதேஸ்வரர்
இறைவி : ஏலவார்குழலி / சுகந்தகுந்தளாம்பிகை
தல தீர்த்தம் : பிரம தீர்த்தம், வைகை
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: ஏடகம்

மதுரையில் சம்பந்தர் சைவம் தழைக்க அனல் வாதம்,புனல் வாதம் புரிந்த போது வைகை ஆற்றில் இட்ட ஏடு கரை ஒதுங்கிய தலம். வைகை நதி தெற்கு வடக்காக ஓடுவது தனிச்சிறப்பு.12 மாதமும் 1 நாள் திருவிழா மட்டும். அம்மன் சன்னதியில் துவார பாலகர்கள். வாதில் வென்ற விநாயகர், செவி சாய்த்த விநாயகர்.பத்திரிகா பரமேஸ்வரர். சட்டைநாத சித்தர் ஜீவ சமாதி. வயிற்றுவலி தீர நீராகாரம். வராகிக்கு படையல். இரு துர்க்கை. ஓடத்திலிருந்தே சுந்தரர் தரிசனம் செய்த தலம்

அருள்மிகு ஏடகநாதேஸ்வரர்
திருக்கோயில்,
திருவேடகம் அஞ்சல் - 624 234,
மதுரை மாவட்டம், தமிழ்நாடு.
: 04543 - 259311

சென்னையிலிருந்து 514 கி.மீ., திருச்சியிலிருந்து 178 கி.மீ., திருப்பரங்குன்றத்திலிருந்து 23 கி.மீ. திருமங்கலத்திலிருந்து 22 கி.மீ. மேலூரிலிருந்து 46 கி.மீ. மதுரையிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரை-சோழவந்தான் சாலையில் உள்ளது. மதுரை விமான நிலையம்.

196. அருள்மிகு பரங்கிரிநாதர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : பாண்டிய நாடு - 5 வது
இறைவன் : கொடுங்குன்றநாதர் / விஸ்வநாதர் / மங்கைபாகர்
இறைவி : குயிலமுதநாயகி / விசாலாட்சி / தேனாம்பிகை
தல தீர்த்தம் : தேனாழி தீர்த்தம்
தல விருட்சம் : உறங்காப்புளி / பெயரில்லா மரம்
புராணப் பெயர்: கொடுங்குன்றம்

பாதாளம்,பூலோகம்,கைலாயம் என மூன்றடுக்குகளில் சிவன் காட்சி தருகிறார். கைலாய கோயிலில் நந்தி,அஷ்டபந்தனம் கிடையாது.இறைவன் நவ மூலிகைகளால் ஆனவர்.மேற்சுவற்றில் முப்பத்துமுக்கோடி தேவர்கள்.அகத்தியருக்கு திருமணக்காட்சி.4 வேதங்களுடன் வேத சிவனாக.பாரி வள்ளல் திருப்பணி செய்த தலம்.ஐப்பசி-பங்குனி ஆறு மாதம் சூரிய பூஜை.புது வஸ்த்திரம்.வடுக பைரவர். யானையுடன் முருகன் தனிச்சிறப்பு. ஒரு முறையேனும் தரிசிக்க வேண்டிய தலம்....

அருள்மிகு உமாமகேஸ்வரர்
திருக்கோயில், பிரான்மலை அஞ்சல்
- 624 503, பசும்பொன்,
சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு.
: 9443191300 , 04577 - 246170

சென்னையிலிருந்து 550 கி.மீ., திருச்சியிலிருந்து 231 கி.மீ., சிவகங்கையிலிருந்து 62 கி.மீ. காரைக்குடியிலிருந்து 48 கி.மீ. மேலூரிலிருந்து 36 கி.மீ. மதுரையிலிருந்து 66 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரை - பொன்னமராவதி நெடுஞ்சாலையில் மேலூர் கடந்து சிங்கம்புணரி ஊர் வழியாக 70 கி.மீ. தொலைவில் உள்ளது.

197. அருள்மிகு திருத்தளிநாதர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : பாண்டிய நாடு - 6 வது
இறைவன் : ஸ்ரீதளீஸ்வரர் / திருத்தளிநாதர்
இறைவி : சிவகாமி
தல தீர்த்தம் : ஸ்ரீதளி தீர்த்தம், சிவகங்கை
தல விருட்சம் : சரக்கொன்றை
புராணப் பெயர்: புத்தூர் (புற்று + ஊர்)

கடும் தவமிருந்த மகாலெட்சுமிக்கு இறைவன் கௌரிதாண்டவம் காட்டியருளிய தலம். நீண்டகால தவத்தால் புற்றிலிருந்த வால்மீகிக்கு காட்சி அருளிய தலம். ஆதி பைரவர் எனப் போற்றப்படும் யோக நிலையில் பைரவர் தனிச் சிறப்பு. ஆதலால் வைரவன் கோயில் எனப்பெயர். இந்திரன் மகன் ஜயந்தனைக் காக்க அவதாரம் எடுத்ததாக வரலாறு. யோக நாராயணராக யோக நிலையில் விஷ்ணு. பைரவர் குதிரை வாகன உற்சவம். அஷ்ட பைரவ யாகம். நடராஜ சபை இசைத்தூண்கள்...

அருள்மிகு திருத்தளிநாதர்
திருக்கோயில்,
திருப்புத்தூர் அஞ்சல் - 623 211,
சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு.
: 93671 48201, 98426 56647

சென்னையிலிருந்து 547 கி.மீ., திருச்சியிலிருந்து 228 கி.மீ., சிவகங்கையிலிருந்து 55 கி.மீ. காரைக்குடியிலிருந்து 42 கி.மீ. பிள்ளையார்பட்டியிலிருந்து 9 கி.மீ. மதுரையிலிருந்து 97 கி.மீ. குன்றக்குடியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரை - காரைக்குடி சாலையில் 67 கி.மீ. தொலைவில் உள்ளது.

198. அருள்மிகு விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் சுந்தரர்

அமைவிடம் : பாண்டிய நாடு - 7 வது
இறைவன் : விருத்தபுரீஸ்வரர் / பழம்பதிநாதர் / மகாலிங்கேஸ்வரர்
இறைவி : பிருகந்நாயகி / பெரியநாயகி
தல தீர்த்தம் : இந்திரன் உட்பட 10 தீர்த்தங்கள்
தல விருட்சம் : சதுரக்கள்ளி, குருந்த மரம், மகிழம், புன்னை
புராணப் பெயர்: புனவாசல்

தஞ்சையை விட பெரிய ஆவுடையார் உள்ள கோயில். தஞ்சைக்கு அடுத்த பிரம்மாண்ட லிங்கம். லிங்கத்திற்கு 3 முழும், ஆவுடையாருக்கு 30 முழம் வஸ்திரம். நான்கு யுகம் கண்ட தலம். நான்கு தல விருட்சமும் நான்கு வேதங்களாக. வியாக்ர நந்தி. கண்ணாடியில் காளி தரிசனம். செவ்வாய் வழிபட்ட தலம். சிவஞான சபை-அகத்தியருக்கு நடனக் காட்சி. பெரிய பலிபீடம். மகாபெரியவா அநேக தரிசனம். சதுர்முக லிங்கம், கபிலபுத்திரர், ஒன்பதின்மர், ஐந்து விநாயகர். பற்பல...

அருள்மிகு விருத்தபுரீஸ்வரர் திருக்கோயில்
திருப்புனவாசல் அஞ்சல் - 614 629,
பொன்பேத்தி வழி, ஆவுடையார்கோயில்,
புதுக்கோட்டை மாவட்டம், தமிழ்நாடு.
: 04371 - 239202, 239212

சென்னையிலிருந்து 584 கி.மீ., திருச்சியிலிருந்து 265 கி.மீ., சிவகங்கையிலிருந்து 75 கி.மீ. காரைக்குடியிலிருந்து 54 கி.மீ. காளையார்கோயிலிலிருந்து 55 கி.மீ. மதுரையிலிருந்து 118 கி.மீ. ஆவுடையார்கோயிலிலிருந்து 28 கி.மீ. தொலைவில். மதுரை - தொண்டி சாலையில் திருவாடானை கடந்து 19 கி.மீ. தொலைவில் உள்ளது.

199. அருள்மிகு இராமநாதஸ்வாமி திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : பாண்டிய நாடு – 8 வது
இறைவன் : இராமநாதஸ்வாமி / இராமலிங்கேஸ்வரர்
இறைவி : பர்வதவர்த்தினி / மலைவளர்காதலி
தல தீர்த்தம் : 22 தீர்த்தங்கள் (கோயிலுக்கு உள்ளே 22,வெளியே 22)
தல விருட்சம் : வில்வம் **தமிழகத்தின் ஒரே ஜோதிர்லிங்கத் தலம்**
புராணப் பெயர்: இராமேஸ்வரம் / கந்தமாதன பர்வதம்

சீதா தேவியால் உருவாக்கப்பட்டு இராமரால் பூஜிக்கப்பட்ட லிங்கம்.பதஞ்சலி முனிவர் முக்தி தலம்.உப்பு லிங்கம்.1212 தூண்கள் கொண்ட பிரகாரம்.ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த ஸ்படிக லிங்கம்.அம்மனின் சேது சக்தி பீடம். பிதுர் தர்ப்பணம் செய்ய உகந்த தலம்.அனுமன் கொண்டு வந்த விஸ்வநாதருக்கு முதல் பூஜை.சீதையின் கற்பு அக்கினியையே சுட்டதால் அக்னி கடலில் மூழ்கி தணித்துக்கொண்டதால் அக்னிதீர்த்தம் எனப்பெயர். காலில் சங்கிலியுடன் பெருமாள். விபீஷணன் ஸ்தாபித்த ரங்கநாதர்.உலகின் மிக நீளமான 3-ம் பிரகாரம். பாதாள பைரவர். இரட்டை விநாயகர். இந்திய ஒருமைப்பாட்டின் சின்னம்.இராமாயண காலத்துக் கோயில்..........

அருள்மிகு இராமநாதஸ்வாமி
திருக்கோயில்,
இராமேஸ்வரம் அஞ்சல் – 623 526,
இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04573 – 221223, 94436 85075

சென்னையிலிருந்து 553 கி.மீ., திருச்சியிலிருந்து 230 கி.மீ., இராமநாதபுரத்தி விருந்து 56 கி.மீ. பரமக்குடியிலிருந்து 93 கி.மீ. பாம்பனிலிருந்து 15 கி.மீ. மதுரையிலிருந்து 170 கி.மீ. தொலைவில். மதுரை – இராமநாதபுரம் சாலையில் மண்டபம் தொலைவில் உள்ளது. இராமேஸ்வரம் இரயில் நிலையம்.

200. அருள்மிகு அஜகஜேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : பாண்டிய நாடு – 9 வது
இறைவன் : அஜகஜேஸ்வரர் / ஆதித்ரனேஸ்வரர் / ஆடானைநாதர்
இறைவி : சிநேகவல்லி / அன்பாயிரவல்லி
தல தீர்த்தம் : வருண,அகத்திய,சூரிய,மார்க்கண்டேய,க்ஷிர தீர்த்தங்கள்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: ஆடானை(ஆடு + ஆனை)

ஆதியாகிய சூரியன் நீலரத்தினக்கல்லால் லிங்கம் அமைத்து வழிபட்ட தலம். உச்சிக்கால பாலாபிஷேகத்தில் நீலநிறமாக காட்சியளிப்பார். அர்ச்சுனன் அமைத்த சோமாஸ்கந்தர். சுக்கிரனுக்குரிய அதிதேவதை-சிநேகவல்லி.துர்வாச முனிவர் சாபத்தால் ஆட்டுத்தலை,யானை உடலும் பெற்ற வருணனின் மகன் வாருணி வழிபட்டு சாபம் நீங்கப்பெற்ற தலம்.மாசியில் சூரிய பூஜை. கலைநயம் மிகு சிற்பங்கள்.சுக்கர தோஷ நிவர்த்தி தலம். மிகப்பெரிய திருக்கோயில்.....

அருள்மிகு அஜகஜேஸ்வரர் திருக்கோயில்
திருவாடானை அஞ்சல் – 623 407,
திருவாடானை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04561 – 254533

சென்னையிலிருந்து 436 கி.மீ., திருச்சியிலிருந்து 112 கி.மீ., காளையார்கோயிலி விருந்து 35 கி.மீ. காரைக்குடியிலிருந்து 42 கி.மீ. சிவகங்கையிலிருந்து 55 கி.மீ. மதுரையிலிருந்து 97 கி.மீ. ஆவுடையார்கோயிலிலிருந்து 50 கி.மீ. தொலைவில். காரைக்குடி – தேவக்கோட்டை வழியிலும், மதுரை – சிவகங்கை வழியிலும் வரலாம்.

201. அருள்மிகு காளீஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : பாண்டிய நாடு - 10 வது
இறைவன் : சொர்ணகாளீஸ்வரர் / சுந்தரேசர் / சோமேசர்
இறைவி : சொர்ணவல்லி / சௌந்தரநாயகி / மீனாட்சி
தல தீர்த்தம் : கஜபுஷ்கரணி, காளி, விஷ்ணு, கௌரி தீர்த்தங்கள்..
தல விருட்சம் : மந்தாரை
புராணப் பெயர்: கானப்பேர்

மூன்று சிவன்.மூன்று அம்பாள் உள்ள தலம்.மருதுபாண்டியர் கட்டிய கோபுரம்.இதிலிருந்து பார்த்தால் மதுரை தெரியுமாம்.கோயிலின் எதிரே மருதுபாண்டியர் சமாதி. ராமர் கஜபுஷ்கரணியில் நீராடி வழிபட்ட தலம். சண்டாசுரனை கொன்ற காளி வழிபட்டு சுவர்ணவல்லியாக சிவனை மணந்தது. சகஸ்ர லிங்க தரிசனம்.இந்திரன் வழிபட்ட தலங்களுள் ஒன்று. தங்கத்தாலான பள்ளியறை. கோயிலைக் காக்க மருதுபாண்டியர் உயிர் விட்டது உண்மை வரலாறு.......

அருள்மிகு காளீஸ்வரர்
திருக்கோயில், காளையார்கோயில்
அஞ்சல் - 623 551,
சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு.
: 04575 - 232516

சென்னையிலிருந்து 480 கி.மீ., திருச்சியிலிருந்து 150 கி.மீ., திருப்பத்தூரிலிருந்து 42 கி.மீ. காரைக்குடியிலிருந்து 37 கி.மீ. சிவகங்கையிலிருந்து 20 கி.மீ. மதுரையிலிருந்து 63 கி.மீ. தொலைவில். சிவகங்கை, தேவக்கோட்டை, மதுரை வழிகளில் வரலாம்.

202. அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : பாண்டிய நாடு - 11 வது
இறைவன் : புஷ்பவனேஸ்வரர் / பூவனநாதர்
இறைவி : மின்னனையாள் / சௌந்தரநாயகி
தல தீர்த்தம் : வைகை,மணிகர்ணிகை
தல விருட்சம் : பலா மரம்
புராணப் பெயர்: பூவனம்

தேவார மூவர் பாடல் பெற்ற தலம்.மூவேந்தர்கள் வழிபட்ட தலம்.மதுரை சோமசுந்தரக் கடவுள் செய்த 64 திருவிளையாடல்களுள் பொன்னனையாள் என்ற பக்தைக்காக இறைவன் சித்தராக வந்து ரசவாதம் செய்து பொன்னை உருவாக்கி சிவலிங்கம் செய்தார். அந்த லிங்கத்தின் அழகில் மயங்கிய அவள் கிள்ளி முத்தமிட்ட திருவிளையாடல் தலம்.4 யுகம் கண்ட கோயில்.புஷ்பவனக் காசி. 14 விநாயகர்கள். பித்ரு தர்ப்பணம் செய்ய உகந்த தலம். ஒருமுறையேனும் தரிசிக்க வேண்டிய சிறப்புமிகு தலமிது...

அருள்மிகு புஷ்பவனேஸ்வரர்
திருக்கோயில், திருப்பூவணம் அஞ்சல் -
623 407, கண்டியூர் வழி,
இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04575 - 265082, 94435 01761

சென்னையிலிருந்து 568 கி.மீ., திருச்சியிலிருந்து 165 கி.மீ., பரமக்குடியிலிருந்து 57 கி.மீ. சிவகங்கையிலிருந்து 33 கி.மீ. மதுரையிலிருந்து 21 கி.மீ. தொலைவில். மதுரை - மானாமதுரை சாலையில் உள்ளது. மதுரையிலிருந்து இராமேஸ்வரம் சாலையில் சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

203. அருள்மிகு திருமேனிநாதர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : பாண்டிய நாடு – 12 வது
இறைவன் : சுழிகேசர்/ தனுநாதர்/ மணக்கோலநாதர்/ புவனேஸ்வரர்
இறைவி : சகாயவல்லி/ துணைமாலையம்மை/ சொர்ணமாலை
தல தீர்த்தம் : பாவகரி ,கவ்வைக்கடல்,பூமி,சூலம்,கோடி தீர்த்தங்கள்
தல விருட்சம் : அரசு,புன்னை
புராணப் பெயர்: சுழியல்

பிரளயத்தின் போது ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினைத் தடுத்து தன் சூலத்தினைச் சுழித்து, பூமிக்குள் செலுத்திய ஈசன். திருமணக் கோலம். கல்தூண் மண்டபம், சிற்பங்கள் நிறைந்த கம்பத்தடி மண்டபம்,சபா மண்டபம்,அந்தராள மண்டபம்,அர்த்த மண்டபம். கலைநுட்பத்துடன் சிலைவடிவ நடராஜர், உற்சவர்,பதஞ்சலி, வியாக்ரபாதருடன். சுழிகைக் கோவிந்தர், பிரளய விடங்கர், அண்டபகிரண்ட விநாயகர், கல்லில் ஸ்ரீ சக்கரம். ரமண மகரிஷி அவதாரப் பதி.

அருள்மிகு திருமேனிநாதர்
திருக்கோயில், திருச்சுழி அஞ்சல்
– 626 129, திருச்சுழி வட்டம்,
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04566 – 282644

சென்னையிலிருந்து 561 கி.மீ., திருச்சியிலிருந்து 198 கி.மீ., பரமக்குடியிலிருந்து 50 கி.மீ. இராமநாதபுரத்திலிருந்து 70 கி.மீ. மதுரையிலிருந்து 56 கி.மீ. அருப்புக் கோட்டையிலிருந்து 15 கி.மீ. தொலைவில். மதுரை – அருப்புக்கோட்டை சாலையில் உள்ளது.

204. அருள்மிகு குற்றாலநாதர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : பாண்டிய நாடு – 13 வது
இறைவன் : குற்றாலநாதர்/ குறும்பலா ஈசர் /திரிகுடாசலபதி
இறைவி : குழல்வாய்மொழியம்மை / வேணுவாக்குவாஹினி
தல தீர்த்தம் : வடஅருவி, சிவமதுகங்கை, சித்ராநதி
தல விருட்சம் : குறும்பலா
புராணப் பெயர்: குற்றாலம்

சக்தி பீடங்களுள் பராசக்தி பீடம். பஞ்ச சபைகளுள் சித்ர சபை. அகத்தியரால் குறுக்கி லிங்கமாக ஆக்கி வழிபட்ட லிங்கம்.லிங்கத்தின் மீது விரல்தடம்.லிங்கத்திற்கு மூலிகைத் தைலம்.அகத்தியருக்கு திருமணக்காட்சி. ஸ்ரீசக்ர பீடத்தில் அமர்ந்து அருளும் பராசக்தி. காமகோடீஸ்வரர்,மணக்கோலநாதர், கிருஷ்ணர், நன்னகரப் பெருமாள். லிங்க வடிவில் பலாச்சுளை. சித்ர சபையில் கலை உச்சத்தை தொடும் ஓவியங்கள். குற்றாலக்குறவஞ்சி,குற்றால அருவி.....

அருள்மிகு குற்றாலநாதர்
திருக்கோயில், குற்றாலம்,
குற்றாலம் அஞ்சல் – 627 802,
திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.
: 04633 – 283138, 210138

சென்னையிலிருந்து 618 கி.மீ., திருச்சியிலிருந்து 330 கி.மீ., மதுரையிலிருந்து 195 கி.மீ. தென்காசியிலிருந்து 6 கி.மீ. திருநெல்வேலியிலிருந்து 59 கி.மீ. இராஜ பாளையத்திலிருந்து 74 கி.மீ. கோவில்பட்டியிலிருந்து 93 கி.மீ. தொலைவில். தென்காசி – செங்கோட்டைக்கு இடையில் உள்ளது.

205. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : பாண்டிய நாடு – 14 வது
இறைவன் : வேணுவனேஸ்வரர் / வேய்முத்துநாதர் / சாலிவாடீசர்
இறைவி : காந்திமதியம்மை / வடிவுடையம்மை
தல தீர்த்தம் : பொற்றாமரைக்குளம், கருமாறி, சிந்துபூந்துறை
தல விருட்சம் : மூங்கில் (வேணு, வேய்)
புராணப் பெயர்: நெல்வேலி

பஞ்ச சபைகளுள் தாமிர சபை. முக்குறுணி விநாயகர். சக்தி பீடங்களுள் காந்தி சக்தி பீடம். வேதபட்டர் என்ற பக்தன் இறைவன் நெய்வேத்தியத்திற்காக பெற்ற நெல்லைக் காயவைத்தி ருந்தார். மழைவரவே, இறைவன் நெல் கிடந்த இடத்தில் மழை அண்டாமல் காத்த தலம். தாமிரபரணி தாய், மான் வாகன துர்க்கை, வடக்கு நோக்கிய புதன், திருமூல மகாலிங்கம். திருமால் மார்பில் லிங்கம். வெண்ணிற ஆடையில் அம்மன். அன்னம் பரிமாறும் அம்பிகை. காந்திமதி சீர். மகா, ஆயிரங்கால், ஊஞ்சல், சங்கிலி, திருக்கல்யாண, வசந்த, சோமவார, நவக்கிரக மண்டபங்கள்.........

அருள்மிகு நெல்லையப்பர்
திருக்கோயில்,
திருநெல்வேலி அஞ்சல் – 627 001,
திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 0462 – 2339910

சென்னையிலிருந்து 625 கி.மீ., திருச்சியிலிருந்து 294 கி.மீ., மதுரையிலிருந்து 157 கி.மீ. நாங்குனேரியிலிருந்து 32 கி.மீ. இராமநாதபுரத்திலிருந்து 161 கி.மீ. குற்றாலத்தி லிருந்து 57 கி.மீ. தொலைவில். சென்னை, மதுரை, இராமநாதபுரம், திருச்சி எனப் பல ஊர்களிலிருந்தும் பேருந்து வசதிகள். திருநெல்வேலி இரயில் நிலையம்.

206. அருள்மிகு அவிநாசிநாதர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : கொங்கு நாடு – 1 வது
இறைவன் : அவிநாசிநாதர் / பெருங்கேடிலியப்பர்
இறைவி : கருணாம்பிகை / பெருங்கருணைநாயகி
தல தீர்த்தம் : காசிக் கிணறு, ஐராவத, நாகக்கன்னிகை தீர்த்தங்கள்
தல விருட்சம் : பாதிரி மரம் (பிரம்மோற்சவம் மட்டுமே பூக்கும்)
புராணப் பெயர்: அவிநாசி / திருப்புக்கொளியூர்

சுந்தரர், முதலை உண்ட பிள்ளையைப் பதிகம் பாடி உயிரோடு அழைத்த தலம். தெட்சிணாமூர்த்திக்கு மேல் சிவயோகி முனிவர். உள்பிரகாரத்தில் வடை மாலை சாற்றப் படும் பைரவர். அம்மன் சன்னதி பின்புறம் விருச்சிகம். மிகப்பெரிய தேர். பிரம்மா, ஐராவதம், தாடகை, நாகக்கன்னி வழிபட்டது. மூலவர், பைரவர், நல்ல சனி. தீர்த்தம் காசியிலிருந்து வந்தவை. கொடிமரம் அருகில் விஷ்ணு. தீபத் தூணில் சுந்தரர், முதலை பிள்ளை. 6 கோண அமைப்பு. வியாதவேட திருடன் சன்னதி. நர்த்தன கணபதி, மாணிக்கவாசகர் பாடல்...

அருள்மிகு அவிநாசிநாதர்
திருக்கோயில், அவிநாசி,
அவிநாசி அஞ்சல் – 641 654,
கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 04296 – 273113

சென்னையிலிருந்து 456 கி.மீ., திருச்சியிலிருந்து 200 கி.மீ., மதுரையிலிருந்து 270 கி.மீ. திருப்பூரிலிருந்து 14 கி.மீ. கோயம்புத்தூரிலிருந்து 55 கி.மீ. ஈரோட்டிலிருந்து 55 கி.மீ. பவானியிலிருந்து 64 கி.மீ. தொலைவில். கோவை – ஈரோடு நெடுஞ்சாலையில் சாலையை ஒட்டியே அமைந்துள்ள தலம்.

207. அருள்மிகு முருகநாதேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : கொங்கு நாடு - 2 வது
இறைவன் : முருகநாதேஸ்வரர் / முருகநாதசுவாமி
இறைவி : ஆலிங்கபூஷணஸ்தனாம்பிகை / முயங்குபூண்முலையம்மை
தல தீர்த்தம் : சண்முக,ஞான,பிரம தீர்த்தங்கள்
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: முருகன்பூண்டி

சூரபத்மனை அழித்த பிரம்மஹத்தி தோஷம் நீங்க முருகன் அமைத்து வழிபட்ட சிவன். மயில்,வேல் இன்றி அருளும் முருகன். முருகன் உருவாக்கிய தீர்த்தம். சேரமான் கொடுத்த பரிசுகளை பூதகணங்கள் உதவியோடு சுந்தரரிடமிருந்து கவர்ந்து, மீண்டும் அருளிய தலம். பிரம்மதாண்டவம் ஆடிய சிவன். 8 கைகளுடன் நீலகண்டி. கூப்பிடு விநாயகர். மேற்கூரையில் நந்தி. வடக்கு நோக்கிய கோமுகம்.மகாரதன் புத்திரப்பேறு. வாடிய, மகிழ்ச்சியுடன் இரண்டு சிற்பங்கள்.

அருள்மிகு முருகநாதேஸ்வரர்
திருக்கோயில், திருமுருகன்பூண்டி
அஞ்சல் - 641 652, அவிநாசி வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04296 - 273507,94434 59074

சென்னையிலிருந்து 454 கி.மீ., திருச்சியிலிருந்து 198 கி.மீ., மதுரையிலிருந்து 268 கி.மீ. சேலத்திலிருந்து 120 கி.மீ. திருப்பூரிலிருந்து 10 கி.மீ. கோயம்புத்தூரிலிருந்து 42 கி.மீ. ஈரோட்டிலிருந்து 56 கி.மீ. பவானியிலிருந்து 63 கி.மீ. அவிநாசி 7 கி.மீ. தொலைவில். கோவை - ஈரோடு நெடுஞ்சாலையில் அவிநாசிக்கு அடுத்துள்ள தலம்.

208. அருள்மிகு சங்கமுகநாதேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : கொங்கு நாடு - 3 வது
இறைவன் : சங்கமுகநாதேஸ்வரர் / சங்கமேஸ்வரர்
இறைவி : வேதாம்பிகை
தல தீர்த்தம் : பவானி முக்கூடல்
தல விருட்சம் : இலந்தை
புராணப் பெயர்: திருநணா

சோமாஸ்கந்த வடிவம்.4 மலைகளுக்கு நடுவிலான பத்மகிரி.பவானி,காவிரி,அமுத நதிகளின் திரிவேணி சங்கமம். ஆதிகேசவப் பெருமாள், மாந்தி (சனி மகன்) ரூப சனி, சங்கம விநாயகர். அகால மரணத்திற்கு நாராயணபலி பூஜை.மாசி ரதசப்தமி மூவர் மீது சூரிய பூஜை. விசுவாமித்திரர் பிரதிஷ்டை செய்த காயத்ரி லிங்கம். இழந்தைப் பழம். சகஸ்ர லிங்கம், ஆங்கிலேயர் வழங்கிய தங்கக் கட்டில். மகப்பேறு வேண்டி இடையில் வைத்து வழிபடும் அமிர்தலிங்கேஸ்வரர். மண்டை ஓடு வெடிப்பதில்லை. ஆடி 18. 2 தலை பசு.

அருள்மிகு சங்கமுகாநாதேஸ்வரர்
திருக்கோயில், பவானி,
பவானி அஞ்சல் - 638 301,
ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு.
: 04256 - 230192, 98432 48588

சென்னையிலிருந்து 408 கி.மீ., திருச்சியிலிருந்து 153 கி.மீ., மதுரையிலிருந்து 274 கி.மீ. சேலத்திலிருந்து 72 கி.மீ. திருப்பூரிலிருந்து 62 கி.மீ. கோயம்புத்தூரிலிருந்து 112 கி.மீ. ஈரோட்டிலிருந்து 12 கி.மீ. திருச்செங்கோட்டிலிருந்து 29 கி.மீ. கொடுமுடிக்கு 53 கி.மீ. தொலைவில். கோவை, ஈரோடு, சேலத்திலிருந்து இத்தலத்தை அடையலாம்.

209. அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : கொங்கு நாடு – 4 வது
இறைவன் : அர்த்தநாரீஸ்வரர்
இறைவி : பாகம்பிரியாள்
தல தீர்த்தம் : தேவ தீர்த்தம்
தல விருட்சம் : இலுப்பை
புராணப் பெயர்: கொடிமாடச்செங்குன்றூர்

சிவனும்,உமையும் இணைந்து அருளும் தலம். 1200 படிகள் கொண்ட மலைக் கோயில். சிறப்புமிகு 60-ம் படி. சுவாமி பாதத்தின் கீழ் தேவ தீர்த்தம்.கேதார கௌரி வழி பட்டு சரிபாகம் பெற்றது.சம்பந்தர் பதிகம்பாடி பிணி தீர்த்தல்.நாக மலை.மலையே சிவம். சிவம்.மலைக்கு எதிரே நந்தி.ஆதிகேசவப் பெருமாள்,செங்கோட்டு வேலவர்.60 அடி நீள 5 தலை நாகர். கலை நுணுக்கம் மிகு சிற்பங்கள்.அம்மன் வழிபட்ட லிங்கம். வெள்ளைப் பாஷாணத்தாலான சுயம்பு...

அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர்
திருக்கோயில், திருச்செங்கோடு
அஞ்சல் – 637 211,
நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு.
: 04288 – 255925, 93620 23163

சென்னையிலிருந்து 418 கி.மீ., திருச்சியிலிருந்து 159 கி.மீ., மதுரையிலிருந்து 223 கி.மீ. திருப்பூரிலிருந்து 77 கி.மீ. கோயம்புத்தூரிலிருந்து 120 கி.மீ. ஈரோட்டிலிருந்து 22 கி.மீ. பவானியிலிருந்து 27 கி.மீ. கொடுமுடிக்கு 40 கி.மீ. தொலைவில். ஈரோடு – சேலம் நெடுஞ்சாலையில் உள்ளது. 1200 படிகள் கொண்ட மலைக்கோயில்.

210. அருள்மிகு விகிர்தநாதேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : கொங்கு நாடு – 5 வது
இறைவன் : விகிர்தநாதேஸ்வரர் / கல்யாணவிகிர்தேஸ்வரர்
இறைவி : மதுரபாஷிணி / பண்ணேர்மொழியம்மை/ விகிர்தநாயகி
தல தீர்த்தம் : குடகனாறு
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: வெஞ்சமாக்கூடல் (குடகனாறு, சிற்றாறு)

வெஞ்சமன் எனும் வேட்டுவ மன்னன் ஆண்டது. இரு நதிகள் கூடும் இடம். கிழவியாக வந்த இறைவியிடம் விநாயகர், முருகனை ஈடாக வைத்து பொன் பெற்று இறைவன் சுந்தரருக்கு கொடுத்த தலம். மூலவர் வாயிற் கதவுகளில் கொங்கு நாட்டு 7 மூர்த்தங்கள். கருங்கற் விளக்கு தூண். 6 முகங்கள்,12 கரங்களுடன் முருகன். காமதேனு பால் சொரியும் சிற்பம். நாகபரணத்தின் கீழ் சுயம்பு மூர்த்தியாக இறைவன். பஞ்ச லிங்க சன்னதி.படியிறங்கி சென்றுதான் தரிசனம்.

அருள்மிகு விகிர்தநாதேஸ்வரர்
திருக்கோயில், வெஞ்சமாங்கூடலூர்,
மூலப்பட்டி வழி, அரவக்குறிச்சி – 639 109,
கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04324 – 262010, 99435 27792

சென்னையிலிருந்து 490 கி.மீ., திருச்சியிலிருந்து 230 கி.மீ., மதுரையிலிருந்து 290 கி.மீ. கரூரிலிருந்து 20 கி.மீ. அரவக்குறிச்சியிலிருந்து 15 கி.மீ. தொட்டியத்தி லிருந்து 59 கி.மீ. ஈரோட்டிலிருந்து 90 கி.மீ. தொலைவில். கரூர் – அரவக்குறிச்சி சாலையில் 13 கி.மீ. தொலைவில் 6 ரோடு சந்திப்பில் இடதுபுறம் 8 கி.மீ.–ல் உள்ளது

211. அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : கொங்கு நாடு – 6 வது
இறைவன் : மகுடேஸ்வரர் / கொடுமுடிநாதர்
இறைவி : மதுரபாஷிணி / பன்மொழிநாயகி / திரிபுரசுந்தரி
தல தீர்த்தம் : தேவ,பிரம,காவிரி தீர்த்தங்கள்
தல விருட்சம் : வன்னி மரம்
புராணப் பெயர்: பாண்டிக்கொடுமுடி

பழமைமிகு வன்னி மரத்தடியில் மும்முகத்துடன் பிரம்மன். பரத்வாஜர்,அகத்தியருக்கு திருமணக்காட்சி.வாலில் மணி,கோரப் பல்லுடன் ஆஞ்சனேயர்.புலிப்பல்,யானை முகத்துடன் வியாக்ரபாத விநாயகர்.ஆதிசேஷன்,வாயு இடையே ஏற்பட்ட போட்டியில் மேருவின் துண்டு விழுந்து வைரமணியாகிய தலம். நாகர் வழிபாடு சிறப்பு மிக்க தலம்.வன்னி இலை போட்ட நீர் கெடுவதில்லை. பள்ளி கொண்ட, வீரநாராயணப் பெருமாள். நாகர் பிரதிஷ்டை. சுந்தரர் நமசிவாய பதிகம்....

அருள்மிகு மகுடேஸ்வரர்
திருக்கோயில், கொடுமுடி
அஞ்சல் – 638 151,
ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு.
: 04204 – 222375

சென்னையிலிருந்து 439 கி.மீ., திருச்சியிலிருந்து 165 கி.மீ., மதுரையிலிருந்து 244 கி.மீ. கரூரிலிருந்து 28 கி.மீ. தொட்டியத்திலிருந்து 67 கி.மீ. முசிறியிலிருந்து 73 கி.மீ. ஈரோட்டிலிருந்து 39 கி.மீ. தொலைவில். ஈரோடு – கரூர் சாலையில் அமைந்துள்ளது.

212. அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர்

அமைவிடம் : கொங்கு நாடு – 7 வது
இறைவன் : பசுபதீஸ்வரர் / பசுபதிநாதர் / ஆனிலையப்பர்
இறைவி : கிருபாநாயகி / சௌந்தர்யநாயகி / அலங்காரவல்லி
தல தீர்த்தம் : ஆம்பிரவதி (அமராவதி)
தல விருட்சம் : வஞ்சி
புராணப் பெயர்: கருவூர்

புகழ்ச்சோழ நாயனார் ஆண்ட பதி. எறிபத்த நாயனார் அவதாரத் தலம்.சிவகாமியாண்டார் தொண்டு செய்தது. முசுகுந்த சக்கரவர்த்தி திருப்பணி. கருவூர் சித்தர் அவதார, முக்தி தலம்.காமதேனு வழிபட்டது. லிங்கத்தில் காமதேனு கால் குளம்பு தடம். 100 கால் மண்டபம்.பசு பால் சொரியும்,புகழ்ச்சோழ நாயனார், கோபுரத்தில் தசாவதாரம், திருவிளையாடல் புராணச் சிற்பங்கள். சூரிய பூஜை. சற்று சாய்ந்த லிங்கம். சோழர்கள் அரசாண்ட 5 தலைநகருள் ஒன்று...

அருள்மிகு பசுபதீஸ்வரர்
திருக்கோயில்,
கரூர் அஞ்சல் – 639 001,
கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04324 – 262010, 9994012627

சென்னையிலிருந்து 438 கி.மீ., திருச்சியிலிருந்து 87 கி.மீ., மதுரையிலிருந்து 272 கி.மீ. குளித்தலையிலிருந்து 40 கி.மீ. முசிறியிலிருந்து 45 கி.மீ. தொட்டியத்திலிருந்து 39 கி.மீ. ஈரோட்டிலிருந்து 68 கி.மீ. தொலைவில். திருச்சி – ஈரோடு சாலையில் அமைந்துள்ளது.

213. அருள்மிகு அரத்துறைநாதர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : நடு நாடு – 1 வது
இறைவன் : ஆனந்தீஸ்வரர் / தீர்த்தபுரீஸ்வரர்
இறைவி : ஆனந்தநாயகி / திரிபுரசுந்தரி
தல தீர்த்தம் : நிவா நதி தீர்த்தம்
தல விருட்சம் : ஆல மரம்
புராணப் பெயர்: நெல்வாயில் அரத்துறை

வெள்ளாற்றின் கரையில் உள்ள ஏழு துறைத்தலங்களுள் ஒன்று.சங்கரர்,குகை நமச்சிவாயர், வள்ளலார் பாடியது.விஷ்ணு,பிரம்மா,சனகர்,சேர,சோழ,பாண்டியர்,சனி,செவ்வாய், வால்மீகி, சப்த ரிஷிகள் வழிபட்டது.சேர,சோழ,பாண்டிய லிங்கங்கள். கணவனை இழந்த பெண்கள் நுழைந்து வழிபடும் மகம் வாசல். மாடச் சிற்பங்கள், எட்டுத் திருமகள். சம்பந்தருக்கு முத்துச்சிவிகை, குடை, சின்னங்கள் வழங்கி அழைத்து வரச்செய்த தலம். மூவர் பதிகம் பெற்றது.

அருள்மிகு அரத்துறைநாதர்
திருக்கோயில், திருவட்டுறை,
திட்டக்குடி வட்டம் – 606 111,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04143 – 246303

சென்னையிலிருந்து 243 கி.மீ., திருச்சியிலிருந்து 145 கி.மீ., மதுரையிலிருந்து 270 கி.மீ., பெரம்பலூரிலிருந்து 49 கி.மீ. பெண்ணாடத்திலிருந்து 8 கி.மீ. விருத்தாச்சலத்திலிருந்து 26 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. விருத்தாசலம்-திட்டக்குடி சாலையில் கொடிகளம் ஊரிலிருந்து சென்றால் கோயிலை அடையலாம்.

214. அருள்மிகு பிரளயகாலேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : நடு நாடு – 2 வது
இறைவன் : பிரளயகாலேஸ்வரர் / சுடர்கொழுந்தீசர்
இறைவி : ஆமோதனம்மாள் / கடந்தைநாயகி / அழகிய காதலி
தல தீர்த்தம் : கயிலை, பார்வதி, இந்திரன், முக்குள தீர்த்தங்கள்
தல விருட்சம் : சண்பகம்
புராணப் பெயர்: பெண்ணாகடம் / தூங்கானைமாடம்

கன்னியர்,காமதேனு,யானை வழிபட்டது(பெண்+ஆ+கடம்). கலிக்கம்ப நாயனார், மெய்கண்டார் அவதாரத்தலம். மறைஞானசம்பந்தர் வாழ்ந்த தலம். மூன்று பலகணிகள் உள்ளதால் இறைவனை எங்கிருந்தும் வணங்கலாம். பிரளயத்தில் வெள்ளத்தை திசை மாற்றி புவியைக் காத்த இறைவன்.வாசல் நோக்கிய நந்தி. திருநாவுக்கரசர் திரிசூல, ரிஷப முத்திரை பெற்ற தலம். சோழ மன்னனுக்காக இறைவன் கட்டுமலைக் கோயிலில் காட்சியளித்த தலம்.

அருள்மிகு பிரளயகாலேஸ்வரர்
திருக்கோயில், பெண்ணாடம் அஞ்சல் –
606 105, திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04143 – 222788

சென்னையிலிருந்து 238 கி.மீ., திருச்சியிலிருந்து 140 கி.மீ., மதுரையிலிருந்து 263 கி.மீ., உளுந்தூர்பேட்டையிலிருந்து 40 கி.மீ. திட்டக்குடியிலிருந்து 17 கி.மீ. விருத்தாச்சலத்திலிருந்து 19 கி.மீ. நெய்வேலியிலிருந்து 44கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. விருத்தாசலம்-திட்டக்குடி சாலையில் சுமைதாங்கி வழி.

215. அருள்மிகு நர்த்தனவல்லபேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : நடு நாடு - 3 வது
இறைவன் : நர்த்தனவல்லபேஸ்வரர் / நெறிகாட்டுநாதர்
இறைவி : பராசக்தி, ஞானசக்தி
தல தீர்த்தம் : வெள்ளாறு, மணிமுத்தாறு சங்கமம்
தல விருட்சம் : கல்லால மரம்
புராணப் பெயர்: கூடலையாற்றூர் / தட்சிணப்பிரயாகை

சித்திரை 1,2,3 சூரிய பூஜை.ஞானசக்தி சன்னதியில் குங்குமம், பராசக்தி சன்னதியில் விபூதி பிரசாதம். பிரம்மா, சரஸ்வதி தவமிருந்து இறைவனின் நர்த்தனம் கண்ட தலம். கல்வி, கலை, வித்தைகளில் சிறந்து விளங்க வழிபட வேண்டிய தலம். சித்திரகுப்தருக்கு சன்னதியும், உற்சவமூர்த்தியும். விஷ்ணு மகாலெட்சுமியை மணம் முடித்த தலம். விஷ்ணு சன்னதி. அகத்தியர் வழிபட்ட தலம். தினகரமகாராஜன் தோஷம் நீக்கிய தலம்.இருநதிகளின் கூடலால் மிகச்சிறப்பு.

அருள்மிகு நர்த்தனவல்லபேஸ்வரர்
திருக்கோயில், திருக்கூடலையாற்றூர்,
கவாலக்குடி, காட்டுமன்னார்கோயில் -
608 702, கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 99422 49938

சென்னையிலிருந்து 190 கி.மீ., திருச்சியிலிருந்து 110 கி.மீ., மதுரையிலிருந்து 233 கி.மீ., கும்பகோணத்திலிருந்து 64 கி.மீ. சீர்காழியிலிருந்து 49 கி.மீ. சேத்தியாத் தோப்பிலிருந்து 11 கி.மீ. தொலைவில். கும்பகோணம்-சேத்தியாத்தோப்பு சாலையில் குமாரகுடி வந்து, ஸ்ரீமுஷ்ணம், கவாலகுடி வழியே சென்று கோயிலை அடையலாம்.

216. அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : நடு நாடு - 4 வது
இறைவன் : நீலகண்டேஸ்வரர் / சுவேதார்க்கவனேஸ்வரர்
இறைவி : அபீதகுஜநாயகி / நீலமலர்க்கண்ணி / நீலோற்பலாம்பாள்
தல தீர்த்தம் : நீலோற்பலம்,கந்த,சுவேத,செங்கழுநீர் தீர்த்தங்கள்
தல விருட்சம் : வெள்ளெருக்கு
புராணப் பெயர்: எருக்கத்தம்புலியூர் / குமரேசப்பட்டினம்

திருநீலகண்ட நாயனார் அவதாரத்தலம். ராஜராஜசோழனுக்கு புத்திர பாக்கியமருளிய தலம். வியாக்ரபாதர் வழிபட்ட புலியூர்களுள் ஒன்று. மதங்க சூளாமணியாருடன், திரு நீலகண்ட நாயனார். சுவேதன் என்ற அரசன் வெண்குட்டம் நீக்கியது. உருத்திரசன்மர் (முருகன்) ஊமைப்பிள்ளையாக இருந்த குமரனைப் பேச வைத்த தலம். மார்ச் 16-20 மாதத்தில் சூரிய பூஜை. இறைவன் தேவர்களையும்,முனிவர்களையும் வெள் ளெருக்கு மரங்களாக்கி வழிபடச் செய்தது.

அருள்மிகு நீலகண்டேஸ்வரர்
திருக்கோயில், இராஜேந்திரப்பட்டினம் -
608 703, விருத்தாச்சலம் வட்டம்,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 99761 79524

சென்னையிலிருந்து 220 கி.மீ., திருச்சியிலிருந்து 132 கி.மீ., மதுரையிலிருந்து 292 கி.மீ., விருத்தாச்சலத்திலிருந்து 13 கி.மீ. ஸ்ரீமுஷ்ணத்திலிருந்து 7 கி.மீ. சேத்தியாத் தோப்பிலிருந்து 26 கி.மீ. நெய்வேலியிலிருந்து 31 கி.மீ. தொலைவில். விருத்தாச்சலம் - ஜெயங்கொண்டம் சாலையில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது.

217. அருள்மிகு சிவக்கொழுந்தீசர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : நடு நாடு – 5 வது
இறைவன் : சிவக்கொழுந்தீசர் / சிவாங்கரேஸ்வரர்
இறைவி : நீலாயதாட்சி / ஒப்பிலாநாயகி / கருந்தடங்கண்ணி
தல தீர்த்தம் : ஜாம்புவ தீர்த்தம் (ஜாம்பு = கரடி வடிவில் முனிவர்)
தல விருட்சம் : கொன்றை
புராணப் பெயர்: தினைநகர்

பங்குனி 20,21,22 சூரிய பூஜை. திருமால் சங்கு முழங்க,பிரம்மா மத்தளம் வாசிக்க நடராஜர் ஆனந்த நடனம் புரியும் காட்சி. இரு கால்களையும் மடக்கி முயலகன் இன்றி அமர்ந்துள்ள நிலையில் தெட்சிணாமூர்த்தி. பெரியான் என்ற பக்தனுக்காக இறைவன் பணியாளாக வந்து உழுது, ஒரே நாளில் தினை விளைவித்த தலம். ஜாம்புவ ரிஷி சாபவிமோசனம் பெற்ற தலம். இறைவன் பயன்படுத்திய ஏர், கலம் கோயிலில். தினை நைவேத்தியம். நிருத்த கணபதி.

அருள்மிகு சிவக்கொழுந்தீசர்
திருக்கோயில், தீர்த்தனகிரி அஞ்சல்,
கடலூர் வட்டம் – 608 801,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 99653 28278, 99653 28271

சென்னையிலிருந்து 212 கி.மீ., திருச்சியிலிருந்து 213 கி.மீ., மதுரையிலிருந்து 373 கி.மீ., சிதம்பரத்திலிருந்து 52 கி.மீ. கடலூரிலிருந்து 27 கி.மீ. ஆலப்பாக்கத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில். கடலூர் – சிதம்பரம் சாலையில் 22 கி.மீ. தொலைவில் ஆலப்பாக்கம், தானூர் வழியே 5 கி.மீ. சென்றால் இத்தலம் வரலாம்.

218. அருள்மிகு மங்களபுரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : நடு நாடு – 6 வது
இறைவன் : மங்களபுரீஸ்வரர் / திருச்சோபுரநாதர்
இறைவி : வேல்நெடுங்கண்ணி / சத்யதாட்சி / தியாகவல்லியம்மை
தல தீர்த்தம் : கிணற்று நீர்
தல விருட்சம் : கொன்றை
புராணப் பெயர்: சோபுரம்

அகத்தியர் பிரதிஷ்டை செய்த மணல் லிங்கம் ஆதலால் அவரது கைத்தடம் இறைவன் மீது. தட்டினால் சப்தஸ்வர ஓசை எழுப்பும் தெட்சிணாமூர்த்திக்கு வெள்ளை வஸ்திரம் அணிவித்து வழிபடுவது சிறப்பு.அகத்தியர் அமைத்த லிங்கத்துள் அம்பாள் ஐக்கியம் ஆகிவிட்டதால் மஞ்சள் குங்கும வழிபாடு. மணலுள் மூழ்கியிருந்த தலம். திரிபுனச் சக்கரவர்த்தி மனையாள் தியாகவல்லி திருப் பணிகள் செய்துள்ளார். கண்ணப்பநாய னார், கோஷ்டத்தில் மூவர் தரிசனம்....

அருள்மிகு மங்களபுரீஸ்வரர்
திருக்கோயில், திருச்சோபுரம்,
தியாகவல்லி அஞ்சல் – 608 801,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 98436 70518

சென்னையிலிருந்து 206 கி.மீ., திருச்சியிலிருந்து 207 கி.மீ., மதுரையிலிருந்து 367 கி.மீ., சிதம்பரத்திலிருந்து 29 கி.மீ. கடலூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில். கடலூர் – சிதம்பரம் சாலையில் ஆலப்பாக்கம் வழியே சென்றால் தலத்தை அடையலாம். அல்லது மேட்டுப்பாளையம் ஊர்வந்து தியாகவல்லி வழியே 5 கி.மீ.

219. அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : நடு நாடு – 7 வது
இறைவன் : வீரட்டேஸ்வரர் / வீரட்டநாதர் / அதிகைநாதர்
இறைவி : திரிபுரசுந்தரி
தல தீர்த்தம் : கெடிலம் தீர்த்தம்
தல விருட்சம் : சரக்கொன்றை
புராணப் பெயர்: அதிகை

முதன்முதலில் தேவாரம் பாடப் பெற்ற தலம்

சிவபெருமானின் அட்ட வீரட்டத்தலங்களுள் ஆயுதமின்றி புன்னகை,தண்ணகை,வெந் நகையால் திரிபுர சம்ஹார செய்த தலம். தேர்வடிவ கோயில்.விமான நிழல் தரையில் விழாது.முதன்முதலில் தேர்,சிதறு தேங்காய்,உழவாரம்,தேவாரம் பெற்ற தலம். தரும சேனர் சூலைநோய் நீங்கி நாவுக்கரசரான தலம். ஆணவம், கன்மம், மாயை மும் மலம் நீக்கும் தலம். பஞ்சமுக லிங்கம். அட்டவீரட்ட தலங்களுள் அதிகப் பதிகம், மூவர் வழிபட்டது. சித்திரைப் பெருவிழா....

அருள்மிகு வீரட்டேஸ்வரர்
திருக்கோயில், திருவதிகை,
பண்ருட்டி அஞ்சல் – 607 106,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04142 – 240317, 94439 88779

சென்னையிலிருந்து 165 கி.மீ., திருச்சியிலிருந்து 127 கி.மீ., மதுரையிலிருந்து 287 கி.மீ., சிதம்பரத்திலிருந்து 58 கி.மீ, கும்பகோணத்திலிருந்து 100 கி.மீ. புதுச்சேரியிலிருந்து 44 கி.மீ. கடலூரிலிருந்து 25 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 24 கி.மீ. தொலைவில். பண்ருட்டி-கடலூர் சாலையில் பண்ருட்டிக்கு 2 கி.மீ. தொலைவில்.

220. அருள்மிகு பக்தஜனேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : நடு நாடு – 8 வது
இறைவன் : பக்தஜனேஸ்வரர் / திருநாவலேஸ்வரர்
இறைவி : மனோன்மணி / சுந்தரநாயகி / சுந்தராம்பிகை
தல தீர்த்தம் : கோமுகி தீர்த்தம்
தல விருட்சம் : நாவல் மரம்
புராணப் பெயர்: நாவலூர்

சுந்தரர் அவதாரத் தலம்

பிரம்மா, விஷ்ணு, சப்த ரிஷிகள், சுக்கிரன், கருடன், சடையநாயனார், இசைஞானியார் வழிபட்ட தலம்.சுக்கிரன் பிரதிஷ்டை செய்த பார்க்கவீஸ்வரர். மகாவிஷ்ணு இரணியனை வதம்செய்ய நரசிம்ம அவதாரம் எடுக்கும் ஆற்றல் பெற்ற தலம். நவக்கிரகங்களுள் சூரியன் மேற்கு நோக்கி.பங்குனி 23-27 சூரிய பூஜை. இறைவனின் தோழனான சுந்தரர் அவதாரத் தலம். கருடன் விஷம் நீங்கிய தலம். மனைவியருடன் சுந்தரர். ரோகினியில் பிறந்தோர்க்கு உகந்த தலம்.

அருள்மிகு பக்தஜனேஸ்வரர்
திருக்கோயில், திருநாவலூர் அஞ்சல் – 607 204, உளுந்தூர்பேட்டை வட்டம், விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04149-224391, 94433 82945

சென்னையிலிருந்து 195 கி.மீ., திருச்சியிலிருந்து 172 கி.மீ., மதுரையிலிருந்து 332 கி.மீ., திருக்கோவிலூரிலிருந்து 39 கி.மீ, புதுச்சேரியிலிருந்து 60 கி.மீ. கடலூரி லிருந்து 40 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 28 கி.மீ. தொலைவில். விழுப்புரம் கடந்து மடப்பட்டு வழியே பண்ருட்டி செல்லும் சாலையில் 2 கி.மீ. தொலைவில் கோயில்.

221. அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : நடு நாடு – 9 வது
இறைவன் : விருத்தகிரீஸ்வரர் / பழமலைநாதர்
இறைவி : விருத்தாம்பிகை / பாலாம்பிகை
தல தீர்த்தம் : மணிமுத்தாறு, அக்னி, குபேர, சக்கர தீர்த்தங்கள்
தல விருட்சம் : வன்னி மரம்
புராணப் பெயர்: முதுகுன்றம் (விருத்த=பழமை,அசலம்=மலை)

1700 ஆண்டு பழமையான வன்னிமரம். விநாயகரின் அறுபடைவீடுகளுள் 2-ம் தலம். உலகம் அழிந்தபோதும்கூட அழியாத தலம்.முருகன் பிரதிஷ்டை செய்த 28 ஆகம லிங்கங்கள். மூர்த்தங்கள், திருநாமம்,விநாயகர்,தரிசனம் கண்டவர்கள், தேர்,கோபுரம், உள்பட எல்லாம் ஐந்து. சுந்தரர் 12000 பொன் பெற்று முத்தா நதியில் போட்டு திருவாரூர் குளத்தில் எடுத்துக் கொள்ள அருளிய தலம். காசிக்கு நிகரான தலம். திருவண்ணாமலைக்கு முந்தைய மலை.

அருள்மிகு பழமலைநாதர்
திருக்கோயில்,
விருத்தாச்சலம் அஞ்சல் – 606 001,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 04143 – 230203

சென்னையிலிருந்து 220 கி.மீ., திருச்சியிலிருந்து 122 கி.மீ., மதுரையிலிருந்து 248 கி.மீ., உளுந்தூர்பேட்டையிலிருந்து 23 கி.மீ, திட்டக்குடியிலிருந்து 35 கி.மீ. ஜெயங் கொண்டத்திலிருந்து 38 கி.மீ. நெய்வேலியிலிருந்து 20 கி.மீ. தொலைவில். பேருந்து நிலையத்திலிருந்து 1 கி.மீ. விருத்தாச்சலம் இரயில் நிலையம்.

222. அருள்மிகு சொர்ணகடேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : நடு நாடு – 10 வது
இறைவன் : வெண்ணெயப்பர் / நெல்வெண்ணெய்நாதர்
இறைவி : நீலமலர்க்கண்ணி / பிருகந்நாயகி
தல தீர்த்தம் : பெண்ணை நதி தீர்த்தம்
தல விருட்சம் : புன்னை மரம்
புராணப் பெயர்: நெல்வெண்ணெய்

இறைவன் நெல்லைக் கொண்டு அணை கட்டியது. மாசி மகாசிவராத்திரியில் நீலம், பச்சை, வெள்ளை, சிவப்பு நிறமாக மாறும் அதிசயம். சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் வழிபட்ட தலம். 7500 மணிகள் கொண்ட பிரம்மாண்ட ருத்ராட்ச பந்தல். சூலத்தின் மத்தியில் நின்ற கோலத்தில் இறைவன்.கைகூப்பி வணங்கும் அதிகார நந்தி. தியானத்தில் லட்சுமி நாராயணர். அம்பாள் எதிர்கொண்டு அழைத்ததால் சம்பந்தர் நடனக்கோலத்தில் காட்சி.

அருள்மிகு சொர்ணகடேஸ்வரர்
திருக்கோயில், நெய்வெணை, கூவாடு-
607 204, உளுந்தூர்பேட்டை வட்டம்,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
☏ : 04149 – 209097, 291786

சென்னையிலிருந்து 225 கி.மீ., திருச்சியிலிருந்து 186 கி.மீ., மதுரையிலிருந்து 315 கி.மீ., உளுந்தூர்பேட்டையிலிருந்து 14 கி.மீ, திட்டக்குடியிலிருந்து 56 கி.மீ. விருத்தாச் சலத்திலிருந்து 35 கி.மீ. திருவெண்ணெய்நல்லூரிலிருந்து 24 கி.மீ. தொலைவில். உளுந்தூர்பேட்டை-சேலம் சாலையில் குமாரமங்கலம் கடந்து அங்கனூர் வழியே.

223. அருள்மிகு வீரட்டேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : நடு நாடு -11 வது
இறைவன் : வீரட்டேஸ்வரர்
இறைவி : சிவானந்தவல்லி / பெரியநாயகி
தல தீர்த்தம் : தென்பெண்ணை
தல விருட்சம் : சரக்கொன்றை
புராணப் பெயர்: கோவலூர் . **விநாயகர் அகவல் தலம்**

ஔவையார் விநாயகரை வழிபட்டு சீதக் களப எனும் விநாயகர் அகவல் பாடிய தலம். திருமுறை கண்ட ராஜராஜன், சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்த நரசிங்கமுனையரையர், மெய்ப்பொருள் நாயனார் அவதரித்த தலம். அட்டவீரட்டத் தலங்களுள் அந்தகாசுரனை அழித்த தலம். அஷ்டபுஜ விஷ்ணு துர்க்கை. பெரியானை கணபதி மூலம் ஔவை கயிலை சென்ற தலம். முருகன் சிவபூஜை செய்த தலம். வாஸ்து, 64 பைரவ,பைரவிகள் தோன்றிய தலம்...

அருள்மிகு வீரட்டேஸ்வரர்
திருக்கோயில், திருக்கோயிலூர் அஞ்சல் - 606 001, திருக்கோயிலூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04153 - 253532, 94862 80030

சென்னையிலிருந்து 200 கி.மீ., திருச்சியிலிருந்து 190 கி.மீ., மதுரையிலிருந்து 330 கி.மீ., கடலூரிலிருந்து 71 கி.மீ, விழுப்புரத்திலிருந்து 38 கி.மீ. புதுவையிலிருந்து 77 கி.மீ. கும்பகோணத்திலிருந்து 146 கி.மீ. தொலைவில். விழுப்புரம்-திருச்சி சாலையில் அரசூர் கூட்டு ரோடு இடதுபுற சாலையிலுள்ள திருவெண்ணெய்நல்லூர் சாலையில்.

224. அருள்மிகு அதுல்யநாதேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : நடு நாடு - 12 வது
இறைவன் : ஒப்பிலாமணீஸ்வரர் / அறையணிநாதர்
இறைவி : சௌந்தர்யகனகாம்பிகை / அருள்நாயகி
தல தீர்த்தம் : தென்பெண்ணையாறு
தல விருட்சம் : வில்வம்
புராணப் பெயர்: அறையணிநல்லூர்

பாஞ்சாலிக்காக பீமன் வெட்டிய குளம். பாண்டவர்கள் தங்கியிருந்த 5 குடைவரைகள். மலைமீது உள்ள கோயில். 7 நிலைகள் கொண்ட வானளாவிய கோபுரம். மகாவிஷ்ணு வழிபட்ட தலம்.வள்ளலார் பாடிய தலம்.பிரயோகச் சக்கரத்துடன் மகாவிஷ்ணு,ஸ்ரீதேவி. ஸ்ரீதேவி அருகில் ஒரு பெண், விலங்கு முகத்தில் ஆண் சிலை. சம்பந்தர் பூஜை செய்த லிங்கம். பீடத்தின் மீது சம்பந்தர் பாதம். சம்பந்தர் பதிகம் பாடிட கதவு திறந்தது. திருவண்ணாமலை தரிசனம்.

அருள்மிகு அதுல்யநாதேஸ்வரர்
திருக்கோயில், அரகண்டநல்லூர்,
திருக்கோயிலூர் வட்டம் - 605 752,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 93456 60711, 99651 44849

சென்னையிலிருந்து 202 கி.மீ., திருச்சியிலிருந்து 192 கி.மீ., மதுரையிலிருந்து 332 கி.மீ., விழுப்புரத்திலிருந்து 37 கி.மீ. திருவண்ணாமலையிலிருந்து 33 கி.மீ. திருக்கோயிலூரிலிருந்து 5 கி.மீ. வந்தவாசியி லிருந்து 108 கி.மீ. தொலைவில். திருக்கோயிலூரிலிருந்து பெண்ணாற்று பாலம் கடந்து மறுக்கரையில் குன்றின் மீதுள்ளது.

225. அருள்மிகு மருதீஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : நடு நாடு -13 வது
இறைவன் : மருதீஸ்வரர் / இடையாற்றீசர்
இறைவி : ஞானாம்பிகை / சிற்றிடைநாயகி
தல தீர்த்தம் : சிற்றிடைத் தீர்த்தம்
தல விருட்சம் : மருதமரம்
புராணப் பெயர்: இடையாறு

39 வைப்புத் தலங்களுக்கு இணையானது

கிளிமுகம் கொண்ட சுகப்பிரம்ம மகரிஷி அம்பாளுக்கு சிவரகசிய உபதேசம் செய்த போது ஒட்டுக்கேட்ட சாபம் நீங்கப்பெற்ற தலம். சந்தானக்குரவர் மறைஞானசம்பந்தர் அவதாரத் தலம். அகத்தியர் வழிபட்ட தலம். முருகனுக்கு கலியுகராமப்பிள்ளையார் என்று பெயர். மாசி 15,16-ல் மாலை 5 மணிக்கு சூரிய பூஜை. பலாச்சுளையுடன் பாலகணபதி. 39 வைப்புத்தலங்களை வைத்து அதற்கீடானது இடையாறு என்று பாடியுள்ளார்.திருமணத்தடை நீக்கும் தலம்

அருள்மிகு மருதீஸ்வரர்
திருக்கோயில், இடையாறு - 607 209,
பெரிய செவலை, திருக்கோயிலூர் வட்டம்
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04146 - 216045, 94424 23919

சென்னையிலிருந்து 185 கி.மீ., திருச்சியிலிருந்து 165 கி.மீ., மதுரையிலிருந்து 302 கி.மீ., விழுப்புரத்திலிருந்து 24 கி.மீ. திருவண்ணாமலையிலிருந்து 33 கி.மீ. திருக் கோயிலூருக்கு 10 கி.மீ. பண்ருட்டிக்கு 33 கி.மீ. தொலைவில். விழுப்புரத்திலிருந்து அரசூர் கூட்ரோடு வழி திருக்கோயிலூர் சாலையில் சித்தலிங்கமடத்தின் அருகில்.

226. அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : நடு நாடு - 14 வது
இறைவன் : வேணுபுரீஸ்வரர்/தடுத்தாட்கொண்டநாதர்/அருட்டுறைநாதர்
இறைவி : வேண்கண்ணியம்மை / மங்களாம்பிகை
தல தீர்த்தம் : தண்ட தீர்த்தம்
தல விருட்சம் : மூங்கில்
புராணப் பெயர்: வெண்ணெய்நல்லூர்

சுந்தரர் பாடிய முதல் தலம்

இறைவி வெண்ணெயால் கோட்டை அமைத்து வழிபட்டது. சுந்தரரை ஓலை ஆவணம் காட்டி தடுத்தாட்கொண்டருளிய தலம். மெய்கண்டதேவர் எழுந்தருளிய தலம். சிவன் விட்டுச்சென்ற காலணி பாதுகைகள்.பித்தா பிறைசூடி என்று சுந்தரர் முதற்பதிகம் பாடிய தலம். அர்ச்சுணன், விஷ்ணு, இந்திரன் பூசித்த லிங்கங்கள். பஞ்சாயத்து மண்டபம். தாருகாவன முனிவர்களுக்கு அருள் புரிந்த அருள்துறை. தர்மதேவதை நந்தியாக. பொல்லாப்பிள்ளையார் சிறப்பு.

அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் திருக்
கோயில், திருவெண்ணெய்நல்லூர்,
திருக்கோயிலூர் வட்டம் - 607 203,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04153 - 234548, 99942 70882

சென்னையிலிருந்து 180 கி.மீ., திருச்சியிலிருந்து 150 கி.மீ., மதுரையிலிருந்து 280 கி.மீ., முண்டிச்சரத்திலிருந்து 5 கி.மீ. திருக்கோயிலூருக்கு 25 கி.மீ. பண்ருட்டிக்கு 29 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 19 கி.மீ. தொலைவில். விழுப்புரத்திலிருந்து அரசூர் கூட் ரோடு வழியே திருக்கோயிலூர் சாலையில் முண்டீச்சரத்திற்கு அடுத்துள்ளது.

227. அருள்மிகு சிஷ்டகுருநாதேஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : நடு நாடு -15 வது
இறைவன் : சிஷ்டகுருநாதேஸ்வரர் / பசுபதீஸ்வரர்
இறைவி : சிவலோகநாயகி / பூங்கோதைநாயகி
தல தீர்த்தம் : சூரிய தீர்த்தம்
தல விருட்சம் : கொன்றை
புராணப் பெயர்: துறையூர்


சுந்தரர்

சிவபெருமான் சுந்தரருக்கு குருவாக இருந்து தவநெறி உபதேசம் செய்த தலம். சித்திரை முதல் வாரம் மாலையில் சூரிய பூஜை. நந்திக்கொடி கட்டி பிரதோஷம் நடைபெறுவது சிறப்பானது. செங்கோல் வைத்துள்ள சுந்தரர். நால்வர் மண்டபத் தூணில் சுந்தரர் ஆற்றைக் கடந்துவந்த காட்சி. கோயில் எதிரே தடுத்தாட்கொண்டீஸ்வரர், அஷ்டபுஜகாளி,மெய்கண்டநாயனார் சீடர் அருணநந்தி சிவாச்சாரியார் முக்தி. வாம தேவ முகமாக அம்பாள். குரு தலமாகும்.

அருள்மிகு பசுபதீஸ்வரர்
திருக்கோயில், திருத்துறையூர் அஞ்சல்,
பண்ரூட்டி வட்டம் - - 607 205,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04142-248498, 94448 07393

சென்னையிலிருந்து 200 கி.மீ., திருச்சியிலிருந்து 150 கி.மீ., மதுரையிலிருந்து 280 கி.மீ., கடலூரிலிருந்து 31 கி.மீ. திருக்கோயிலூருக்கு 47 கி.மீ. புதுச்சேரியிலிருந்து 48 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 21 கி.மீ. தொலைவில். பண்ருட்டியிலிருந்து புதுப்பேட்டை வழியே அரசூர் சாலையில் 15 கி.மீ. சென்று கரும்பூர் சாலை வழி சென்றால் 5 கி.மீ.ல்

228. அருள்மிகு வடுகீஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : நடு நாடு - 16 வது
இறைவன் : வடுகீஸ்வரர் / வடுகநாதர் / வடுகூர்நாதர்
இறைவி : வடுவகிர்க்கண்ணி / திரிபுரசுந்தரி
தல தீர்த்தம் : வாமதேவ தீர்த்தம்
தல விருட்சம் : வன்னி
புராணப் பெயர்: வடுகூர்


சம்பந்தர்

அஷ்டபைரவர்களுள் ஒருவரான வடுக பைரவர் முண்டகன் எனும் அசுரனை அழித்த பாவம் தீர வழிபட்ட தலம். ராஜபலன்கள் தரும் 8 தூண்கள் உடைய அர்த்தமண்டபம். லட்சுமி அம்சத்தில் அம்பாள். பிரகாரத்தில் தனிச்சன்னதியில் பைரவர். அஷ்டமி பூஜை மிகச் சிறப்பானது. திருப்புகழ் திருத்தலம். அஷ்டபுஜ துர்க்கை. இரு நாகத்திற்கு இடையில் நின்ற நிலையில் கிருஷ்ணர். லிங்கத்தின் மீது வடுக்கள். இறைவனுக்கு தலைப்பாகை அணிவித்துள்ளனர்.

அருள்மிகு வடுகீஸ்வரர் திருக்கோயில்
திருவாண்டார்கோயில் - 605 102,
கண்டமங்கலம் வழி,
புதுச்சேரி மாநிலம்.
: 99941 90417, 93446 68180

சென்னையிலிருந்து 180 கி.மீ., திருச்சியிலிருந்து 170 கி.மீ., மதுரையிலிருந்து 300 கி.மீ., புதுச்சேரியிலிருந்து 21 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில். பண்ருட்டியிலிருந்து 32 கி.மீ. விழுப்புரம்-பாண்டி சாலையில் கோலியனூர், வளவனூர் கண்டமங்கலம் கடந்து கோயில். பாண்டி-விழுப்புரம் சாலையில் கரும்பூர் கடந்து.

229. அருள்மிகு வாமனபுரீஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர்

அமைவிடம் : நடு நாடு -17 வது
இறைவன் : வாமனபுரீஸ்வரர் / உதவிநாயகர் / மாணிக்கவரதர்
இறைவி : அம்புஜாட்சி / உதவிநாயகி / மாணிக்கவல்லி
தல தீர்த்தம் : சுவேதம், கெடிலம் தீர்த்தங்கள்
தல விருட்சம் : கொன்றை
புராணப் பெயர்: மாணிகுழி (மாணி = பிரம்மசாரி)

மகாபலியை வதம் செய்த திருமால், பழிதீர வழிபட்டு சாப விமோசனம் பெற்ற தலம் ஆதலால் மாணிகுழி. தேவர்களுக்கு ஞானத்தைப் புகட்ட அம்பாளுடன் இணைந்து அருள்புரியும் தலம். கர்ப்பகிரகமே பள்ளியறையாகவும் உள்ளது. 11 ருத்ரர்களில் ஒருவரான பீமருத்திரர் திரைச்சீலை வடிவில். அவருக்கே முதல் அர்ச்சனை. பிறகு ஓரிரு விநாடிகள் மட்டுமே இறைவன் தரிசனம். விநாயகர் அருகில் மூஷிகம். எருமை தலையின்றி, கதாயுதத்துடன் துர்க்கை.....

அருள்மிகு வாமனபுரீஸ்வரர்
திருக்கோயில், திருமாணிகுழி அஞ்சல்,
திருவகீந்திபுரம் வழி - 607 401,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04142 - 274485, 99420 94516

சென்னையிலிருந்து 218 கி.மீ., திருச்சியிலிருந்து 146 கி.மீ., மதுரையிலிருந்து 280 கி.மீ., புதுச்சேரியிலிருந்து 30 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 40 கி.மீ. கடலூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில். கடலூர்-திருவகீந்திபுரம்-பண்ருட்டி செல்லும் சாலையில் சாத்தாங் குப்பம் வழியாக கெடிலநதி பாலம் கடந்து சென்று கோயிலை அடையலாம்.

230. அருள்மிகு பாடலேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : நடு நாடு - 18 வது
இறைவன் : சிவக்கொழுந்தீசர் / தோன்றாத்துணைநாதர்
இறைவி : அருந்தவநாயகி / தோகையம்மை / பெரியநாயகி
தல தீர்த்தம் : சிவகரம், பிரம (கடல்) தீர்த்தங்கள்
தல விருட்சம் : பாதிரி மரம் (பாடலம்)
புராணப் பெயர்: பாதிரிப்புலியூர்

புலிக்கால் முனிவர் பேறு பெற்ற தலம். பஞ்சபுலியூர் தலங்களுள் ஒன்று. இறைவி பள்ளியறைக்கு எழுந்தருளும் சிறப்பு கொண்ட தலம். இறைவி அரூபமாக இருந்து பூசித்த தலம். மகேந்திரவர்மனால் கல்லால் கட்டிக் கடலில் வீசப்பட்ட அப்பர் பதிகம் பாடி கரையேறிய தலம். அகத்தியர் வழிபட்ட தலம்.கையில் பாதிரி மலர்களோடு கன்னி விநாயகர். அப்பர் அமர்ந்த நிலையில் உழவாரத்துடன். சம்பந்தர், நாவுக்கரசரை அப்பர் என்று அழைத்த தலம்...

அருள்மிகு பாடலேஸ்வரர் திருக்
கோயில், திருப்பாதிரிபுலியூர் அஞ்சல் -
607 002, கடலூர் வட்டம்,
கடலூர் மாவட்டம், தமிழ்நாடு.
: 04142 - 236728,98949 27573

சென்னையிலிருந்து 183 கி.மீ., திருச்சியிலிருந்து 184 கி.மீ., மதுரையிலிருந்து 310 கி.மீ., புதுச்சேரியிலிருந்து 22 கி.மீ. திண்டிவனத்திலிருந்து 65 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 42 கி.மீ. சிதம்பரத்திலிருந்து 44 கி.மீ. தொலைவில். பேருந்து நிலையத்திற்கு அருகில். கடலூர் இரயில் நிலையம்.

231. அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயில்

அமைவிடம் : நடு நாடு –19 வது
இறைவன் : சிவலோகநாதர் / முடீஸ்வரர் / முண்டீசர்
இறைவி : கானார்குழலி / செல்வநாயகி / சௌந்தர்யநாயகி
தல தீர்த்தம் : பிரம, முண்டக தீர்த்தங்கள்
தல விருட்சம் : வன்னி மரம்
புராணப் பெயர்: முண்டீச்சரம்


அப்பர்

ரிஷப வாகனத்தில் தெட்சிணாமூர்த்தி. பிரம்மா, இந்திரன் வழிபட்ட தலம். விநாயகர், முருகன் இடம் மாறிய அமைப்பில். முருகன் இடது கையில் நாராச முத்திரையுடன். மன்னன் தாமரை மலர்மீது தொடுத்த அம்பினால் ஏற்பட்ட தழும்பு லிங்கத்தில் உள்ளது. திண்டி, முண்டி வழிபட்டது. வீரபாண்டிய மன்னனுக்கு இறைவன் திருநீற்றுப்பை வழங்கிய தலம். பொக்களம் கொடுத்த நாயனார் என்றும் பெயர். மவுலி (முடி) கிராமம் காலப்போக்கில் கிராமம் ஆயிற்று

அருள்மிகு சிவலோகநாதர்
திருக்கோயில், கிராமம் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை வழி – 607 203,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04146 – 206700, 98946 25154

சென்னையிலிருந்து 175 கி.மீ., திருச்சியிலிருந்து 135 கி.மீ., மதுரையிலிருந்து 285 கி.மீ., புதுச்சேரியிலிருந்து 57 கி.மீ. திருவெண்ணெய்நல்லூரிலிருந்து 5 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 18 கி.மீ. திருக்கோயிலூருக்கு 30கி.மீ. பண்ருட்டிக்கு 25 கி.மீ. தொலைவில். விழுப்புரம்–அரசூர் கூட் ரோடு வழி திருக்கோயிலூர் சாலையில்.

232. அருள்மிகு பனங்காட்டீஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : நடு நாடு – 20 வது
இறைவன் : பனங்காட்டீஸ்வரர்
இறைவி : சத்யாம்பிகை / புறவம்மை
தல தீர்த்தம் : பத்ம தீர்த்தம்
தல விருட்சம் : பனை மரம்
புராணப் பெயர்: புறவார் பனங்காட்டூர் (புறவு = சோலை)


சம்பந்தர்

சித்திரையில் முதல் ஏழு நாட்கள் சுவாமி, அம்பாள் மீது சூரிய கதிர்கள் விழும் சிறப்பு. திருநீலகண்டர் தன் மனைவியுடன் தண்டினைப் பிடித்தவாறு கைகூப்பித் தொழும் காட்சி. ஒளியிழந்த சூரியன் இறைவனை வேண்டி தனது இழந்த சக்தியைப் பெற்ற தலம். பனையைத் தலமரமாகக் கொண்ட ஐந்து தலங்களுள் ஒன்று. சிபிசக்கரவர்த்திக்கு இறைவன் காட்சியளித்த தலம். கல்வெட்டுக்களில் திருப்பனங்காட்டுடைய மகாதேவர் என்று போற்றப்படுகிறார்.

அருள்மிகு பனங்காட்டீஸ்வரர்
திருக்கோயில், பனயபுரம் அஞ்சல் –
605 603, முண்டியம்பாக்கம் வழி,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 94448 97861

சென்னையிலிருந்து 148 கி.மீ., திருச்சியிலிருந்து 157 கி.மீ., மதுரையிலிருந்து 287 கி.மீ., புதுச்சேரியிலிருந்து 37 கி.மீ. விக்ரவாண்டியிலிருந்து 4 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 13 கி.மீ. பண்ருட்டிக்கு 27 கி.மீ. தொலைவில். விக்கிரவாண்டி – தஞ்சாவூர் சாலையில் 4 கி.மீ. தொலைவில் விழுப்புரம் புறவழிச்சாலையில்.

233. அருள்மிகு அபிராமேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர் சுந்தரர்

அமைவிடம் : நடு நாடு –21 வது
இறைவன் : அபிராமேஸ்வரர் / அழகியநாதர்
இறைவி : முக்தாம்பிகை / அழகியநாயகி
தல தீர்த்தம் : ஆம்பலப்பொய்கை தீர்த்தம்
தல விருட்சம் : வன்னி, கொன்றை மரங்கள்
புராணப் பெயர்: ஆமாத்தூர் (ஆ = பசு)

ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த முக்தாம்பிகை. பசுக்கள் இறைவனை வேண்டி கொம்புகள் பெற்ற தலம். பசுக்களின் தாய் ஊர் என்ற பெருமைக்குரிய தலம். இராமன் இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்கிட வழிபட்ட தலம். சிவனின் தலையில் பசுவின் கால் குழும்பு. விநாயகர், முருகன், அகத்தியர், வசிஷ்டர், துர்வாசர், விசுவாமித்திரர், பிருகு, மதங்க முனி, உரோமரிஷி, வியாசர், இராமர், சீதை, இலட்சுமணன் முதலியோர் வழிபட்ட தலம்..

அருள்மிகு அபிராமேஸ்வரர்
திருக்கோயில், திருவாமாத்தூர் அஞ்சல்,
விழுப்புரம் வட்டம் – 605 602,
விழுப்புரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 04146 – 223319

சென்னையிலிருந்து 168 கி.மீ., திருச்சியிலிருந்து 158 கி.மீ., மதுரையிலிருந்து 288 கி.மீ., விக்ரவாண்டியிலிருந்து 15 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 7 கி.மீ. பண்ருட்டிக்கு 30 கி.மீ. தொலைவில். விழுப்புரத்தில் திருவண்ணாமலை இரயில்வே கேட் ஓரம், செஞ்சி சாலை 2 கி.மீ. செல்ல திருவாமாத்தூர் கைகாட்டியிலிருந்து 5 கி.மீ. தொலைவில்.

234. அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில்



சம்பந்தர் அப்பர்

அமைவிடம் : நடு நாடு – 22 வது
இறைவன் : அண்ணாமலையார் / அருணாச்சலேஸ்வரர்
இறைவி : அபிதகுஜாம்பாள் / உண்ணாமுலை
தல தீர்த்தம் : பிரம தீர்த்தம்
தல விருட்சம் : மகிழ மரம்
புராணப் பெயர்: அண்ணாமலை

பஞ்சபூதத் தலங்களுள் அக்னி தலம். நினைத்தாலே முக்தி தரும் தலம். கிரிவலம் வரும் சிறப்புடைய தலம். லிங்கோத்பவர் தோன்றிய தலம். அருணகிரிநாதர் முக்தி தலம். 51 சக்தி பீடங்களுள் அருணை சக்தி பீடம். விநாயகரின் முதல் படைவீடு. சிவனின் அடி, முடி காண இயலாத மலை. சிவனே மலையாக இருப்பது. காந்த சக்தி உள்ள மலை. கார்த்திகை தீபம். 9 கோபுரம், 6 பிரகாரம், 22 விநாயகர், 142 சன்னதி, 306 மண்டபம், ஆயிரங்கால் மண்டபம்...

அருள்மிகு அருணாச்சலேஸ்வரர்
திருக்கோயில், திருவண்ணாமலை
அஞ்சல் – 606 601,
திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு.
: 04175 – 252438

சென்னையிலிருந்து 187 கி.மீ., திருச்சியிலிருந்து 185 கி.மீ., மதுரையிலிருந்து 310 கி.மீ., வந்தவாசியிலிருந்து 79 கி.மீ. விழுப்புரத்திலிருந்து 62 கி.மீ. காஞ்சிபுரத்திலிருந்து 120 கி.மீ. தொலைவில். பேருந்து நிலையத்திற்கு அருகில். திருவண்ணாமலை இரயில் நிலையம்.

235. அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : தொண்டை நாடு – 1 வது
இறைவன் : ஏகாம்பரேஸ்வரர் / ஏகாம்பரநாதர்
இறைவி : காமாட்சி / ஏலவார்குழலி
தல தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
தல விருட்சம் : மாமரம்
புராணப் பெயர்: கச்சி ஏகம்பம்

பஞ்சபூதத் தலங்களுள் நிலத்திற்குரியது. அம்பாள் மணலால் உருவாக்கி பூஜித்த லிங்கம். அம்பிகை கட்டியணைத்த தடம் இறைவன் மீது. சுந்தரருக்கு இடக்கண் பார்வை அருளிய தலம். இனிப்பு,புளிப்பு,துவர்ப்பு,கார்ப்பு சுவைகளைக் கொண்ட கனியருளும் 3500 ஆண்டுகள் பழமையான 4 கிளைகளை 4 வேதங்களாகக் கொண்ட மாமரம் . தை ரதசப்தமியில் சூரிய பூஜை. திவ்யதேசத்துள் ஒன்றான நிலாத்துண்ட பெருமாள். 5008 ருத்ராட்ச பந்தல்....

அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர்
திருக்கோயில்,
காஞ்சிபுரம் அஞ்சல் – 631 502,
காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 044 – 27222084

சென்னையிலிருந்து 75 கி.மீ., திருச்சியிலிருந்து 300 கி.மீ., மதுரையிலிருந்து 470 கி.மீ., வேலூரிலிருந்து 80 கி.மீ. பூவிருந்தமல்லியிலிருந்து 50 கி.மீ. செங்கல்பட்டி லிருந்து 39 கி.மீ. தொலைவில். காஞ்சி பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. சென்னை விமான நிலையம். காஞ்சிபுரம் இரயில் நிலையம். சங்கர மடம் வழி.

236. அருள்மிகு திருமேற்றளீஸ்வரர் திருக்கோயில்



அமைவிடம் : தொண்டை நாடு – 2 வது
இறைவன் : திருமேற்றளீஸ்வரர் / திருமேற்றளிநாதர்
இறைவி : திருமேற்றளிநாயகி
தல தீர்த்தம் : சிவகங்கை தீர்த்தம்
தல விருட்சம் : மாமரம்
புராணப் பெயர்: கச்சி மேற்றளி

விஷ்ணு லிங்கவடிவம் வேண்டி தவமிருந்து அவ்வாறே அருள்பெற்ற தலம். இரண்டு மூலஸ்தானம். நூறு ருத்திரர்கள்,சீகண்டர்,வீரபத்திரர்,குரோதர்,மண்டலாதிபதிகள் 116 பேர்கள், புதன் வழிபட்ட தலம். தனிச்சன்னதியில் பராசக்தி. வணங்கிய கோலத்தில் சம்பந்தர். லிங்கத்தின் முன்பு விஷ்ணுவின் பாதம் மட்டும் நிற்பதை இன்றும் காணலாம். சம்பந்தர் பாடலைக் கேட்டு உருகிய மகாவிஷ்ணு சிவசாரூபம் பெற்ற தலம். ஓத உருகீஸ்வரர் என்றுப் பெயர்.

அருள்மிகு திருமேற்றளீஸ்வரர்
திருக்கோயில், திருமேற்றளி தெரு,
பிள்ளையார்பாளையம் – 631 501,
காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 98653 55572

சென்னையிலிருந்து 77 கி.மீ., திருச்சியிலிருந்து 300 கி.மீ., மதுரையிலிருந்து 470 கி.மீ., வேலூரிலிருந்து 82 கி.மீ. பூவிருந்தமல்லியிலிருந்து 52 கி.மீ. செங்கல்பட்டி லிருந்து 39 கி.மீ. தொலைவில். காஞ்சி பேருந்து நிலையத்திற்கு 2 கி.மீ. ல் எஸ்.வி. என் தெரு, கிருஷ்ணன் தெரு வர திருமேற்றளி. பிள்ளையார்பாளையம் பகுதியில்.

237. அருள்மிகு ஓணகாந்தேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : தொண்டை நாடு - 3 வது
இறைவன் : ஓணகாந்தேஸ்வரர் / சலந்தரேஸ்வரர்
இறைவி : காமாட்சி
தல தீர்த்தம் : ஓணகாந்த, தான்தோன்றி தீர்த்தங்கள்
தல விருட்சம் : வன்னி, புளிய மரங்கள்
புராணப் பெயர்: ஓணகாந்தன் தளி

வாணாசுரன் சேனாதிபதிகள் ஓணன்,காந்தன் வழிபட்ட தலம். சுந்தரர் பதிகம் பாடி பொன் பெற்ற தலம். மூன்று கருவரை, மூன்று சிவலிங்கங்கள். வயிறுதாரி விநாயகர். ஓம் என ஒலிக்கும் ஓங்கார விநாயகர். சுந்தரர் தனது 5வது பதிகம் பாடும்போது இறைவன் புளிய மரத்தினுள் மறைந்து கொண்டார். பிறகு சுந்தரர் அங்குச் சென்று பதிகம் பாடவே, இறைவன் புளியங்காய்களைப் பொன்னாக மாற்றி, உதிர்த்து அருளிய தலம்.

அருள்மிகு ஓணகாந்தேஸ்வரர் திருக்கோயில், பஞ்சுப்பேட்டை, காஞ்சிபுரம் - 631 502, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 0 98944 43108

சென்னையிலிருந்து 75 கி.மீ., திருச்சியிலிருந்து 300 கி.மீ., மதுரையிலிருந்து 470 கி.மீ., வேலூரிலிருந்து 80 கி.மீ. பூவிருந்தமல்லியிலிருந்து 52 கி.மீ. செங்கல்பட்டி லிருந்து 39 கி.மீ. தொலைவில். காஞ்சி பேருந்து நிலையத்திற்கு 2 கி.மீ. இராஜ வீதி , சங்கர மடம் வழியே அரக்கோணம் சாலையில் திரும்பி மின்நிலையத்திற்கு அருகில்.

238. அருள்மிகு அநேகதங்காவதேஸ்வரர் திருக்கோயில்


சுந்தரர்

அமைவிடம் : தொண்டை நாடு - 4 வது
இறைவன் : அநேகதங்காவதேஸ்வரர்
இறைவி : காமாட்சி
தல தீர்த்தம் : தாணு தீர்த்தம்
தல விருட்சம் : வில்வ மரம்
புராணப் பெயர்: கச்சி அனேகதங்காவதம்

அநேகதம் = யானை. இரணிய அசுரனான கேசி கடத்திச் சென்ற வல்லபையை மீட்க போருக்கு போகும் முன்பு விநாயகர் பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலமாதலால் அநேகதங்காவதேஸ்வரர் என்று பெயர். விநாயகருக்கு அநேகதங்காவதர் என்று பெயர். குபேரன், சுக்கிரன் வழிபட்ட தலம். சிவன், அம்பாள் இருவரும் வல்லபையை விநாயகருக்கு திருமணம் செய்த தலம். தனிச்சன்னதியில் பெரிய மூர்த்தியாக விநாயகர்.ஏக பிரகாரமுடைய கோயில்.

அருள்மிகு அநேகதங்காவதேஸ்வரர் திருக்கோயில், பிள்ளையார்பாளையம் - 631 501, கைலாசநாதர் கோயில் அருகில் காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
: 044 - 27223948

சென்னையிலிருந்து 77 கி.மீ., திருச்சியிலிருந்து 300 கி.மீ., மதுரையிலிருந்து 470 கி.மீ., வேலூரிலிருந்து 82 கி.மீ. பூவிருந்தமல்லியிலிருந்து 52 கி.மீ. செங்கல்பட்டி லிருந்து 39 கி.மீ. தொலைவில். காஞ்சி பேருந்து நிலையத்திற்கு 2 கி.மீ. ல் இராஜவீதி, எஸ்.வி.என் தெரு வழி எஸ்எஸ்கேவி ஆண்கள் பள்ளியருகே உள்ளடங்கிய கோயில்.

239. அருள்மிகு சத்தியவிரதேஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : தொண்டை நாடு - 5 வது
இறைவன் : சத்தியவிரதேஸ்வரர்/காரைத்திருநாதர்/திருக்காலீஸ்வரர்
இறைவி : பிரமராம்பிகை
தல தீர்த்தம் : இந்திர தீர்த்தம்
தல விருட்சம் : காரைச்செடி
புராணப் பெயர்: கச்சிநெறிக் காரைக்காடு

கருவறையில் சுவாமிக்கு அருகில் உற்சவ வடிவில் அம்பாள். அம்பாள் உற்சவம் கிடையாது. 7 சீர்களுடன் தெட்சிணாமூர்த்தி. புதனுக்கு கிரகப்பதவி அளித்த தலம். காரைச்செடிகள் நிறைந்த இடத்தில் இந்திரன் வழிபட்டு காட்சியளித்ததால் காரைக்காடு. இந்திரன் வழிபட்டதால் இந்திரபுரி என்றும் பெயர். சத்தியநாதசுவாமி செம்மேனியாக காட்சி தருகின்றார். ஞானக்காரகனாக விளங்கும் புதனை இத்தலத்தில் வழி பட்டால் தோஷங்கள் நீங்கும்.

அருள்மிகு சத்தியவிரதேஸ்வரர்
திருக்கோயில், திருக்காலிமேடு,
காஞ்சிபுரம் - 631 501,
காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.
☎ : 044-27232327, 27221664

சென்னையிலிருந்து 77 கி.மீ., திருச்சியிலிருந்து 300 கி.மீ., மதுரையிலிருந்து 470 கி.மீ., வேலூரிலிருந்து 82 கி.மீ. பூவிருந்தமல்லியிலிருந்து 52 கி.மீ. செங்கல்பட்டி விருந்து 39 கி.மீ. தொலைவில். காஞ்சி பேருந்து நிலையத்திற்கு 2 கி.மீ. பேருந்து நிலையம் பின்புற வழி இரயில்வேரோடு வந்து திருக்காலிமேடு செல்லும் சாலையில்.

240. அருள்மிகு வாலீஸ்வரர் திருக்கோயில்


சம்பந்தர்

அமைவிடம் : தொண்டை நாடு - 6 வது
இறைவன் : வாலீஸ்வரர் / கொய்யாமலைநாதர்
இறைவி : இறையார் வளையம்மை
தல தீர்த்தம் : காக்கைத் தீர்த்தம்
தல விருட்சம் : இலந்தை மரம்
புராணப் பெயர்: குரங்கணில் முட்டம்

வாலி குரங்கு வடிவிலும், இந்திரன் அணில் வடிவிலும், எமன் காக (முட்டம்) வடிவிலும் வழிபட்ட தலமாதலால் குரங்கணில்முட்டம் என்று பெயர். சித்திரையில் சூரிய பூஜை. அணில்,காகம் வழிபடும் சிற்பம். ஆவுடையார் மீது தாமரைப்பீடத்தில் விநாயகர். பிர யோகச் சக்கரத்துடன் விஷ்ணு துர்க்கை. மரத்தை உலுக்கி கொய்யாத மலரால் பூசித்தார் வாலி. வளையல் அணிந்த அம்பாள்.முக்திதரும் தலம் என சம்பந்தர் பாடியுள்ளார். கரும்புச்சாறு அபிஷேகம்.

அருள்மிகு வாலீஸ்வரர்
